கல்கி

KALKI
25.3.2001
ரூ. 5.00

தேர்தல்
ஸ்பெஷல் -1





'சிதம்பர'
ரகசியங்கள்!

வென்றார்
வைகோ!

நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு கொடுக்கக்கூடிய சிறந்த அன்பளிப்பு - நாளைய பாதுகாப்பு



குழந்தைகளுக்கான எல்ஐசியின் பாலிசிகள்

வாழ்நாள் முழுவதும் பயன்படும் ஒரு அன்பளிப்பை உங்கள் குழந்தைக்கு கொடுங்கள். உங்கள் குழந்தைக்கு சரியான நேரத்தில் சரியான விதத்தில் ஆதரவு அளிக்கும் எங்களின் பாலிசிகளில் ஒன்றை தேர்ந்தெடுங்கள்.

திட்டம்	அட்டவணை எண்	குழந்தையின் வயது (ஆண்டுகள்)	குறைந்தபட்ச காப்பீட்டுத் தொகை	பிரீமியம் செலுத்தும் விதம்
குழந்தைகளுக்கான ஒத்திவைக்கப்பட்ட காப்பீடு (லாபத்துடன்)	41 50	0-17 0-14	20,000/-	ஆண்டு அரை ஆண்டு காலாண்டு மாதாந்திரம்
ஜீவன் பால்யா (லாபத்துடன்)	101	0-17	25,000/-	-do-
ஜீவன் கிஷோர் (லாபத்துடன்)	102	1-12	20,000/-	-d0-
ஜீவன் சுகன்யா (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) (லாபத்துடன்)	109	1-12	20,000/-	-do-
மணிபேக் சில்ட்ரன்ஸ் அஷ்யூரன்ஸ் பிளான் (லாபமற்றது)	113	0-10	40,000/-	ஆண்டு அரை ஆண்டு காலாண்டு சம்பள சேமிப்பு திட்டம்
பால் வித்யா (லாபமற்றது)	135	0-12	25,000/-	ஒரே தவணை

கூடுதல் விபரங்களுக்கு, உங்களுக்கு அருகிலுள்ள எல்ஐசி கிளை அல்லது முகவரை தொடர்பு கொள்ளவும்.

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா
Please visit www.licindia.com

Insurance is the subject matter of the solicitation.

Mode-Mum/LIC/22R/Tam



ஆதித்யா ஹோட்டலின் மூன்றாவது தளம். அறைக்கதவு திறந்தே இருக்கிறது. திரைச்சீலை விலக்கப்பட்ட ஜன்னல். அதன்வழியே அறைக்குள் கசியும் மாலைச் சூரியனின் மஞ்சள் வெளிச்சம். ஜன்னலை ஒட்டிய சின்ன டேபிளில் எதையோ எழுதிக் கொண்டிருக்கிறார் அந்தப் பெண்மணி. முகம் பார்க்க விரும்பி திறந்திருந்த கதவை 'டொக்'கியதும் டக்கென்று திரும்பிப் பார்க்கிறார். அட! வானவில்! அதாவது வானவில் படத்தின் அறிமுக நாயகி அபிராமி.

"வாங்க... வாங்க" என்று தெளிவான தமிழில், குறிப்பாக குயில் குரலில் சோபாவைக்காட்டுகிறார். ஏதோ எழுதிக் கொண்டு இருந்தீர்களே?

"ஹாபி... தனியாக இருக்கும்போது கவிதை மாதிரி கிறுக்குவேன்" ஓ... அபிராமியின் கிறுக்கல்களா? பார்க்க அனுமதி உண்டா?

''ஷ்யூர்'' சொல்லியபடியே டேபிள் நோக்கி நடந்து காகிதங்களோடு திரும்பி வந்தார். அதுவே வார்த்தை சிக்னம் மிக்க ஒரு சின்னக் கவிதையைப் போல நளினமாய் இருந்தது.



கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkiweekly.com
ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

'என் ஹீரோ ஜோதி பாசு!'

"will my will possible
soon
when my wings carry
me moon
walking on clouds
evening play
rainbow colours steal
me every day"



முற்றுப்பெறாத வரிகளில் அபிராமியைப் போலவே அழகியல் அதிகம். நீங்கள் தமிழ்ப்பெண் என்று சொன்னார்கள். கவிதையை ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறீர்களே?

"எனக்குச் சொந்த ஊர் கும்பகோணம். பிறந்தது, வளர்ந்தது எல்லாம் திருவனந்தபுரத்தில். வீட்டில் எல்லோரும் தமிழ்தான் பேசுவோம். ஆனால் தமிழ் எழுதப் படிக்கத் தெரியாது. செகண்ட் லாங்குவேஜ் மலையாளம்தான் படித்தேன். இனிமேல்தான் தாத்தாவிடம் கற்றுக் கொள்ளப் போகிறேன். அவர் தமிழில் நிறைய மரபுக் கவிதைகள் எழுதியிருக்கார் தெரியுமா?'' என்றவரை மடக்கினோம். கும்பகோணத்தைப் பின்னணியாகக் கொண்ட குடும்பத்தில், சினிமாவில் நடிக்க எப்படி அனுமதி கொடுத்தார்கள்?

– அபிராமி

"எனக்குச் சினிமா மோகம் வர காரணம் இயக்குனர் அடூர் கோபாலகிருஷ்ணன்தான். நான் எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது அவரோட படத்தில் சின்ன ரோல் என்று கூப்பிட்டு நடிக்க வைத்தார். முதல் படமே விருது வாங்கியது. அப்போதெல்லாம் அடூர் சார்– இவ்ளோ பெரிய இயக்குனர் என்று எனக்குத் தெரியாது. அவர் படத்தில்தான் நான் அறிமுகமாகியிருக்கேன்னு இப்போது நினைக்கவே சந்தோஷமாக இருக்கிறது."

பிறகு எப்போது ஹீரோயின் அவதாரம் எடுத்தீர்கள் அபிராமி.

"அதற்குப் பிறகு சினிமாவையே மறந்துவிட்டேன். பத்தாவது முடித்துவிட்டு, ஏசியா நெட் டி.வியில் கவுண்ட் டவுன் ஷோவை காம்பியர் செய்துகிட்டு இருந்தேன். திடீரென்று ஒரு நாள் 'சுரேஷ் கோபிக்கு ஜோடியாக நடிக்க விருப்பமா?' என்று கேட்டதும் தலைகால் புரியவில்லை. அடம் பிடிச்சு அப்பா அம்மாவிடம் அனுமதி வாங்கினேன். ஆனால் தாத்தா சுப்ரமண்யம் பெரிய வில்லனாக வந்தார். அவரை ஷூட்டிங் ஸ்பாட்டுக்கு அழைத்துப் போய் இதுதான் சினிமா என்று காட்டிய பிறகுதான் காம்ப்ரமைஸ் ஆனார். அந்தப் படம் 'பத்ரம்'. அதற்குப் பிறகு ஜெயராம், மோகன்லால் என்று முன்னணி ஹீரோக்களோடு நடித்துவிட்டேன்."



"கமலின் 'குணா' படம் பார்த்துதான் என் பெயரை அபிராமி என்று மாற்றினேன்!"

இப்போது மலையாளத்தை மறந்துவிட்டீர்கள் அப்படித்தானே?

"முடியவே முடியாது... நான் எந்த மொழிக்குப் போனாலும் என்னை வளர்த்த தாய்வீடு அது. இப்போது கூட இயக்குனர் அசோகன் எடுத்துக் கொண்டிருக்கும் கலைப் படத்தில் நான்தான் ஹீரோயின். இது தவிர மூன்று மெயின் ஸ்ட்ரீம் படங்களிலும் நடித்துக் கொண்டிருக்கிறேன்."

மலையாளத்தில் ரசிகர்கள் எப்படி? கோயில்கட்டி கும்பாபிஷேகம் செய்வதெல்லாம் உண்டா?

"அங்கே ஷூட்டிங் பார்க்கவே ஆள் இருக்காது. ஆட்டோகிராப் வாங்குவதோடு நிறுத்திக் கொள்வார்கள். மம்முட்டி, மோகன்லால் மாதிரியான சூப்பர் ஸ்டார்களுக்குக் கூட்டம் கூடிவிடும்."

தமிழ் நன்றாகப் பேசுகிறீர்கள், கவிதை வேறு எழுதுகிறீர்கள், வரும் தேர்தலில் ஏதாவதொரு கட்சிக்குப் பிரசாரம் செய்ய வேண்டியதுதானே?

"அய்யோ... அரசியல் பேசப் பிடிக்கும்... ஆனால் அரசியல் பிடிக்காது... ஏன்னா அங்கே நல்லவங்க கொஞ்சம் பேருதான் இருக்காங்க... நம்ம ஜோதிபாசு சார் மாதிரி! என்னோட ஃபேவரைட் ஹீரோ யாரென்று கேட்டால் முதலில் அவரைத்தான் சொல்லுவேன். ஹீ ஈஸ் ய ரெட்கலர்டு லெஜண்டு."

'அப்படிப் போடுங்க அபிராமி' என்று சொல்ல நினைத்து அடுத்த கேள்விக்குத் தாவினோம்.

சினிமா ஓகே. அரசியல் வேண்டாம், சரி கவிதைதான் எதிர்காலத்திட்டமா?

"கவிதையில் பெரிய அளவில் சாதிக்க வேண்டும் என்றெல்லாம் லட்சியமில்லை.

குறைந்தது சச்சிதானந்தன் கவிதைகள் மாதிரி தரமா பத்து கவிதையாவது எழுத வேண்டும் என்று ஆசை. அதனால் எழுதி எழுதி கிழித்து விடுகிறேன். கைவசம் தேறியிருக்கும் கவிதைகள் இருபத்தைந்து தான். இன்னும் இருபத்தைந்து சேர்ந்த பிறகு ஒரு புத்தகமாகப் போடுவேன். இலட்சியமெல்லாம் டைரக்ஷனுக்கு வரவேண்டும் என்பதுதான். ப்ளஸ்டு முடிச்ச பிறகு 'ஷெரிடன்' பிலிம் ஸ்கூலில் படிக்கப் போவதாகத்தான் அப்பாவுக்கும் எனக்கும் அக்ரீமெண்ட். அதற்குள் ஹீரோயின் ஆகிவிட்டேன்.''

தமிழ் சினிமா, இந்திய சினிமா, உலக சினிமா எல்லா சினிமாக்களிலும் பெண்கள் கேமராவுக்குப் பின்னாலிருந்து சாதிக்க முடியவில்லையே?

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. ஹாலிவுட்டில் நிறைய பெண்கள் தொழில் நுட்பக் கலைஞர்களாக வந்து விட்டார்கள். இங்கே தீபா மேத்தா, மீரா நாயர் மாதிரி தொடர்ந்து இயங்க வேண்டும். அதுதான் முக்கியம்.''


கமலோடு நடிக்காமல் திருவனந்தபுரம் திரும்ப மாட்டேன் என்று பேட்டி கொடுத்திருக்கிறீர்கள். உதடுகளைப் பற்றி உங்களுக்குக் கவலையே இல்லையா?

(இந்தமுறை விழுந்து விழுந்து சிரித்த அபிராமிக்கு மூச்சு வாங்குகிறது.)
''காரணம் இல்லாமல் கமல் படத்தில் முத்தக்காட்சி இருக்காது. கமல் ஒரு கலைஞர்... சின்ன வயதிலிருந்தே அவர் படங்கள் என்றால் உயிர். அவரது 'குணா' படத்தைப் பார்த்துதான், திவ்யா என்ற எனது பெயரை அபிராமியாக மாற்றிக் கொண்டேன்... அந்த அளவுக்குக் கமல் மீது மரியாதை உண்டு. அவரோடு நடிக்க வாய்ப்புக் கிடைத்தால் அதைக் கௌரவமாகக் கருதுவேன்.''

இப்போ நடிக்கும் படங்கள் எப்படி?

'பிரபு, சரத்குமாருக்கு ஜோடியாக 'மிடில் கிளாஸ் மாதவன்', 'தோஸ்த்' படங்களில் நடிக்கிறேன். இரண்டு படத்திலுமே சொந்தக் குரலில் பேசப் போகிறேன்'' என்றார் தோற்றத்துக்கும் பெயருக்கும் துளியும் சம்பந்தமில்லாத அந்த நடிகை.

சந்திப்பு: **ஜெயந்தன்**
படங்கள்: **சங்கர் சத்தியமூர்த்தி**



''ஸ்வாமி... இப்படி மான்தோலில் அமர்ந்திருக்கீங்களே... வன இலாகா அதிகாரிகள் உங்களைப் பிடிச்சுட்டுப் போயிட மாட்டாங்களா?''

''ஊஹூம்... தோலை நான் எடுத்திட்டு கறியை அவங்களுக்குத்தான் குடுத்திருக்கேன்!''

— புளியரை கணேசன்



''அந்த ஜோஸியரை ஏன் அடிக்கறாங்க?''

''போன வாரம் ஒருத்தருக்குத் 'தொழில் சூடு பிடிக்கும்'னாராம்... கடையே எரிஞ்சு போச்சாம்!''

– தஞ்சை ராகவ், மகேஷ்.



''தலைவருக்குப் பையன் மேல உசிரு.''

''அதான் புறம்போக்கு, புறம்போக்குன்னு கூப்பிடறாரா?''

— சீர்காழி வி. ரேவதி



கிராஃபிக்ஸ்: ராஜன்

''கிளன் டி.மெக்ராத்— இந்தப் பெயருக்குப் பேட்ஸ்மேன்களைத் திணறடிப் பவர் என்று பொருள் கொள்ளலாம்'' என் றார் ஒரு வெஸ்ட் இண்டீஸ் பேட்ஸ்மேன். இது நூற்றுக்கு நூறு சரி என்கிற விதமாகவே இருக்கிறது அவரது பந்து வீச்சு. உலகின் தலைசிறந்த பேட்ஸ்மேன்களே இவரது பந்து வீச்சைக் கண்டு குலை நடுங்குகிறார்கள். மும்பை டெஸ்டில் சச்சின் தவிர இவரது பந்தைத் தொட்டவர்கள் மிகக் குறைவு.

இரண்டாவது டெஸ்டிற்காகப் பயிற்சி யில் இருந்த இந்த வேகப்பந்துப் புயலைக் கல்கிக்காகச் சந்தித்தோம்.

'அதிகமான கேள்விகள் வேண்டாம்' என்ற சின்னக் கண்டிஷனுடன் பேசத் தொடங்கி னார்.

கடந்தமுறை (97–98) இந்தியா வந்த போது பாதியிலேயே திரும்பி விட்ட தாங்கள் இம்முறை பந்து வீச்சில் கலக்கியிருக்கிறீர்கள். இந்தியாவில் பந்து வீசுவது பற்றி...

மார்க்டைலர் தலைமையிலான ஆஸி. அணி இந்தியா வந்தப்போ நானும் வந்தேன். பயிற்சியில் இருக்கற நேரம் எனக்கு அடிபட் டது. தோள் வலி வேறு. அதனால் மும்பையில் இருந்தே திரும்பிட் டேன். இரண்டு மாசம் ரெஸ்ட் எடுத்தேன். அப்புறம் தொடர்ந்து போட்டிகள். இப்ப இங்க வந்துவிட் டேன்.

ஒரு பௌலரோட கனவு நிறைய விக்கெட் எடுக்கணும்; ரசிகர்களோட, ராகமான கைத் தட்டலைப் பெறணுங் கறது தானே... எனக்கும் அதுதான் இருந்தது. முதல் டெஸ் டிலேயே சிறப்பாகப்



பந்து வீசியிருக்கறதை நினைச்சு சந்தோஷ மாயிருக்கு. நான் எடுத்த விக்கெட்டுகள் எங்க அணி ஜெயிக்க உதவியதால் மகிழ்ச்சி ஊற்றுதான் எனக்குள். இது போதாதுன்னு நினைக்கிறேன். அடுத்தடுத்த மேட்சுகள்லயும் கலக்கணும். நிறைய விக்கெட் எடுக்கணும்.

கடந்த முறை இந்தியா வந்த உங்கள் அணியில் நீங்கள் ஆடவில்லை. அதனால் தான் தங்கள் அணி தோற்றது எனக் கருத லாமா?

ஸாரி. நான் அப்படி நினைக்கலை. கடந்த முறை நான் இல்லாமலேயே

பெங்களூர்ல எங்க அணி ஜெயிக்கலையா? பிளம்மிங்கும், காஸ்பரோவிச்சும் நல்லாதான் பந்து வீசினாங்க. இந்திய அணியினர் எல்லாருமே நல்ல ஃபார்மில் இருந்தப்போ பெற்ற வெற்றி அது. இதிலிருந்துதான் தொடர்ச்சியா நாங்க வெற்றி பெற்றுட்டு வர்றோம். வென்ற பதினாறு போட்டிகள்லயும் எல்லாரும் எல்லா மேட்ச்லயும் ஆடலை. அதுக்கு ஒவ்வொரு காரணம். ஆனா எங்க அணி ஜெயிச்சிருக்கே! வீரர்கள்

"சச்சினுக்குப் பந்து வீசப் பயப்படுகிறேன்!"

வருவாங்க, போவாங்க, அவ்வளவுதான். நான்தான் வெற்றிக்குக் காரணம்னு மார் தட்டலை. அப்படி தட்டுறவன் ஆஸ்திரேலியனா இருக்க மாட்டான்!

உலகில் இருக்கிற தலைசிறந்த பேட்ஸ்மேன்களையெல்லாம் கலங்கடிக்கிற உங்கள் வெற்றியின் ரகசியம்?

உழைப்புதான். அதுக்கு மிஞ்சி எதுவுமில்லை. கஷ்டப்படணும். ரிஸ்க் எடுக்கணும். சின்ன வயசுல இருந்தே ஒரு வேகப் பந்து வீச்சாளரா வரணும்னு திட்டம் போட்டு வளர்ந்தேன்.

1983-ம் வருஷம் ஆஸி. வேகப்பந்து வீச்சு அகாடமியில் சேரணும்னு தினமும் போவேன். மெக்டர்மெட், கில்பர்ட், ரீட் போன்ற புகழ்பெற்ற வேகப் பந்து வீச்சாளர்கள் எல்லாம் பயிற்சியில் இருப்பாங்க. தினமும் நான் இதைப் பார்த்துகிட்டிருக்கிறதைக் கவனித்த டென்னிஸ் லில்லி என்னைக் கூப்பிட்டார். 'என்ன?'னு கேட்டார். 'நான் வேகப்பந்து வீச்சாளரா ஆகணும்னு' சொன்னேன்? 'முதல்ல உடம்பையும் தோள் பட்டைகளையும் நல்ல வலிமையாக்கிவிட்டு வா. வேகப்பந்து வீச்சாளர்களுக்கு அதுதான் முக்கியம்னு சொல்லி அனுப்பிட்டார். இரண்டு வருஷம் உடற்பயிற்சிதான் கதின்னு இருந்தேன். வீட்ல உள்ளவங்க எல்லாம், 'என்னப்பா, மல்யுத்தம் செய்யப் போறியா?'னு கிண்டலடிச்சாங்க.

இப்படி உடம்பை வலுவாக்கிக்கிட்டு லில்லி முன்னால நின்னேன். அகாதமியில் சேர்த்துக்கிட்டாங்க. பிறகு தாம்சன், லில்லி, கில்பர்ட் ஆகியோரோட உதவியால நல்ல பயிற்சிகிடைச்சது. அப்புறம் பத்தொன்பது வயதுக்குட்பட்டோருக்கான ஆஸி. அணியில ஆட வாய்ப்புக் கிடைச்சது. பிறகு



அடக்க நினைக்கும் வேட்பாளர்களுக்கு வோட்டு இல்லை!

"பெண்களுக்காக அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என்றெல்லாம் கூட்டம் போட்டு அரசியல் கட்சிகள் எல்லாம் வோட்டு கேட்க வரும் நேரம் இது. அவற்றை அப்படியே பெண்கள் எல்லோரும் நம்பி விடக் கூடாது. உண்மையிலேயே பெண்களுக்காகப் பாடுபடுகின்ற அரசியல் கட்சிக்கே மகளிர் ஆதரவு தர வேண்டும். சடங்குகளின் மூலமாகவும் பழைமையான மூடப்பழக்க வழக்கங்களின் வாயிலாகவும் பெண்களை அடக்கி வைக்க நினைக்கும் அரசியல் கட்சி வேட்பாளர்களுக்கு யாரும் வாக்களிக்கக் கூடாது.



– திருச்சி டிஎம்எஸ்எஸ். வளாகத்தில் நடந்த அகில உலக பெண்கள் தின விழா நிகழ்ச்சியில் பேராசிரியை சரஸ்வதி.

— திருநாவு

திருப்பிக் கொடு!

பதினைந்தே தொகுதிகளில் போட்டியிட இருக்கிறது காங்கிரஸ். ஆனால் 234 தொகுதிகளிலும் மனு வாங்கி, லட்சக்கணக்கில் டெபாஸிட் வாங்கி வைத்திருக்கிறார்கள். "காங்கிரஸ் போட்டியிடாதத் தொகுதியில் வாங்கப்பட்ட டெபாஸிட் பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற நச்சரிப்பு துவங்கிவிட்டது. கொடுக்கவில்லையென்றால் வழக்கு மன்றம்தான் என்று சொல்கிறார்கள் பிரமுகர்கள்.

– கௌசி

ஆஸி. அணி. நிறைய தடவை அணியிலிருந்து நீக்கப்பட்டிருக்கேன். ஆனா மனசு தளரலை. நம்பிக்கை பிளஸ் உழைப்பு, இதுதான் என் வெற்றியின் ரகசியம்.

யாருக்குப் பந்து வீசப் பயப்படறீங்க?

வேற யாருக்கு. உங்க ஹீரோ சச்சினுக்குத்தான். 99-ல் சிட்னிலயும் நைரோபிலயும் என் பந்தை அவர் நொறுக்கியதை என்னால மறக்கவே முடியாது. பந்தை அப்போ எப்படிப் போடறதுன்னே தெரியலை. எப்படி மாத்திப் போட்டாலும் ஒவ்வொரு ஷாட்டும் பவுண்டரிக்குப் பறக்கும். நொந்து போனேன். இருந்தாலும் கடைசியா அவர் விக்கெட் எனக்குத்தான் கிடைக்கும். சின்ன தப்பு மூலமா என் பந்து வீச்சில மாட்டிக்குவார். நான் மட்டுமல்ல உலகில் உள்ள எல்லா பந்து வீச்சாளர்களுமே சச்சினுக்குப் பந்து வீசப் பயப்படுவாங்க.

லாரா, இன்சமாம், ஜெயசூர்யா, அன்வர் மாதிரியான சூப்பர் பேட்ஸ்மேனெல்லாம் ஒரு நாள் ஆடுவாங்க; மறுநாள் ஆடமாட்டாங்க. ஆனா சச்சின் மட்டும்தான் எப்போதுமே கலக்குற மனுஷர். *(சிரிக்கிறார்)*

மறக்க முடியாத தருணம்?

உலகக் கோப்பையை வென்ற நேரம். பிறகு ஒவ்வொரு முறையும் சச்சின் விக்கெட்டை எடுக்கும் நேரமெல்லாம் மறக்க முடியாத தருணம்தான்.

இந்தியாவில் பிடித்தது...?

தாஜ்மஹால் பார்க்கணும்னு ரொம்ப ஆசை. பார்த்துட்டேன்.

இந்தியர்களை ரொம்ப பிடிக்கும் எங்கள் அணியினருக்கு. இந்தியா தோற்பது தெரிந்தும் ரசிகர்கள் அமைதியா உட்கார்ந்து எங்களைப் பாராட்டுனாங்களே... அந்த மனசுதான் எங்களைப் பரவசப்படுத்துது. லண்டன் லார்ட்ஸ் மைதானத்துல விளையாடி பயங்கர கைதட்டலை வாங்கறதை விட, இந்தியாவில் வாங்குறதுதான் பெரிய விஷயம். ஏன்னா லார்ட்ஸ் ரசிகர்கள் அதிமேதாவிகள். இந்தியர்கள் பாமர ரசிகர்கள்'னு எங்க கேப்டன் வாஹ் சொல்வார். அவர் சொல்றதை இந்தியாவுல உணர்ந்தேன். சாதாரண வேர்க்கடலை விற்கறவர் கூட என் கையைப் பிடித்துப் பாராட்டும்போது... அப்பப்பா... இதுக்கு இணையா வேறெதுவும் இல்லைனே தோணுது.

பேட்டி, படங்கள்: **உமா மணி**

முகவிலையினும் மேலான ஓர் அன்பளிப்பை அவளுக்கு வழங்குங்கள்

UTI
MAHILA UNIT
S C H E M E



பாரதப் பெண்மணிகளின் ஆதாயத்திற்காக பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட யூடிஐ மஹிளா யூனிட் ஸ்கீமை வழங்குவதில் யூடிஐ ஆனந்தமடைகிறது. **18 வயது ஆன எந்த ஒரு பெண்ணும் அவளது சொந்த சேமிப்புகளை இதில் முதலீடு செய்ய முடியும். அல்லது பிறந்தநாள் / திருமணம் / ஆண்டு நிறைவு நாள் போன்றவற்றின் போதோ அல்லது எந்த ஒரு பண்டிகை-வைபவங்களின் போதோ அவளது உறவினர்கள் அல்லது நண்பர்கள் போன்றோரிடம் இருந்து இந்த திட்டத்தின் யூனிட்களை அன்பளிப்பாக பெறலாம்.**

அம்சங்கள் :

- 18 வயதான இந்தியாவில் வசிக்கும் பெண்மணி அல்லது என்.ஆர்.ஐ பெண்மணி தனது பெயரில் முதலீடு செய்ய முடியும். அல்லது இந்தியாவில் வசிப்பவர் அல்லது வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர் அல்லது ஒரு டிரஸ்ட் / நிறுவனம் / ஓசிபி போன்றவற்றில் இருந்து அவளது பெயரில் வாங்கப்படும் எந்த ஒரு தொகைக்குமான குறைந்தபட்சம் ரூ.5000/-த்திற்கான யூனிட்களை அன்பளிப்பாக பெற முடியும்.

  மேலும் அன்பளிப்பு யூனிட்கள் முன்னரே நிர்ணயித்த விலைமதிப்பில் ரூ.1100/- அல்லது ரூ.2100/- அல்லது ரூ.5100/- அல்லது அவற்றின் மடங்குகளிலும் / கலவையிலும் கிடைக்கின்றன.

- குறைந்தபட்சம் கடன் பத்திரங்களில் 70% மற்றும் அதிகபட்சம் ஈக்விட்டிகளில் 30% முதலீடு செய்யும் காலவரம்பற்ற கடன் திட்டம்.
- துவக்க அளிப்பு காலத்தில் விற்பனை ரூ.10/- முகவிலையில்.
- பண்டிகைக்கால ரொக்க தேர்வு : தேர்ந்தெடுத்த பண்டிகை நெருங்கிவரும் காலகட்டத்தில் என்.ஏ.வியின் 99% மதிப்பில் வருடத்திற்கு ஒரு முறை யூனிட்கள் மதிப்புயர்வு இருப்பின் அதனளவுக்கு மறுகொள்முதல் செய்து பணம் வழங்கப்படும்.
- வளர்ச்சி தேர்வு : இதன் கீழ் விருப்பத்துக்கு தகுந்தபடி என்.ஏ.வி அடிப்படையிலான விலைகளில் மறுகொள்முதல் செய்து கொள்ள முடியும்.

விண்ணப்பப் படிவம் / வழங்கு பத்திரம் போன்றவற்றுக்கு தயவு செய்து உங்களுக்கு அருகிலுள்ள யூடிஐ கிளை அலுவலகம் / யூஎஃப்சி அல்லது முக்கிய பிரதிநிதியை / முகவரை அணுகவும்.

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா

இந்தியாவின் மிகப் பெரிய பரஸ்பர ஃபண்ட்

13, சர் விட்டல்தாஸ் தாக்கர்சி மார்க், நியூ மெரைன் லைன்ஸ், மும்பை 400 020.
தொலைபேசி : 203 1876. இணையதளம்: www.unittrustofindia.com

துவக்க அளிப்பு சர்வதேச பெண்கள் தினமான 8-3-2001 முதல்

அமைப்பு: யூடிஐ நிறுவனம் 1963, யூடிஐ சட்ட விதிகளின்படி செயல்படுகிறது. **அபாய நிலைமைகள்:** பரஸ்பர ஃபண்ட்கள் மற்றும் செக்யூரிட்டிகளில் செய்யப்படும் அனைத்து முதலீடுகளும் மார்க்கெட் அபாயநிலைகளுக்கு உட்பட்டவை. செக்யூரிட்டிஸ் மார்க்கெட்டை பாதிக்கும் காரணங்களை பொறுத்து திட்டத்தின் என்ஏவி ஏறவோ, இறங்கவோ செய்யலாம். கடந்தகால செயல்திறன் எதிர்கால ஆதாயங்களுக்கு உத்தரவாதம் ஆகாது. யூடிஐ-ன் மஹிளா யூனிட் ஸ்கீம் என்பது திட்டத்தின் பெயரே அன்றி எந்தவிதத்திலும் திட்டத்தின் தரத்தையோ, வருங்கால ஆதாயங்களையோ, அல்லது வருமானத்தையோ குறிப்பிடுவதாகாது. திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்படும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் கிடையாது. முதலீடு செய்யும் முன்பு தயவுசெய்து வழங்கு பத்திரத்தை படிக்கவும்.

தென் மண்டல அலுவலகம் : சென்னை தொ.பேசி: (044) 5210347. **கிளை அலுவலகங்கள்:** சென்னை தொ.பேசி: 5210356, 5230985. • கோயம்புத்தூர் தொ.பேசி: 214973. • மதுரை தொ.பேசி: 738186. • திருச்சி தொ.பேசி: 760060. **ஃப்ரான்சைஸ் அலுவலகம்:** சேலம் தொ.பேசி: 416414. **சிஆர் கலெக்ஷன் மையங்கள்:** குன்னூர் தொ.பேசி: 31037. • கடலூர் தொ.பேசி: 21712. • தர்மபுரி தொ.பேசி: 61012. • திண்டுக்கல் தொ.பேசி: 432244. • ஈரோடு தொ.பேசி: 252494. • காஞ்சிபுரம் தொ.பேசி: 20076. • காரைக்குடி தொ.பேசி: 22277. • மயிலாடுதுறை தொ.பேசி: 26739. • நாகர்கோவில் தொ.பேசி: 40274. • பாண்டிச்சேரி தொ.பேசி: 339080. • ராஜபாளையம் தொ.பேசி: 21360. • தஞ்சாவூர் தொ.பேசி: 31374. • திருநெல்வேலி தொ.பேசி: 339567. • தூத்துக்குடி தொ.பேசி: 325621. **யூடிஐ பாங்க்:** அடையார் தொ.பேசி: 4464442/43/44. • அண்ணாநகர் தொ.பேசி: 6289045. • டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை தொ.பேசி: 8231085. • ராமாபுரம் தொ.பேசி: 2492184/85/86• தி.நகர் தொ.பேசி: 8239134-35.

எய்ட்ஸை தடுப்பீர் - அனைவரையும் நேசிப்பீர்.

050/3-2001 C TAM B

வென்றார் வைகோ!

ஒவ்வொரு முறை தேர்தல் வரும் போதும் வாக்குச்சாவடிக்குச் சென்று வோட்டுப் போடும் மக்களுக்கு, நாம் ஒரு தேர்தல் நடத்தினால் என்ன? என்று தோன்ற, 'தமிழக அரசியலைக் கலக்கிக் கொண்டிருக்கும் அரசியல் தலைவர்களில் அழகானவர் யார்?' என்ற கேள்வியோடு களத்தில் இறங்கினோம். நெல்லை, திருச்சி, சென்னை பகுதி மக்களிடையே நடத்திய வாக்கெடுப்பு:



காந்திமதி (63):
கலைஞர்தாங்க அழகு. மேடையில ஏறி திரும்பி, ஒரு பார்வை பார்ப்பாரே... அது செம அழகு. அவர் பேச்சு, நினைவாற்றல், அவர் ஸ்டைல், பக்கத்துல இருக்கற தலைவர்கள்ட்ட காதோட அவர் பேசற பாவனை... எல்லாமே ரொம்ப ரசிக்கிற மாதிரியிருக்கு.

ஆனந்த்ராஜ் (25) ரஜினி ரசிகர்:
அழகுன்னு பார்த்தா... அது ஜெயலலிதா தாங்க. எந்த விஷயத்துலயும் வெட்டு ஒன்னு துண்டு ரெண்டுன்னு பேசற அழகே தனிதான். எல்லா சேனல் காரங்களும் மைக்கைப் புடிச்சிட்டு நிற்கறப்ப அதுக்கு முன்னால நின்னு அவங்க பதில் சொல்ற அழகு இருக்கே... இப்படிச் சொல்லிகிட்டே போகலாம்.



எம். வேலு:
வைகோதான். கறுப்புத் துண்டை இரண்டு கையாலயும் பிடிச்சிக்கிட்டு அவர் கர்ஜிக்கிறபோது அப்படியே நம் கவனத்தைக் கட்டிப் போட்டுருவார். இலேசா மீசையை அவர் திருகி விட்டார்னா கட்ட பொம்மன், ராஜராஜ சோழன்னு எந்த அரசரையும் அவர் முகத்துல பார்க்கலாம்.



எஸ்.என். மோகன்ராம் (31):
நான் தலித் இல்லீங்க. ஆனாலும் ஒரு அழகான இளைஞரா எனக்குத் தெரியறவரு விடுதலைச் சிறுத்தைகள் திருமாவளவன்தாங்க. எளிமையா இருக்கிற அவரோட முகத்தைக் கவனிச்சிங்கன்னா சிறந்த ஆண் மகனுக்குரிய கம்பீரம் இருக்கறது தெரியும்.



ப. சரவணன் (31):
எனக்கு அழகா தெரியறவர் டாக்டர் ஐயாதான். கண்ணாடியைப் போட்டுக்கிட்டு அவர் ஸ்ட்ராங்கா பேசறதும் சிரிக்கறதும் சூப்பர்.









அம்மாவை (ஜெ.வை) அவர் சந்திச்சப்போ டீவியில காட்டினதைப் பார்த்தீங்களா? ஐயாவோட அந்தச் சிரிப்பை இன்னும் எத்தனை நாளானாலும் ரசிச்சிட்டே இருக்கலாம்.



ஈ. ராமச்சந்திரன்:
வைகோதான். அவரோட கம்பீரமும், பார்வையும் பேச்சும் யாரையுமே ரசிக்க வைக்கும். இதுக்காக என்னை ம.தி.மு.க. காரன்னு சொல்லிடாதீங்க.



முருகன்:
ஜெயலலிதா மாதிரி அழகு யாருக்கு வரும் சொல்லுங்க. அவங்க சினிமால நடிக்கற போதும் சரி. இப்பவும் சரி அழகாகத்தான் இருக்காங்க. கொஞ்சம் வயசானாலும்கூட அந்த அழகு மாறலை.



என்.எம். நந்தகுமார் (24):
வேற, யாரைச் சொல்ல முடியும். அவர்தான் – வைகோ ஒருத்தர்தான் அழகு மனிதர். இவ்வளவு வயசிலயும் இன்னும் இளமையா அழகா தெரியறவர் அவர் மட்டும்தான். முன் தலையில இருக்கிற இலேசான வழுக்கை மட்டும் இல்லேனா அவர் ஹீரோவாகவே நடிக்கலாம்.

பி. சிவகுமார் (27)
'முதிர்ந்த பழம் அழகு'ன்னு சொல்லக்



கேட்டிருக்கீங்களா? அதான் கலைஞரைத் தான் சொல்றேன். அவரை விட்டா வேறு யாரும் எனக்கு அழகா தெரியலை.



அருண்குமார்:

ஐயோ வந்து நின்னு நேரா பார்க்கிற ஒரு பார்வை போதும்; நமக்கு ஐம்புலனும் அடங்கிடற அழகு வைகோவுக்குத்தான் இருக்கு.



தண்டாயுதபாணி:

கறுப்பா இருந்தாலும் களையா இருக்கிற ஒரே ஆள் விடுதலைச் சிறுத்தைகள் திருமாவளவன்தான். அவர்ட்ட ஏதோ ஒரு கவர்ச்சி இருக்குது.



மின்சாரம் கோகுல்:

ஜெயலலிதாவின் அழகே அழகுதான். முடிவு எடுப்பதில் அவருக்கு நிகர் அவரே தான். தான் எடுத்த முடிவில் சற்றும் தடுமாறாமல் நிற்பது... மேலும் சொல்லிக் கொண்டே போகலாம்...



மேரி ரோஸ் பூங்கோதை:

மேக்கப் போட்டாலும் சரி, போடாமலும் சரி. அழகா இருக்கறவங்க ஜெயலலிதா மட்டும்தான். இதை யாராலும் மறுக்க முடியாது.

நாம் நடத்திய மினி சர்வேயில் பெரும்பாலான வாக்குகள் பெற்று கிரீடத்தைச் சூடிக்கொண்டவர் வைகோ! இரண்டாவது இடம் ஜெயலலிதாவுக்கு. மூன்றாவதாக கலைஞர்.

— நமது நிருபர்கள்

நலந்தானா?

பேச்சில் உறுதி இருந்தால் போதுமா? உடலும் அது போல இருக்க வேண்டாமா? அதற்கு அரசியல் தலைவர்கள் என்ன செய்கிறார்கள்!

- முன்பெல்லாம் கலைஞர் அறிவாலயத்தைச் சுற்றி ,காலையில் வாக் போவார். ஆனால் இப்போது முதுமை காரணமாகவும், முதுகு வலி காரணமாகவும் வாக் போவது குறைந்து போய்விட்டது. வீட்டிலேயே எளிய யோகாசனங்கள் செய்து விடுகிறார்.



- பை – பாஸ் சர்ஜரி செய்துகொண்டு, சர்க்கரை நோயிலும் சிரமப்படும் வாழப்பாடியார், வீட்டில் இருக்கும் Tread Mill மிஷினில் பதினைந்து நிமிடங்கள் சீரான வேகத்தில் பயிற்சி செய்கிறார்.

- நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் உடைய வைகோ உடலைக் கட்டுக் கோப்பாக வைத்திருப்பதற்கு, அவர் கடைபிடிக்கும் கண்டிப்பான உணவுமுறை ஒரு காரணம். சென்னையில் இருக்கும்போது காலையில் வாக் போவார் வைகோ. வெளியூர்களில், அறைக்குள்ளேயே யோகாசனங்கள்.

- வீட்டிற்குள்ளேயே மினி ஜிம் வைத்திருப்பவர் ஸ்டாலின்.

- எம்.ஜி.ஆர் கழக பொதுச்செயலாளர் ஜெகத்ரட்சகன், இரவு ஒன்பது மணிக்கு மேல் தி.நகர் தெருக்களில் ரொம்பவும் ரிலாக்ஸ்டாக நண்பர்களுடன் பேசிக் கொண்டே வாக் போவார்.

- கிரீன்வேஸ் சாலைப் பகுதியில் பனியனும் கைலியும், தோளில் துண்டுமாக வாக் போகும் வழக்கம் ரகுமான்கானுக்கு.

— ரமா

KALKI SHOPPING PAGE



"கல்கி ஷாப்பிங்"

பக்கங்களில்
விளம்பரம்
செய்ய ரூ.1250/-
மட்டுமே. செய்து
பயனடைவீர்!

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை – 97.
போன்: 2345622, 2345623

PYRAMID COSMIC POWER

MICRO CHIP PYRAMID, 2", 4", 8"
PYRAMID, CONICAL HAT, VASTU,
ENERGEY MULTI PYRAMID, CHINESE
WIND CHIME, BAGUA GLASS,
DOWSING PENDULAM, FENG SHUI
ANIMALS, ACUPRESSURE MAGNETIC
ITEMS, ACU CAR SEAT, MOTOR BIKE
SEAT, SLIM DISK, ACU CHAPPLES,
BOOKS ON VASTU, NUMERALOGY,
CONSTRUCTION OF BUILDINGS.

FOR MORE DETAILS
SEND SELF ADDRESSED
Rs.3/- STAMPED COVER.

COSMIC HEALTH CARE CENTRE
141, SECOND STREET (EXTN),
GANDHIPURAM,
COIMBATORE - 641 012.
T.N. INDIA.
PHONE - 0422 - 496035

திருவரசுவின் சிறப்பு வெளியீடு
இளையராஜாவின் சிந்தனைகள்



இசை உலகில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்து ரசிகர்களைக் கவர்ந்த இளையராஜா அவர்களை இதுவரை ஒரு இசையமைப்பாளராக மட்டுமே கண்டு வந்திருக்கிறோம். ஆனால் இந்த நூலின் மூலம் அவர் 'இறை உலக சிந்தனா வாதி'– ஓர் சிறந்த தத்துவ சிந்தனையாளர் என்பதை நிலை நாட்டுகிறார்.

''ஆன்மா தானே தன்னுடன் பேசிக் கொள்வது தான் சிறந்த சிந்தனை'' என்கிறார் அறிஞர் பிளாட்டோ.

இசைஞானியும் தாமே தம்முடன் பேசிக் கொண்டவற்றை, தம் மேன்மையான எண்ணங்களை அவருடைய உண்மையான உள்நோக்கை இந்த நூலில் அழகாக வெளிப்படுத்துகிறார்.

''இளையராஜா அவர்களின் அநுபவங்கள் அனைவரையும் சிந்திக்கத்தூண்டும், வளப்படுத்தும். குறிப்பாக ''இளைய தலைமுறைக்கு வழிகாட்டியாக விளங்கும்'' என மகா ஸ்ரீ காஞ்சிப்பெரியவர்கள் இந்நூலுக்கு அருளாசி வழங்கியுள்ளார்.

''நூலில் இடம் பெற்றுள்ள 25 கட்டுரைகளும் சமூகத்துக்கு பயன்தரும் அருமையான சிந்தனை மொட்டுகளாகும்.''

ஓவியர் ம.செ.வின் ஓவியங்கள் நூலுக்கு அழகு சேர்க்கின்றன.

நான் உணர்ந்த நல்லவற்றையே உங்களுக்கு விருந்தாகப் படைப்பதே நான் பிறந்ததற்குப் பயன் என்ற நோக்கில் தினகரன் நாளிதழில் சாதாரண மக்களுக்கு உயர்ந்த விஷயங்கள் போதிக்கப்பட வேண்டும் என்று நான் எழுதினேன். இதை இப்பொழுது திருவரசு நூல்வடிவில் நல்லெண்ணத்தோடு வெளியிட்டுள்ளது.

– இளையராஜா

அனைவரும் படித்துப் பாதுகாக்க
வேண்டிய நூல். டெம்மிசைஸ்.
198 பக்கங்கள். விலை ரூ. 70.00

பதிவு தபாலில் பெற ரூ. 85/- M.O.
செய்யுங்கள். வி.பி.பியிலும் பெறலாம். வி.பி.
தபால் செலவு தனி

விவரங்களுக்கு
திருவரசு புத்தக நிலையம்
13, தீன தயாளு தெரு,
தி. நகர், சென்னை – 600 017.
தொலைபேசி: 4342810



• பேரா.கு. ஞானசம்பந்தம்



• பார்வையாளர்கள்...

விழுந்து விழுந்து

"நலம் தரும் நாயகன் மலரடி
தொழுவோம்
மாண்புடன் யாவரும் மகிழ்வுடன்
வாழ்வோம்!

கூடியிருக்கும் மஹாஜனங்களே!

"காஞ்சீபுரம், தர்மாவரம், ஆரணி, சின்னாளம்பட்டி, இதெல்லாம் சொல்றச்சே உங்களுக்கு என்ன ஞாபகம் வர்றது?"ன்னுட்டு கேட்டாளாம் ஒருத்தனோட பார்யாள். "நேக்கு பழனி, திருப்பதி, திருச்செந்தூர் இதெல்லாம் தான் ஞாபகம் வர்றது!"ன்னானாம் ஆத்துக்காரன். இந்த மாதிரி கடுப்பான சமாசாரங்களைக் கூட நகைச்சுவையோட பகிர்ந்துண்டா வாழ்க்கையில் ஆத்திரம், டென்ஷன், பிரஷர் இதெல்லாம் வராதுங்கறார் பேராசிரியர் கு. ஞானசம்பந்தம்.

இதெல்லாம் என்னண்டே எங்கே சொன்னார்னுட்டு புருவத்தை உயர்த்தறேளா?

கல்கியும்- ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸூம் இணைஞ்சு பிரதி மாதம், இளைஞர்களுக்காக 'நில், கவனி, வெற்றிகொள்!' திருவிழா நடத்தறானோல்லியோ? இந்த விசை, நாரத கான சபா மெயின் ஹாலில் 'ஏழாவது கலை'னுட்டு நகைச்சுவை கருத்தரங்கு நடத்தினா- ஞாயிற்றுக்கிழமை 11ம் தேதி. சித்த நாழி சிரிச்சிட்டு வரலாமேன்னு அடியேனும் போயிருந்தேன்.

நான் இந்தப் பிரவசனத்தைத் தொடங்கும்போது பாடின கணபதி ஸ்துதி கூட



சிரிச்சா, எல்லாரும்!

அந்த விழாவில் ஆர். ஜெய்ஷங்கர் அப் படிங்கற குழந்தை பாடினதுதான். அருமையா பாடித்து. கலாக்ஷேத்ராவில் சிஷ்யையாம்!

விழாவுக்கு என்ன கூட்டம் தெரியுமோ? அந்தப் பெரிய அரங்கம் நிறைஞ்சு இருந்தது. "ஹரிதாஸ் ஸ்வாமிகளோட பஜனையின் போது நாரத கான சபால இப்படி கூட்டம் வழிஞ்சு பார்த்திருக்கேன், அதுக்கப்புறம் இப்பத்தான் பார்க்கிறேன்!''னுட்டு எஸ்.வி.சேகர் ரொம்பப் பெருமையாச் சொன்னார்.

வாயில் போட்ட க்ஷணமே பாஹா கரையற ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் மைசூர் பாவும் கல்கி பொஸ்தகமும் உள்ளே போறச்சையே ஃப்ரீயா கொடுத்திடறா. நானும் மூணு விழாவாக நோட் பண்ணிண்டே வர்றேன், வர்ற பேச்சாளர் கள், மைசூர்பா புகழையும் ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் முதலாளி முரளியோட முகவசீக ரப் புகழையும் பாடாம போறதே இல்லை.

''சாக்ஷாத் கிருஷ்ண பகவானைப் பார்க்கிற மாதிரியே இருக்கு!''னுட்டு, குன்னக்குடி மாமா மைசூர்பாவுக்கு மேலே உருகினார். (குன்னக்குடி ரெயில்வே டிராக்கிட்டே போய் நின்னா, சிக்னல்னுட்டு நினைச்சுண்டு வண்டியை நிறுத்திப்புடுவான் டிரைவர், அத்தனை பெரிய பொட்டுக்காரர் னுட்டு எஸ்.வி. சேகர் தைரியமா வாரினா ராக்கும்!)

கு. ஞானசம்பந்தம் தான் தலைமை உரை. ஜெயா டீ.வி. காலை நிகழ்ச்சி புகழ் ஞான சம்பந்தமே தான்! கலிகாலத்திலே டீ.வி.யைச் சம்பந்தப்படுத்தி பேசினாத் தானே மனுஷா ளுக்கு 'சட்'னு புரியறது? "அந்தக் காலத்திலே ரேடியோ ஒரு பக்கம் பாடிண்டே இருக்கும், மனுஷா ஒருபக்கம் ஆத்து காரியங்களைப் பண்ணிண்டே இருப்பா! ஆனா, இப்போ, டீ.வி. முன்னாடி ஐக்கியமாயிட்டா யாருக் கும் எதுவும் ஓடறதேயில்லை!''னுட்டு பேராசிரியர் கூட நொந்துண்டார்.

இப்படித்தான் ஒரு நாள், வருஷக் கணக்கா பார்க்காத ஒரு நண்பனைப் பார்க் கப் போயிருந்தாராம் அவர். கதவைத் தட்டிண்டே இருந்திருக்கார், திறக்கறதுக்கு நாதி இல்லை. ரொம்ப நாழி கழிச்சு,

ஜன்னலைத் திறந்து எட்டிப்பார்த்திருக்கான் நண்பன். "என்ன?"ன்னானாம். "நான் உன் கூட படிச்சவன்!"னாராம் தன்னை அறிமுகப்படுத்திக்கிற தொனியில்.

"அதுக்கென்ன இப்போ?" ன்னானாம் எரிச்சலோட. 'என்னவோ படிச்சுத் தொலைச்சுட்டேன்!'ன்னு இவர் முணு முணுக்கறதுக்குள்ளே "படம் போட்டுட்டான் வாங்கோ!"ன்னு உள்ளேயிருந்து அவனோட சகதர்மிணியின் குரல்! பட்னு ஜன்னலைச் சாத்திண்டு போயே போயிட்டானாம் நண்பன்.

கு. ஞானசம்பந்தம், மதுரை தியாகராய கல்லூரி பேராசிரியராம், மதுரைத் தமிழில் பிச்சு உதறிட்டார் மனுஷன்.

"கவலைகள், கவலைகள், கவலைகள்... சதா சர்வ காலமும் நமக்குக் கவலைகள். ஆனால் நாம படுகிற கவலைகளில் முக்கால் வாசி ஈனக் கவலைகள். அதாவது, அடுத்த வருஷத்திலே படவேண்டிய கவலைகளை அட்வான்ஸ்டா பட்டுண்டே இருக்கோம். மீதி கவலைகள், தேவையே இல்லாத விஷயத்தைப் பற்றின கவலைகள்!''' அப்படீங்கறார்.

ஒரு திருமணம் நடக்கிற ஆத்திலே இவரோட ஸ்நேகிதன் ரொம்ப வருத்தத்தோட சொன்னானாம்– "ஐந்நூறு ரூபாய்ச் செருப்பு, சாப்டுட்டு வர்றதுக்குள்ளே தொலைஞ்சு போயிடுத்து!'' இவருக்கு ரொம்ப கவலையாப் போயிடுத்தாம்.

''என்ன பண்ணப் போறேன்?'ன்னு மெதுவா கேட்டாராம்.

"சரி, என்ன பண்றது, என் செருப்பையே போட்டுண்டு போக வேண்டியது தான்!'' அப்படீன்னானாம்.

"இவனுக்கோசரம் நான் பட்ட கவலை எல்லாம் வேஸ்ட் தானே?' அப்படீங்கறார்.

"முளைச்சு மூணு இலை விடாத குழந்தைகளுக்குக் கூட இந்தக் காலத்திலே கவலை இருக்கு. என்ன கவலை? நாளைக்கு ஸ்கூல் இருக்குமா இருக்காதா அப்படீங்கற கவலை. பள்ளிக் கூடத்திலே பாடம் நடத்திண்டு இருந்த ஆசிரியர் "வர்ற எட்டாம் தேதி உலகம் அழியப் போறது!"ன்னாராம். ஒரு குழந்தை எழுந்து "அன்னிக்குக் ஸ்கூல் லீவா ஸார்?"னுட்டு கேட்டுத்தாம்.

"குழந்தைகளுக்குக் ஸ்கூல்னா ஏன் இப்படி சிம்ம சொப்பனமா ஆயிடுத்து? ஒரு எல்.கே.ஜி. குழந்தை ஸ்கூலுக்குக் கிளம்பறச்சே நடக்கிற டிராமாவை சித்த யோசிச்சுப் பாருங்கோ! ஒருத்தர் யூனிஃபார்மை மாட்ட, இன்னொருத்தர் ஷூவைப்போட, பெரிய பெரிய இட்லி துண்டங்களை அத்தனூண்டு வாய்க்குள்ளே திணிச்சு 'முழுங்கு, முழுங்கு'ன்னுட்டு அம்மா மிரட்ட, ஸ்கூல் பேக், பென்ஸில், புத்தகம், பிஸ்கட், சாப்பாடு, விதவிதமான தண்ணீர் பாட்டில்னுட்டு அப்பா ரெடி பண்ண, (செவ்வாய் கிரஹத்துக்குப் போறவாகிட்டே கூட இத்தனை சாமான் கொடுத்தனுப்பு வாளானுட்டு சந்தேகம்தான் அப்படீங்கறார்!)... இத்தனைக்கப்புறம், "நீ டாக்டரா ஆகணும். என்ஜினீயரா ஆகணும்!" அப்படீன்னா, குழந்தை எதுவாகவும் வரமாட்டான் போங்கோ!'' அப்படீன்னுட்டு ஒரே போடா போட்டார் பேராசிரியர்வாள்.


• சேகரன்


• ஜெய்ஷங்கர்

இதே மாதிரி, ரிப்போர்ட் கார்டு வர்ற அன்னிக்கு ஒவ்வொரு ஆத்துலேயும் நடக்கற அமளியைப் பத்தி புலம்பித் தள்ளிட்டார். ஆத்துலே இருக்கிற பெரியவா அத்தனை பேரும் ஷிஃப்ட் சிஸ்டம் போட்டு குழந்தைகளை அடிப்பாளாம்!. "உன் வயசில் நான் எவ்வளவு மார்க் வாங்கினேன் தெரியுமா?", "உன் வயசில் நான் எவ்வளவு மார்க் வாங்கினேன் தெரியுமா?"ன்னு அப்பா கீரல் விழுந்த ரிக்கார்டு மாதிரி மிரட்டிண்டே இருப்பாராம், ஆனால் தான் வாங்கின மார்க்கை மட்டும் கடைசிவரை சொல்லவே மாட்டாராம்! (மார்க் சொல்லும் படி இருந்தாத்தானே சொல்வார் அப்படீங்

கறார் ஞானசம்பந்தம்)

இப்படித்தான் தோப்பனார் ஒரு நாள் படுத்தும்போது பொறுமையிழந்தக் கல்லூரி மாணவன் சொன்னானாம், "என் வயதில் நோக்குக் கல்யாணம் ஆயிட்டதோல்லியோ, அதற்கு முதலில் ஏற்பாடு செய்!" அப்படீன்னானாம்.

இதோ, நீங்க எல்லாம் விழுந்து விழுந்து சிரிச்சிண்டு இருக்கேளே, அதே மாதிரிதான் அன்னிக்கு ஆடியன்ஸும் அவர் சொல்றதுக்கெல்லாம் சிரிச்சிண்டிருந்தா. அதுக்கு அவர் சொன்னார்- "நான் சொல்ற ஜோக்குக்காக நீங்க சிரிக்கலை, உங்களோட அனுபவமும் என்னோட அனுபவமும் ஒன்றாக உரசறது. அதனால்தான் இத்தனைச் சிரிப்பு!'' அப்படீன்னு விளக்கினார். வாஸ்தவம் தானே? இவர் சொன்ன ஒவ்வொரு விஷயமும் நம்மாத்திலேயோ பக்கத்தாத்திலேயோ நடந்திண்டு தானே இருக்கு?

• மேடையில்...



"பள்ளிக்கூடத்திலே ஆசிரியர்கள் படுத்தற பாடும் கொஞ்சம் நஞ்சம் இல்லை, நானே ஒரு ஆசிரியர்தான்னாலும் இதை ஒத்துக்கறேன்!" அப்படீன்னார். அதுக்கு ஒரு கதையும் சொன்னார்.

ஒரு தடவை, ஆசிரியர், மாணவன் மடியில் தலை வைச்சுப் படுத்துண்டுத் தூங்கிப் போயிட்டாராம். ஒரு தேள் வந்து மாணவனைக் கொட்டியிருக்கு. அத்தனை வலியையும் பொறுத்துண்டுச் சத்தமே போடாம இருந்தானாம் மாணவன். தேள் இரண்டாவது தடவையாகக் கொட்டியிருக்கு, ஆனால் அதுக்கும் அவன் சத்தலை. தன்னிச்சையா முழிச்சிண்ட ஆசிரியருக்கு விஷயம் தெரிஞ்ச உடனே கண்ணில் ஜலம் வந்துடுத்து. "அப்பனே, என்னை எழுப்பக் கூடாதுனுட்டு வலியைப் பொறுத்துண்டியா ராஜா?"ன்னு கேட்டிருக்கார். "இல்லை ஸார், நீங்க எழுந்தா, உடனே பாடம் நடத்த ஆரம்பிச்சிடுவேளே, அதுக்குப் பயந்துண்டு தான் எழுப்பலை!'' அப்படீன்னானாமே பார்க்கலாம்.

''எந்தப் பாடத்தையும் நடத்துகிற விதத்தில் இருக்கு; குழந்தைகளுக்குப் பிடிச்ச விதத்தில் விஷயங்களைச் சொல்லணும்!''னுட்டு ஒரு உதாரணமும் சொன்னார்.

ஒரு சாதாரண கணக்கையே எடுத்துக்கலாம். நாலு சுத்தியல், மூணு ஸ்க்ரூ, இரண்டு ஆணி எல்லாத்தையும் கூட்டுங்கோன்னு சொல்றதுக்குப் பதிலா நாலு ஜாங்கிரி, மூணு மைசூர்பா, இரண்டு குலாப் ஜாமூன்னுட்டு கூட்டச் சொல்லுங்கோ, குழந்தைகள் இனிப்புகளை நினைச்சுண்டே சந்தோஷமா கூட்டுவா- ஒரு பாடத்தைச் சுவாரஸ்யமாக்குகிற வழி இதுதான்னுட்டு விளக்கினார். இவரோட மாணவர்கள் குடுத்து வைச்சவானுட்டு நினைச்சுண்டேன். ஆனால் அவரே அசடு வழிஞ்சிருக்கிற சந்தர்ப்பம் உண்டாயிருக்காம்.

போர்டில் ஒரு திருக்குறளை எழுதிப் போட்டுட்டு "இதை யார் எழுதினா?"னுட்டு கேட்டாராம், தமிழ் வகுப்பிலே. "நீங்க தான் ஸார்!"ன்னு பளிச்சின்னு பதில் வந்ததாம்.

இன்னொரு முக்கியமான விஷயம், நாம எல்லாரும் ஞாபகம் வைச்சுக்கவேண்டிய விஷயம் சொன்னார்.

குழந்தைகள் படிச்சு முடிச்சப்புறம், அவாளுக்கு வேலை கிடைக்கிற வரைக்கும் பெத்தவா பொறுமையா இருக்கணும்,

அவாளைப் போட்டு நச்சுண்டே இருக்கப் படாதுன்னார்.

வேலைக்கு அலைஞ்சிண்டு இருக்கிற பிள்ளைத் திண்ணையில் படுத்திருந்தா, "ஏண்டா திண்ணையைச் சூடாக்கிறே?" அப்படீம்பாராம் அப்பா. சரின்னு வீட்டுக்குள்ளே போனா "முக்காடு போட்டுண்டு மூலையில் உட்கார்ந்துக்கோடா!" அப்படீம்



• எஸ்.வி.சேகர்

பாளாம் அம்மா. நொந்துபோய் அவன் தெருப்பக்கம் போனா "தெருவை எத்தனை தடவைடா சுத்திச் சுத்தி வருவே?" அப்படீம்பாராம் அடுத்தாத்து மாமா. அந்தப் பையன் பாவமில்லையா? அவனே நொந்துபோய் விரக்தியாய் ஏதாவது பேசினாக்கூட "கவலைப்படாதேடா, எல்லாம் நல்ல படியா நடக்கும்!" அப்படீன்னு சொல்லணுமே ஒழிய, புண்ணில் வேலைப் பாய்ச்சின கதையாய் என்னத்தையாவது சொல்லக் கூடாது அப்படீன்னார். (அவர் இப்படித்தான் ஒரு மாணவனுக்கு ஆறுதல் சொல்றேன் பேர்வழினிட்டு "வருத்தப்படாதே, நான் கூட உன்னை மாதிரி பி.யூ.ஸியில் ஃபெயில் ஆனேன் தெரியுமா?"ன்னு சொல்லப் போக, அவன் என்னடான்னா, எல்லார்கிட்டேயும் இவரைக் காமிச்சுக் காமிச்சு, 'ஸார் பி.யூ.ஸியில் ஃபெயில்'ன்னு சொல்ல ஆரம்பிச்சிட்டானாம்!)

"இளைஞர்களே, நீங்க உங்க அப்பா அம்மாவுக்காக முன்னேற வேண்டாம், உங்க ஆசிரியருக்காக முன்னேற வேண்டாம், உங்களுக்காக முன்னேற வேண்டாம், நீங்க முன்னேறாத காலத்தில் உங்களை நையாண்டி பண்ணி 'நீ எல்லாம் என்ன சாதிக்கப் போறே?'ன்னு நக்கல் பண்ணினாளே, அவாளுக்காக முன்னேறி காமியுங்கோ!"ன்னு அவர் ஆவேசமா சொன்ன உடனே, எல்லாரும் தங்களை மறந்து கையைத் தட்டிட்டா!

கை, கால் எல்லாம் வளைஞ்சு திக்குவாயாப் பிறந்தக் குழந்தை, மழைக்குக் கூட ஸ்கூலில் ஒதுங்காதக் குழந்தைதான் இன்னிக்கு ஹாலிவுட்டையே கட்டி அரசாள்றதுன்னார். அவர் யாரைச் சொல்றார்னுட்டு தெரியறதா? -ஆமாம், சில்வஸ்டர் ஸ்டாலோனைத்தான்! எப்படி சோதனை அப்படீங்கற வார்த்தையில் 'ே'ங்கற கொம்பை ஒடைச்சுட்டா, 'சாதனை' அப்படீங்கற வார்த்தை வந்திடுமோ, அதே மாதிரி, வாழ்க்கையில் உள்ள முட்டுக்கட்டைகளை எல்லாம் உடைச்சு எறிஞ்சிட்டா சாதனை படைக்கறது சுலபம்!"னுட்டு இளைஞர்களுக்கான ஸ்பெஷல் மெசேஜோட சொல்லி முடிச்சார் பேராசிரியர்.

ரொம்ப நேரமாகவே எனக்கு உள்ளூர ஒரு பயம், எங்கே அவர் ப்பேச்சை 'டபக்'ன்னு முடிச்சிடுவாரோனுட்டு. அவர் பேசிண்டே இருக்கணும், எல்லாரும் சிரிச்சிண்டே இருக்கணும்னுட்டு ஒரு ரகசிய ஆசை. அங்கே இருந்த எல்லாருக்கும் அப்படித்தான் தோணியிருக்குமாக்கும்!

அடுத்து பேசினவர் ஹியூமர் கிளப் செயலர் ஆர். சேகரன்.


அவர் பேசறதுக்கோசரம் எப்ப மீட்டிங்குக்குக் கிளம்பினாலும், ஆத்துக்காரி மிரட்டி அனுப்புவாளாம். 'அவா மெமெண்ட்டோ, கிமெண்ட்டோ ஏதாவது கொடுத்தா பத்திரமா எடுத்திண்டு வாங்கோ'னுட்டு. அதனாலே மீட்டிங்கில் இவருக்கு மெமெண்ட்டோ கிடைக்கிற வரைக்கும் ஒன்றுமே ஓடாதாம். "நல்ல வேளை, இந்த மீட்டிங்கில் நான் பேச ஆரம்பிக்கறதுக்கு முன்னாடியே மெமெண்ட்டோ கொடுத்திட்டேள், நான் நிம்மதியா பேசலாம்!"ன்னு கலக்கலா ஆரம்பிச்சார் மனுஷர்.

அவர் எப்படி எல்லாம் சிரிக்க வைச்சார்னு நான் அடுத்த வாரம் சொல்றேன், எல்லாருக்கும் ஆத்திலே கடமைகள் காத்திண்டு இருக்கும். இன்றைய பிரவசனத்தை இத்தோடு முடிச்சுக்கறேன்!

உபன்யாசம்: **கிருஷ்ண பாகவதர்**

உதவி: **எஸ். சந்திரமௌலி**

படங்கள்: **யோகா**





2001 மார்ச் 25
விக்ரம பங்குனி 12
மலர் : 59
இதழ் : 34

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




பெர்னாண்டஸ் ராஜினாமா : தாமதமான நடவடிக்கை!

கையும் களவுமாகப் பிடிப்பதற்காக நிகழ்த்தப்பட்ட ஒரு நாடகம்தான். ஆனால், அந்த நாடகமே பாதுகாப்பு அமைச்சகத்தில் நிகழும் முறைகேடுகளைப் பளிச்சென்று வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துவிட்டது! ஒரு கற்பனை இடைத்தரகு நிறுவனம் கொடுத்த லஞ்சப் பணத்தை இந்திய பாதுகாப்பு அமைச்சகத்துடன் நேரடி அல்லது மறைமுகத் தொடர்பு கொண்ட 34 நபர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். கட்சி வேறுபாடின்றி, பதவிப் பிரக்ஞையின்றி, பல தரப்புகளிலும் ஊழல் பரவி வேரூன்றியிருக்கும் அவலம் அதிர்ச்சியளிக்கும் வகையில் வெளிப்பட்டிருக்கிறது. வெறும் கட்சிப் பொறுப்பு மட்டுமே வகித்த பங்காரு லக்ஷ்மண்கூட தமது செல்வாக்கைப் பயன் படுத்துவதாகக் கூறி லஞ்சம் பெற்றுக் கொண்டதற்கான ஆதாரங்கள் கிட்டியிருக்கின்றன.

பிரதமர் உடனடியாகத் தமது கட்சித் தலைவரை ராஜினாமா செய்யுமாறு பணித்ததில் ஆச்சர்ய மில்லை. ஆனால் பாதுகாப்பு அமைச்சரின் ராஜினாமாவைப் பெறுவதில் அதே வேகத்தை அவர் காட்டவில்லை என்பது கண்டனத்துக்குரியது.

சமதா கட்சித் தலைவர் ஜெயா ஜேட்லி, பெர்னாண்டஸின் வீட்டிலேயே லஞ்சப் பணம் பெற்றுக் கொண்டதற்கான ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன.

தாம் பாதுகாப்பு அமைச்சகத்தில் தலையிடுவதில்லை என்று சத்தியம் செய்கிறார் ஜெயா ஜேட்லி! எனினும் ஆதாரங்கள் அவருக்கு எதிராக இருக்கின்றன. கட்சிப் பணியாளர்கள் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி ஆட்சியில் தலையிடுவதை நிரூபிக்கும் மற்றொரு சம்பவம்



அரங்கேறியிருக்கிறது.

தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெறும் பி.ஜே.பி. மதவாதக் கட்சியாக இருக்கலாம்; ஆனால் ஊழலற்ற கட்சி என்று நற்பெயர் பெற்றிருந்தது. அந்த நற்பெயரும் இப்போது தவிடு பொடியாகிவிட்டது.

இந்த இமேஜ் சரிவை ஓரளவு சரிசெய்யக் கூடியது பங்காரு லக்ஷ்மணின் ராஜினாமா. ஆனால், பெர்னாண்டஸின் ராஜினாமாவை உடனே கோரிப் பெறாதது பிரதமரின் நற்பெயருக்குக் கேடும் பதவிக்கு ஆபத்தும் விளைவித்திருக்கிறது.


சமதா கட்சியின் ஆதரவு, தேசிய ஜனநாயக கூட்டணிக்கு அத்தியாவசியம் என்பது உண்மையே. ஆனால், பகிரங்க ஊழலில் ஈடுபட்ட ஒரு குழுவை உடனே கண்டனம் செய்து ராஜினாமா கோராதது பிரதமருக்கும் அவரது அரசுக்கும் அவர் சார்ந்திருக்கும் கட்சிக்கும் ஒருங்கே அவப்பெயர் குவித்திருக்கிறது.

'பி.ஜே.பி. தலைமையிலான கூட்டணி ஆட்சி கவிழ்ந்தாலும் பரவாயில்லை. அதை விடவும் பொது வாழ்வில் நேர்மையும் நல்லொழுக்கமும் தார்மிகப் பொறுப்புணர்வும் முக்கியமானவை' என்று பிரதமர் மட்டும் உறுதியாகக் கூறியிருந்தால், பெர்னாண்டஸுக்கு உடனே ராஜினாமா செய்வதன்றி வேறு வழி இருந்திருக்காது. எதிர்க்கட்சிகளும் 'விட்டேனா பார்!' என்று எதிர்ப்புக்குரல் எழுப்ப முடியாமல் போயிருக்கும். வாஜ்பாய் ஆட்சி ஆபத்திலிருந்து தப்பியிருக்கும்.

இப்போதோ, எதிர்க் கட்சிகளின் கண்டனத்துக்கும் மமதா பானர்ஜியின் 'ஆதரவு வாபஸ்' மிரட்டலுக்கும் பணிந்து பெர்னாண்டஸ் தாமதமாக ராஜினாமா செய்துள்ளார் என்கிற அவப்பெயரே மிஞ்சுகிறது. மமதாவுடைய திருணாமுல் காங்கிரஸ் கட்சியின் ஆதரவும் போய்விட்டது!

'பிரதமர் ராஜினாமா செய்ய வேண்டும்' என்று பீஹாரிலிருந்து கூவ, லல்லு பிரசாத் யாதவும், தமிழகத்திலிருந்து முழங்க ஜெயலலிதாவும்கூட துணிந்துவிட்டனர்! அவ்வாறிருக்க, காங்கிரஸ் பற்றிக் கேட்கவா வேண்டும்! நாடாளுமன்றத்தை இயங்கவிடாமல் முட்டுக்கட்டை போடுகிறது.

தாங்கள் லஞ்சம் பெறவில்லை என்றும் கட்சிக்கு நன்கொடைதான் பெற்றோம் என்றும் பங்காரு லக்ஷ்மணும், ஜெயா ஜேட்லியும் அடித்துச் சொன்னாலும் அவையெல்லாம் எடுபடாது. பதிவாகியுள்ள



வார்த்தைகள் அவர்களைக் காட்டிக் கொடுக்கின்றன.

நடத்தப்பட்டது ஒரு நாடகம் என்பதாலும் குற்றம் எதுவும் நடந்துவிடவில்லை என்பதாலும் நீதி விசாரணையில் இவர்கள் தப்பிப் பிழைக்கலாம். ஆனால், மானம் கப்பலேறிவிட்டது உண்மை. லஞ்ச - ஊழலுக்குத் துணிந்தவர்கள் என்பது நிரூபணமாகிவிட்டது. மேலும், கார்கில் போருக்காக வாங்கப்பட்ட உபகரணங்களில் ஏராளமான லஞ்சப் பணம் கைமாறியிருப்பதற்குத் தம்மிடம் ஆதாரம் உள்ளதாக, இந்நாடகத்தை அரங்கேற்றிய டெஹல்கா டாட் காம் என்ற வெப்சைட் நிறுவனம் கூறுகிறது.

விசாரணைகள் விரைவில் நடத்தப்பட்டு முடிவுகள் வெகு விரைவில் வெளியாகி நடவடிக்கைகள் அதனினும் வேகமாக எடுக்கப்பட வேண்டும் என்பது மிகவும் முக்கியம். இல்லாவிட்டால், பாதுகாப்பு உபகரணங்கள் வாங்குவதென்பது தேசத்தையே பணயம் வைக்கிற விபரீத விளையாட்டாக மாறிப் போகும்.

இதை உணர்ந்துதான் இந்த ஊழல் விவகாரத்தில் சிக்கிய பல ராணுவ அதிகாரிகளைத் துரிதமாக தற்காலிகப் பணி நீக்கம் செய்துள்ளது அரசு. அதே வேகத்தில் பெர்னாண்டஸின் ராஜினாமா பெறப்படாதது ஏச்சு பேச்சுக்கு இடமளித்துவிட்டது. இறுதிவரை பிரதமர், நேரடியாக பெர்னாண்டஸின் ராஜினாமாவைக் கோரவில்லை. பா.ஜ.க. முக்கிய உறுப்பினர்கள்தான் அதை வலியுறுத்திப் பெற்றிருக்கிறார்கள். இதனால் பா.ஜ.க.வுக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்பு வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தல்களில் அக்கட்சியின் வெற்றி வாய்ப்புகளையும், பி.ஜே.பி.யை உள்ளடக்கிய கூட்டணிகளின் வெற்றி வாய்ப்புகளையும் பாதிக்கும். தமிழகத்தில் இப்போதே ஜெயலலிதாவின் குரல் ஓங்கியும் கலைஞரின் குரல் தற்காப்புடனும் ஒலிக்கிறது. பிற மாநிலங்களிலும் சட்டமன்றங்களில் பா.ஜ.க. துவைத்தெடுக்கப்படுகிறது.

அரசியல் ரீதியில் புத்திசாலித்தனமாகவும் தார்மிக ரீதியில் நேர்மையாகவும் உடனடியாகச் செயல்பட்டு, பிரதமர், பெர்னாண்டஸ் உட்பட குற்றம் சாட்டப்பெற்ற அனைவர்மீதும் விசாரணை நடத்தி முடிவு வெளியிட்டால், தமது பதவிக்கும், கட்சிக்கும் பெருமை சேர்த்துக் கொண்டவராவார்.

இதைச் செய்யத் தவறினால், இந்திய அரசியல் வானில் நாம் போற்றிய ஒரே நம்பிக்கை நட்சத்திரமும் ஒளியிழந்து உதிர்ந்ததாகிவிடும். ○



• அஜித், லைலா

வி.வி.எஸ். லக்ஷ்மணும் ராகுல் டிராவிட்டும் பிளந்து கட்டிக் கொண்டு இந்தியக் கிரிக்கெட்டின் உச்சாணிக் கிளையை எட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்துப் பரவசப்பட்டுக் கொண்டிருந்த அதேசமயம், அன்றாடம் ஆட்ட முடிவில் அதுல் வாசனும், யஷ்பால் சர்மாவும் நடத்திய விமரிசனங்களைக் கேட்கக் கேட்க ஆத்திரம் வந்தது. காரணம், தூர்தர்ஷன்காரர்களின் சகிக்க முடியாத இரட்டை மொழிப் பாலிஸி. அதுல்வாசன் ஆங்கிலத்தில் ஒரு கருத்தைத் தெரிவிக்கிறார். ஒரு கிரிக்கெட் ரசிகரின் ஆங்கிலக் கடிதத்தைப் படிக்கிறார். உடனே யஷ்பால் சர்மா பதில் சொல்கிறார் – இந்தியில். முன்னவரின் கருத்தைப் பின்னவர் ஏற்கிறாரா, மறுக்கிறாரா வியாக்யானம் செய்கிறாரா அல்லது இது எதற்கும் சம்பந்தமில்லாமல் பங்காரு லக்ஷ்மணின் ராஜினாமாவைப் பற்றி அலசிக் கொண்டிருக்கிறாரா? – ஒரு மண்ணும் புரியவில்லை. (முன்பு ஸ்ரீகாந்தும் மொஹீந்தர் அமர்நாத்தும் பேசியபோதும் இதே கூத்துதான்.) தூக்குப் போட்டுக் கொள்கிற மாதிரி வெறுப்பாகிவிட்ட ஒரு நேயர், 'ஐயா, எனக்கு இந்தி தெரியாது, ஆகவே தயவு பண்ணி என் கேள்விக்கு ஆங்கிலத்தில் பதில் சொல்லுங்கள்' என்று இ-மெயிலில் கதறிவிட்டார். யஷ்பால், மனம் இரங்கி, அந்தக் கேள்விக்கு ஆங்கிலத்தில் பதிலளித்தார். பிறகு பழைய குருடியே கதவைத் திறந்தாள்.

We all are born mad; some remain so என்றார் அயர்லாந்து நாவலாசிரியர் சாமுவேல் பெக்கெட். யஷ்பால் அந்தக் கோத்திரம்.

'**வ**ணக்கங்க. நான் குண்டுப்பட்டியிலிருந்து கோமதி பேசறேங்க.'

'வணக்கங்க, கோமதி, எப்படி இருக்கீங்க?'

'நான் நல்லா இருக்கேங்க. நீங்க எப்படி இருக்கீங்க?'

'நானும் நல்லா இருக்கேங்க.'

'உங்களோட பேசணும்னு எனக்கு ரொம்ப நாளா ஆசைங்க.'

'அப்படிங்களா? ரொம்பத் தாங்க்ஸுங்க. நீங்க என்ன செய்யறீங்க?'

'சும்மாதங்க இருக்கறேன். ஹவுஸ்வைஃபுங்க.'

– ஃபோன் மூலம் நடைபெறும் நிகழ்ச்சிகள் பெரும்பாலும் லோக் சபா ரகளை போல இப்படியே நீண்டுகொண்டு போவதால் டெலிபோன் எடுக்கிற கருவி மீதே வெறுப்பு ஏற்படுகிறது. ஆனால் யாரோ சொன்னது போல, telephone is the greatest nuisance among conveniences and the greatest convenience among nuisances.



• லக்ஷ்மண்



• டிராவிட்

எஸ்வீவி சேனலில் வரும் 'மியூஸிக் க்விஸ்' கொஞ்சம் ஆறுதல். இது என்ன ராகம், கண்டுபிடியுங்கள்? நீங்கள் யாரிடம் பாட்டுக் கற்றுக் கொள்கிறீர்கள்? இப்போது எது வரை வந்திருக்கிறீர்கள்? உங்கள் குரு யார்? – இது போலக் கர்னாடக இசை சம்பந்தப்பட்ட கேள்விகளும் தகவல்களும் நிறைந்து அப்பாடா என்று ஒரு சந்தோஷம் ஏற்படுத்துகிறது. தொகுப்பாளர் பத்மனாபன் அசட்டுப் பிசட்டென்று இழுக்காமல் கண்ணியம் காக்கிறார். சிறப்பு விருந்தினராக வருபவர்களும் அப்படியே.

காயத்ரி கிரீஷ், ரசிகர்களுடன் உரையாடியதோடு சிறிது பாடியும் காட்டினார். இனிமையான சாரீரம்.

Advice tells you much about the person giving it என்ற கோட்பாட்டின்படி, தூர்தர்ஷனில் சட்ட ஆலோசனைகளைக் கூறும் அந்த வழக்கறிஞர் பொறுப்புணர்ச்சி உள்ளவராகவும் அனுபவஸ்தராகவுமே தெரிகிறார். வெற்றுக் காகிதத்தில் கையெழுத்திடுவது எத்தனை ஆபத்தானது என்பதை அவர் எடுத்துக் கூறி எச்சரித்தது ஓர் உதாரணம்.

இவர் தயவில் ஒரு நல்ல சிறுகதையும்

கிடைத்தது அன்றைக்கு. அரசு அலுவலகங்களில் ஏன் வேலைகள் தாமதமாகின்றன என்று ஒரு நேயர் கேட்க, சிவப்பு நாடாதான் காரணம் என்று சொல்லி, அதை வைத்து எழுதப்பட்ட ஒரு சிறுகதையையும் விவரித்தார். (ராஜநாராயணன் எழுதியது)

கடற்கரை ஓரத்தில் வசிக்கும் ஒரு கிழவிக்குக் காலில் ஏதோ புண். கடல் நீரால் கழுவினால் குணமாகும் என்று யாரோ சொல்ல, பேரனிடம் ஒரு பக்கெட் தண்ணீர் கொண்டு வரச் சொல்கிறாள். பேரன் தர்ம நியாயத்துக்கும் சட்டத்துக்கும் பயந்தவன். கடல் நீரை வீட்டுக்குக் கொண்டு வரலாமோ கூடாதோ என்றெண்ணி, கிராம அதிகாரிக்கு விண்ணப்பிக்கிறான். இத்தனை சாதாரண விஷயத்துக்கு ஒருத்தன் அனுமதி கேட்டால் அதில் ஏதோ சூது இருக்கும் என்று சந்தேகப்படும் கிராம அதிகாரி, அந்த விண்ணப்பத்தைத் தாசில்தாருக்கு அனுப்புகிறார். தாசில்தாருக்கும் சந்தேகம் வரவே கலெக்டருக்கு அனுப்புகிறார். இதில் ஏதாவது கட்சித் தகராறு என்று பயப்படுகிற கலெக்டர், அரசு செயலருக்கு அனுப்புகிறார். அரசு செயலர் நமக்கேன் வம்பு என்று மந்திரியிடம் தள்ளிவிடுகிறார். அரசியல் சூழ்ச்சி இருக்கும் என்று மந்திரிக்குப் பயம். கடல் என்பது மத்திய அரசின் விவகாரம் என்று கூறி, டெல்லி மந்திரிக்கு அனுப்ப, டெல்லி மந்திரி சட்ட இலாகா செக்ரட்டரிக்கு அனுப்புகிறார். கடல் நீரைப் பயன்படுத்துவதில் தவறில்லை என்று மத்திய செக்ரட்டரி அனுமதி தர, வழக்கமான வரிசைப்படி அது கிராமத்துக்கு வந்து சேரும் போது கிழவி காலமாகிப் பத்து நாள் ஆகிறது.

முழு நேர நாடகங்கள், முழு நேரக் கதைகள் என்பதெல்லாம் டீவியில் அரிதாகி விட்ட இந்த நாளில், ஒரு நல்ல சிறுகதையைச் சொன்ன (பெயர் தெரியாத) வழக்கறிஞர் அவர்களே, மிக்க நன்றி.

“குண்டுப்பட்டியிலிருந்து கோமதி பேசறேங்க...!”



• காயத்ரி கிரீஷ்

அழகான இளம் பெண்ணொருத்தி நடுரோட்டில் வழி மறித்தால் எந்த விசுவாமித்திரரும் டூ வீலரை நிறுத்தி என்ன ஏது என்று விசாரிப்பார். Damsel in distress என்று எண்ணுவார். இந்த மனத் தத்துவத்தைப் புரிந்து கொண்டிருக்கிறார் ராஜ் டீவியில் ‘நீங்கள் கேட்ட’பாடலை வழங்கும் நங்கை நல்லாள். அவசரமாகப் போய்க் கொண்டிருப்பவரைத் தடுத்து ‘உங்களுக்குப் பிடித்தப் பாட்டு எது?’ என்று கேட்பதாவது பரவாயில்லை. அவர் கேட்க விரும்பும் பாட்டை ஒலிபரப்புவதற்கும் நன்றியே. ஆனால் வழி மறிக்கப்பட்டவரிடம் உங்கள் பெயர் என்ன, எங்கே வேலை பார்க்கிறீர்கள், எத்தனை குழந்தை, எங்க படிக்கிறார்கள் என்று அடுக்கடுக்கான கேள்விகளைக் கடுகடு சிடு சிடு என்று வீச வேண்டுமா? முகத்திலும் குரலிலும் கொஞ்சம் இனிமை கூட்டிக் கொண்டால் குறைந்தா போய்விடுவார்?

அன்று அவரிடம் மாட்டிக் கொண்ட ஓர் அப்பாவி, ‘தீனா’ படத்திலிருந்து ஒரு பாட்டைக் கேட்க ஆசைப்படுதாய்ச் சொல்லிவிட்டுச் சென்றான். லைலாவும் அஜீத்தும் பாடுகிற அந்தக் காட்சி காட்டப்பட்டபோது அவர் எங்கே இருந்தாரோ, என்னத்தைப் பார்த்தாரோ! Most probably இன்னொரு வழிப்பறி மங்கையிடம் சிக்கிக் கொண்டிருப்பார்.

வினோத்

எம்.ஜி.ஆர் ரசித்த

தேர்தலுக்குத் தேர்தல் கட்சி மேடைகளில் பேச்சுக்களோடு கைகோத்துக் கொண்டு வருபவை பிரசாரப் பாடல்கள். கடந்த நாற்பது வருடங்களுக்கு மேல் பிரசாரப் பாடல்கள் எழுதும் கவிஞர் பூவை. செங்குட்டுவனையும் (திமுக) புலமைப்பித்தனையும் (அதிமுக) சந்தித்தோம்.



• பூவை செங்குட்டுவன்

“தி.மு.க பிரசாரப் பாடல்களை 1967க்கு முன்பிருந்தே எழுதிக்கொண்டிருக்கிறேன். இதுவரை திரைப்படப் பாடல்கள் உட்பட ஐயாயிரத்துக்கும் அதிகமான பாடல்கள் எழுதியிருக்கிறேன். நான் எழுதிய பாடல்களைப் பாடி கலைஞர், ஸ்டாலின் ஆகியோர் மேடையில் நடித்திருக்கிறார்கள்” என்கிறார் பூவை செங்குட்டுவன்.

“பிரசாரப் பாடல்கள் எழுதுவதற்கு அன்றாட அரசியல், நாட்டுநடப்பு தெரிந்திருக்க வேண்டும். 'வெற்றி நிச்சயம்', 'கொள்கை முழக்கம்' போன்ற தலைப்பில் சமீபத்தில் நான் எழுதிய பிரசாரப் பாடல்கள் வெளி வந்துள்ளன. பாடல்களில் ஆபாசமும், தனி நபர் தாக்குதலும் இருக்கக் கூடாது என்பதில் கவனமாக இருப்பார் கலைஞர். ஒலிப்பதிவு செய்வதற்கு முன் அவரிடம் ஒருமுறை காட்டி விடுவேன். உடனுக்குடன் திருத்தம் செய்து தருவார். அடிப்படையிலேயே நான் கழக உடன்பிறப்பாக இருப்பதால் உணர்வுகளை வெளிப்படுத்துவது சுலபமாக இருக்கிறது. பாடல்களில் சாதனைகள் இருக்குமாறும் பார்த்துக் கொள்ளச் சொல்வார் தலைவர். இந்தத் தேர்தலுக்கு 'கந்தசஷ்டி கவசம்' பாணியில் 'கலைஞர் வெற்றிக் கவசம்' என்ற காஸெட் வர இருக்கிறது. 1996ல் ஜெயலலிதாவைக் கிண்டல் செய்த தேர்தல் பாடல்கள் நன்றாக மக்களிடம் எடுபட்டன.

“ஆனால் சில பாடல்கள் எக்காலத்திலும் நினைவில் நிற்கும். குறிப்பாக 'கருணையும் நிதியும் ஒன்றாய் சேர்ந்தால் கருணாநிதியாகும்' என்று நான் எழுதிய பாட்டு இன்றும் எல்லோராலும் ஒலிக்கப்படுகிறது. மக்களால் முணுமுணுக்கப்படும் பாப்புலர் பாடல்களின் மெட்டை ஜெராக்ஸ் எடுக்கும் பிரசாரப் பாடல்கள் சில காலம்தான் நினைவில் நிற்கும்.”

“வாசலிலே இரட்டை இலைக் கோலம் இடுங்கள்” என்ற பிரசாரப் பாடலை 1997ல் எழுதினேன். அப்போது எம்.ஜி.ஆர் ரேடியோவில் தேர்தல் பிரசார உரை நிகழ்த்தப் போனார். எம்.ஜி.ஆர் பத்து நிமிடம் பேசிவிட்டு மீதி இருந்த நேரத்தில் இந்தப் பாடலைப் போடச் சொல்லிவிட்டார். அது எனக்குக் கிடைத்த மிகப் பெரிய பெருமை” என்கிறார் கவிஞரும் கட்டுரையாளருமான புலமைப்பித்தன்! இதுவரை அ.தி.மு.க.வுக்காக நூற்றுக்கும் அதிகமான பிரசாரப் பாடல்களை எழுதியிருக்கிறார் இவர்.

“தேர்தலுக்குத் தேர்தல் ஒலிக்கும் இந்தப் பாடல்களுக்குத் திரைப்பாடல்கள் போல ஒரு நிரந்தரத் தன்மை இல்லை என்பதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். இந்தப் பிரசாரப் பாடல்கள் தொடர்ந்து ஒலிக்காமல் இருந்தாலும் அடிக்கடி வரும் தேர்தலுக்குத்

தேர்தல் ஒலிக்குமே! மேற் சொன்ன பாடலைத் தவிர, "புரட்சித் தலைவர் வழி நடப்போம்' என்று ஒரு பாடல் எழுதியிருக்கிறேன். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக அ.தி.மு.க மேடைகளில் இந்தப் பாடல்கள் தொடர்ந்து ஒலித்துக் கொண்டுதானே இருக்கின்றன.

1984ல் எம்.ஜி.ஆர் அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தபோது 'என் ரத்தத்தின் ரத்தங்களே... படுத்துக்கொண்டே கேட்கிறேன்'' என்று இவர் எழுதிய பாட்டு, கேட்கும்போதே கண்ணீர் வரவழைத்து விடுமாம்.

"இந்தப் பாட்டை ஆண்டிப்பட்டியில் பிரசாரத்தின்போது ஜெயலலிதா பாடினார். கூட்டம் மொத்தமும் கண்ணீர் வடித்து எமோஷனலாகிவிட்டார்கள். 1998 தேர்தலில் "கருணாநிதி ஆட்சியில் பணப்புழக்கம் இல்லை" என்பதைக் காட்டும் விதமாக 'ஐயா... உங்க ஆட்சியிலே... யாரு கையிலும் காசு இல்லை" என்று எழுதினேன். 1999ல் ஜெயலலிதா "ஏமாத்தி(ட்டு) போட்டீங்களே... வாஜ்பாய்" என்ற பாடலை மேடைக்கு மேடை பாடினார் அல்லவா! அதுவும் நான் எழுதியதுதான். இந்தத் தேர்தலுக்குப் பதினாறு பாடல்களை எழுதியிருக்கிறேன். உணர்வுபூர்வமாக கட்சியில் ஒன்றியிருப்பதால் என் பாடல்களில் எழுச்சியும், செய்திகளும் இணைந்தோடும்'' என்கிறார் புலமைப்பித்தன்.

பாடல்!

— கௌசி

படங்கள்: ராஜன்

• புலமைப்பித்தன்



நிலவரம் ரொம்பக் கலவரம்!



"கராத்தே' செல்வின் கொலையில் முதல் குற்றவாளியான கட்டதுரை சென்னையில் கொலை செய்யப்பட்டதை அடுத்து நெல்லை – குமரி மாவட்டங்களில் கலவரச் சூழல் தொடர்கிறது. தேர்தலின்போது அது வெடிக்கும் வாய்ப்பு இருக்கிறது'' என்று எச்சரிக்கை மணி அடிக்கிறார் காமராஜர்-ஆதித்தனார் கழகத் தலைவர் 'சிலம்பு' சுரேஷ்.

''நெல்லை மற்றும் குமரி மாவட்டங்களில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தைத் திருப்திப்படுத்த நாடார் இன இளைஞர்களின் மேல் பொய் வழக்குகள் போட்டு அவர்களை தினமும் சிறையில் தள்ளி வருகிறது போலீஸ். இது தவிர நாடார்களுக்குச் சொந்தமான தியேட்டர்கள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன. என்னுடைய தோட்டத்தில் இருநூறு தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தி விட்டார்கள். ஆனால் நாங்கள் அமைதி காத்து வருகிறோம். இந்த இரண்டு மாவட்டங்களில் நாடார் வோட்டுக்கள்தான் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும். அப்படியிருக்க இரண்டு அணியினருமே எங்களை அலட்சியப்படுத்தி வருகிறார்கள். எங்களை வன்முறை அமைப்பு என்று அவதூறு பேசுகிறார்கள்.

''மதுரையில் இருக்கும் சில ஜாதித் தலைவர்கள் நெல்லை – குமரி மாவட்டங்களில் தேர்தலையொட்டி வன்முறையைத் தூண்டிவிட திட்டம் போட்டு வருகிறார்கள். அவர்களது நோக்கம், தேர்தலில் நாடார்களை வோட்டுப் போட விடாமல் தடுப்பதுதான். அவர்களது சதித்திட்டத்தை முதல்வர் முதற்கொண்டு எல்லோருக்கும் தெரியப்படுத்தியிருக்கிறோம். தக்க நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் தேர்தலின்போது தென்மாவட்டங்களில் கலவரம் பற்றிக் கொள்ள வாய்ப்பிருக்கிறது'' என்கிறார் 'சிலம்பு' சுரேஷ்!

— ரமா

நீண்ட காலமாகவே த.மா.கா. தலைமையுடன் இருந்த கருத்து வேறுபாடுகளை வெளிப்படுத்தாமல் ரகசியம் காத்தார் ப.சிதம்பரம். த.மா.கா.வும் அதைப் பிரச்னையாக்கி வளர்க்கவில்லை. இப்போது பகிரங்கமாகியிருக்கும் வேறுபாடுகள் தொடருமா? பிறிதொரு அரசியல் சூழலில் மறையுமா? அதுவும் சிதம்பர ரகசியம்தான்!

'சிதம்பர' ரகசியங்கள்!

தற்காலிகமாக அவதாரம் எடுத்திருக்கிறது த.மா.கா. ஜனநாயகப் பேரவை. "வரும் தேர்தலில் தி.மு.க. அணிக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரம் செய்துவிட்டு மீண்டும் த.மா.காவுடன் இணைந்துவிடும் இந்த அமைப்பு'' என்று அறிவித்திருக்கிறார் சிதம்பரம். யாரும் எதிர்பாராத புதுவிதமான யுக்தி இது. "தனிக்கட்சி துவங்குவார். மூப்பனார் தம் கருத்துக்களை மறுபரிசிலனை செய்ய அவகாசம் தருவார். இந்தத் தேர்தலில் அமைதியாக இருந்து விடுவார். தாம் மட்டும் பா.ஜ.க. வுக்குச் சென்றுவிட்டு, தன் சிஷ்யர்களுக்குத் தி.மு.க. அணியில் சீட்டு வாங்கிக் கொடுத்து விடுவார்'' என்றெல்லாம் சிதம்பரத்தைச் சுற்றி வதந்திகள் வர, த.மா.கா. தலைமைக்கு எதிராக அதிரடியாகக் காய்களை நகர்த்தியிருக்கிறார்.

கட்சிக் கட்டுப்பாட்டை மீறி விட்டார் சிதம்பரம். எனவே அவர்மீது த.மா.கா. தலைமை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, இப்போது கட்சித் தலைமைக்கு 'அழுத்தம்' கொடுக்கப்படுகிறது. "விவகாரத்தைக் கொஞ்சம் ஆறப் போடுங்கள்'' என்று வழக்கமான தமது பாணியில் மூப்பனார் செயல்பட நினைக்கிறார்.

த.மா.கா.வில் மூப்பனாருக்கு அடுத்தபடியான தலைவராக இருந்த சிதம்பரத்துக்கும் அவருக்கும் இடையில் பள்ளம் விழுந்தது எப்படி? பொதுவாகவே தமிழ் மாலைப் பத்திரிகைகள் எதிர்பார்க்கும் "பரபரப்பு'' தீனியைக் கொடுக்கும் அரசியல்வாதியல்ல சிதம்பரம். அரசியல் என்பது மக்களுக்குச் சேவை செய்யக் கிடைத்த வாய்ப்பாகப் பயன்படுத்த வேண்டுமே தவிர அதையே பிழைப்பாகக் கொள்ளக் கூடாது என்று சொல்பவர்.

தினசரி கட்சி தலைமை அலுவலகத்திற்குச் சென்று அரட்டைக் கச்சேரி நடத்தி, அடுத்தவர் தலைகளை உருட்டும் கலை அவருக்குத் தெரியாது. உருப்படியாகப் பேச முடியாதவர்கள் அவருடன் தொடர்ந்து பேச முடியாது. எதாவது இசகு பிசகாகப் பேசினால் அவரிடம் வாங்கிக் கட்டிக் கொள்ள நேரிடும். முடிவுகளை எடுக்க மிகவும் யோசிப்பார். எடுத்துவிட்டாரென்றால் அதிலிருந்து மாறுவது அபூர்வம். இப்படி ஒரு கண்டிப்பான அரசியல்வாதியாக இருப்பதால் அவரை 'அறிவு ஜீவி' தலைவராக பிரகடனம் செய்து தொண்டர்களுக்கும் அவருக்கும் இடை வெளியை உண்டாக்கினார்கள்.

"ஜெயித்தால் அமைச்சர்; தோற்றால் கறுப்பு கோட்டு போட்டுக்கொண்டு கோர்ட்டுக்குப் போய் விடுவார். இங்கே அடி மட்டத்தில் அரசியல் நடத்தும் நாங்கள் அல்லவா நெளிவு சுளிவு அறிந்து நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது'' என்று சொன்னார் த.மா.கா. (மூப்பனார்) சட்டமன்ற உறுப்

பினர் ஒருவர்.

கட்சியை உருவாக்குவதிலும் வளர்ச்சியிலும் சிதம்பரத்தின் பங்களிப்பை மூப்பனார் என்றுமே குறைத்து மதிப்பிட்டதில்லை. சிதம்பரத்தால் த.மா.கா.வுக்குக் கண்ணியம் கூடுகிறது என்று உறுதியாக நம்பினார் அவர். சிதம்பரமும் மூப்பனாரை 'தந்தை' ஸ்தானத்தில் வைத்துப் போற்றினார். எங்கே பிரச்னை உருவெடுத்தது?

1999ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து தமது வழக்கறிஞர் வேலையைப் பார்க்கப் போய்விட்டார் சிதம்பரம். முக்கியமான கட்சிக் கூட்டங்களில் தவறாமல் கலந்து கொண்டார்.



"மூன்று சட்டமன்ற இடைத் தேர்தல்களில் அ.தி.மு.க.வுக்கு ஆதரவு" என்று மூப்பனார் அறிவித்தபோதுதான் அதிருப்தியின் முதல் மூச்சு சிதம்பரத்திடம் இருந்து வெளிவந்தது. த.மா.கா.வின் அடிநாதமே ஜெயலலிதா எதிர்ப்புதான். அப்படியிருக்க எந்தவிதத்திலும் தம்மைத் திருத்திக் கொள்ளாத ஜெயலலிதாவுக்கு ஆதரவு தருவது தவறு என்று அவர் கருதினார். தாம் தொடர்ந்து சென்னையில் இல்லாமல் இருப்பதால் 'மூப்பனாரை' தாங்கள் இழுத்த இழுப்புக்குக் கொண்டு செல்லும் ஒரு "கூட்டணி" கட்சிக்குள் தயாராகிவிட்டதை உணர்ந்தார் சிதம்பரம். கட்சி எந்த திசையை நோக்கிச் செல்கிறது என்பது புரிந்துவிட்டது அவருக்கும்.

ஒரு கூட்டத்தில் சிதம்பரம், "எந்த ஆட்சிக்கும் த.மா.கா. ஒரு கடிவாளம் போன்று இருக்க வேண்டும். எனவே யாருடன் கூட்டு சேர்ந்தாலும் அதிகாரத்தில் பங்கு என்பதை வலியுறுத்த வேண்டும். தி.மு.க.வுக்கும் அ.தி.மு.க.வுக்கும் பெரிய வித்தியாசம் இல்லை. 'அ' மட்டும்தான் வித்தியாசம்" என்று பேசினார்.

"1996 தேர்தலில் ஜெயலலிதா சிதம்பரத்தைக் கீழ்த்தரமான அரசியல்வாதி, சாதாரண வக்கீல், விந்தை மனிதர் என்றெல்லாம் ஏசியிருக்கிறார். இதையெல்லாம்விட மிக மோசமாக "ராஜீவ் காந்தி கொலையில் மூப்பனாருக்கும் சம்பந்தம் இருக்கிறது" என்று பிரதமர் நரசிம்ம ராவ் முன்னிலையில் அபாண்டமாக குற்றம் சாட்டியவர்தான் ஜெயலலிதா. கடந்த கால வரலாறு இப்படி இருந்தும் கூட, ஜெயலலிதாவுடன் கூட்டணி அமைக்கும் பட்சத்தில் "அதிகாரத்தில் பங்கு, குறைந்த பட்ச வேலை திட்டம், வழிகாட்டும் நெறி முறைகள், ஆகியவற்றைப் பற்றி பேசி முடிவெடுக்க வேண்டும்" என்று மூப்பனாரிடம் மூன்று மாதத்திற்கு முன்பாகவே கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டுப் போய்

விட்டார் சிதம்பரம்.

"தம்முடைய கருத்துக்களைக் கட்சி சீரியஸாக எடுத்து விவாதித்து முடிவுக்கு வர வேண்டும்" என்று சிதம்பரம் கருதியிருந்தால் தேர்தல் பணிக்குழு கூட்டங்களில் ரெகுலராக கலந்துகொண்டு அவற்றை வற்புறுத்தியிருக்க வேண்டும். கட்சியில் மூப்பனாருக்கு அடுத்த தலைவராக இருக்கும் சிதம்பரம் பல கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லையே" என்கிறார் மூத்த த.மா.கா. பிரமுகர்.

"தி.மு.க. இந்தத் தேர்தலில் ஜெயிக்காது. எனவே நாம் ஜெயலலிதாவுடன் கூட்டணி வைத்துக் கொள்ள வேண்டும் என்கிற ஜெயந்தி - எஸ்.ஆர்.பி. கூட்டணியின் வாதம், உடல் நலமில்லாத மூப்பனாரை வளைய வைத்திருக்கிறது. அவர்களது வாதத்திற்கு எதிரான வலுவான வாதம் வைக்க தேர்தல் பணிக் குழுவினர் தவறி விட்டார்கள். அல்லது அமைதியாக்கப்பட்டார்கள். "99 பாராளுமன்றத் தேர்தலில் மூன்றாவது அணியினை மக்கள் தேர்ந்தெடுக்கவில்லை" என்று சொத்தை வாதத்தை வைத்து இந்தத் தேர்தலில் அந்த வாய்ப்பை ஒதுக்கினார்கள். பாராளுமன்றத் தேர்தலை கணக்கில் எடுத்துக் கொள்ளக்கூடாது. ஒரு சட்டமன்றத் தேர்தலில் தனிக்கட்சியாகப் போட்டியிட்டிருக்க வேண்டும். அது சாத்தியமில்லை என்று கருதியிருந்தால், ஜெயலலிதாவிடம் ஆட்சியில் பங்கு குறித்து அடித்துப் பேசி சம்மதிக்க வைத்திருக்க வேண்டும். அதைவிட்டு விட்டு சீட்டுகளின் எண்ணிக்கை ஏற்றுவதற்கு மட்டுமல்லவா பேரம் செய்திருக்கிறார்கள். நம்முடன் கூட்டணி கொள்ள ஏங்கியவர் ஜெயலலிதாதான். அவருக்குத்தான் இந்தத் தேர்தல் 'வாழ்வா, சாவா' பிரச்னை. கேவலம் பா.ம.க.வினர் கூட தாங்கள் நினைத்தபடி பாண்டிச்சேரி விவகாரத்தில் ஜெ.வை பணிய வைத்திருக்கிறார்கள். நம்மால் முடியவில்லை என்றால் எப்படி." என்பதுதான் சிதம்பரத்தின் வேதனை.



படம் : ஞானம்

ஜெயலலிதாவால் நல்லாட்சி கொடுக்க முடியாது... என்ற சிதம்பரத்தின் ஆணித்தரமான பேச்சு இனி மேடைக்கு மேடை ஒலிக்கும்.

த.மா.கா.வின் மேல்மட்டப் பிரமுகர்கள் சிலர் ஜெயலலிதாவிடம் விலை போய்விட்டார்கள் என்பது சிதம்பரத்தின் அழுத்தமான நம்பிக்கை.

தில்லியில் இருந்த தம்மை சோனியாவுடன் தொடர்பு கொள்ளச் சொல்லாமல், ஜெயந்தியை அனுப்பியதும் சிதம்பரத்துக்கு வருத்தம்தான். மூப்பனாருக்கு அடுத்த நிலையைப் பிடிக்க சிலர் முயல்வதை அறிந்துகொண்டார் அவர். 'தேர்தல் பணிக்குழு விவகாரம் கையை விட்டுப்போய்விட்டதே' என்று இப்போது வருத்தப்படுகிறார் சிதம்பரம்.

தமது கோரிக்கைகளை மூப்பனார் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று மனப்பூர்வமாக நம்பினார் சிதம்பரம். எனவேதான் அவரது ஆதரவாளர்களின் உணர்ச்சிபூர்வமான குமுறல்களைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. இதற்கிடையில் மூப்பனாரின் உடல்நிலை பற்றி கேள்விப்பட்ட சிதம்பரம், அவரைப் பார்க்க முடியாத சூழலில் தாம் இருப்பதைக் கண்டு

நொந்துபோய்விட்டார். 'அவருக்குப் பேரன் பிறந்திருக்கிறான்' என்று செய்தி வர கிளம்பிவிட்டார்.

மூப்பனார் - சிதம்பரம் சந்திப்பு மிகவும் உணர்ச்சிமயமாக இருந்தது. பனிப்பாறைகள் நொறுங்கி, சமாதானத் திட்டம் தயாரானது. 'குறைந்தபட்ச வேலைத் திட்டம், அ.தி.மு.க கூட்டணி வெற்றி பெற்றால் ஜெயலலிதா தகுதி பெறாத பட்சத்தில் யார் முதல்வர்' என்பது போன்ற விஷயங்கள் அ.தி.மு.க. வுடன் விவாதிக்கப்படும் என்று த.மா.கா தரப்பிலிருந்து அறிக்கை விடுவதென்றும் அதைத் தொடர்ந்து சிதம்பரம் அமைதி காத்து அணியின் வெற்றிக்கு உழைக்க வேண்டும் என்றும் முடிவாகியது. அறிக்கையை எடுத்துக் கொண்டு சிதம்பரத்தின் வீட்டுக்கு வந்தார் செய்தி தொடர்பாளர் கோபண்ணா.


'ஜெயலலிதா தேர்தலில் போட்டியிடும் தகுதியிழப்பாரேயானால், அடுத்து யார் முதல்வர்' என்ற பாயிண்ட் மட்டும் அறிக்கையில் இல்லாதது கண்டு, அதைச் சேர்க்கச் சொன்னார் சிதம்பரம். அறிக்கை மீண்டும் மூப்பனார் கைக்குப் போயிற்று. அம்மாவுக்கு ஆதரவான த.மா.கா பிரமுகர்கள் 'உடன்பாடு எட்டிவிட்ட நிலையில், இப்போது இந்தப் பிரச்னைகளை எடுத்தால் ஜெயலலிதாவுக்குக் கோபம் வரும். எனவே இனி எந்தப் பிரச்னை என்றாலும் தேர்தலுக்குப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்று வற்புறுத்திச் சொல்லவே, அறிக்கை முடக்கப்பட்டது; கோபமடைந்த சிதம்பரம் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்து விட்டார்! அவரைப் பொறுத்தமட்டில் எதிர்ப்பை முழுமைபடுத்தியாக வேண்டும். அரை கிணற்றைத் தாண்டி நின்று முழி பிதுங்கக் கூடாது.

'த.மா.கா.வில் தலைவர் இருக்கிறார்; தலைமை இல்லை' என்று சிதம்பரம் சொன்னதில், ஆயிரம் பொருள் பொதிந்திருக்கிறது. உடல் நலமில்லாத மூப்பனார் தேர்தலுக்குப் பின்னர் கட்சியை காங்கிரசுடன் இணைக்க விரும்புகிறார். ஆனால் 90 சதவீத த.மா.கா தொண்டர்களுக்கு காங்கிரசுடன் இணைய விருப்பமில்லை. எனவே த.மா.கா ஜனநாயகப் பேரவை என்ற அமைப்பின் மூலம் கட்சியில் சிலர் காங்கிரசில் இணைந்தாலும் பிற்காலத்தில் த.மா.கா என்ற அமைப்பு தம் கையில் இருக்கும்படியான வாய்ப்புக்கு வழி வகுத்திருக்கிறார் சிதம்பரம். தமது ஆதரவாளர்களுக்கு தி.மு.க அணியில் சீட்டு வாங்கியும் கொடுத்து விட்டார். ஊழல் சக்தியில் மாட்டிக் கொண்டுவிட்ட பா.ஜ.கவை பற்றியும் இனி நினைக்க மாட்டார். எந்த பக்கத்திலிருந்து ஆதரவு வந்தாலும் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையிலிருக்கும் தி.மு.க.வுக்கு ஒரு பூஸ்ட். 'ஜெயலலிதாவால் நல்லாட்சி கொடுக்க முடியாது...' என்ற சிதம்பரத்தின் ஆணித்தரமான பேச்சு இனி மேடைக்கு மேடை ஒலிக்கும். எத்தனையோ அரசியல் முடிச்சுகளை அவிழ்த்து விட்டிருக்கும் மூப்பனாருக்கு சிதம்பரம் பிரச்னை ஒரு சவால்தான். சிலரின் துர்ப்போதனைகள் காரணமாக பதற்றத்தில் சிதம்பரத்தையும் அவரது ஆதரவாளர்களையும் கட்சியில் இருந்து தூக்கி எறிய முயன்றால் விஷயம் இன்னும் சிக்கலாகி விடும். சிதம்பரத்தின் அதிரடியைக் கண்டு தேர்தல் சமயத்தில் மௌனமாகவும் இருந்து விட முடியாது. வாக்கு வங்கியை அது பாதிக்கக் கூடும். ஆனால் கட்சியை காங்கிரசுடன் இணைக்கும் பேச்சு உண்மையிலேயே ஸீரியஸாக இருந்தால், 'சிதம்பரம் எப்படியோ போகிறார்' என்று மூப்பனார் தமது வழக்கமான மௌனத்தை கடைபிடிப்பது தான் சிறந்த வழி.

"தமது உடல்நலத்தைக் காரணம் காட்டி, தலைவர் மூப்பனார் உடனடியாக சிதம்பரத்தை கட்சியின் செயல்தலைவராக நியமிக்க வேண்டும். தேர்தல் அறிவிக்காத இப்போதைய நிலையில்கூட நல்லாட்சி தரக் கூடிய தி.மு.க - த.மா.கா கூட்டணியை அமைக்கும் சாதுர்யம் சிதம்பரத்துக்கு உண்டு" என்று நம்பிக்கையுடன் சொல்கிறார் அவரது அணுக்கத் தொண்டர் ஒருவர்.

- ப்ரியன்

அட்டை வண்ணப்படம் : **ஸ்ரீஹரி**



"உங்க வீட்டு வேலைக்காரி ரெண்டு பேருக்கும் 'காலை மலர், மாலை மலர்'னு பேர் வச்சிருக்கீங்களாமே?"

"ஆமா... காலை மலர், முதல் நாள் இரவு வரைக்கும் நடந்த அக்கம்பக்க வம்புகளைச் சொல்லுவா, மாலை மலர், அன்றைய பகல் வம்புகளைச் சொல்லுவா!"

- சீர்காழி வி ரேவதி

கண்ணன் கழலிணை எண்ணும்
மனமுடையீர்
எண்ணும் திருநாமம் திண்ணம்
நாரணமே!

இந்தப் பாசுரம் ஒன்று தெரிந்தால் போதும். வேறு எதுவுமே வேண்டாம் என்றேன். அதற்காக மீதியைத் தெரிந்து கொள்ளாமல் விட்டுவிட வேண்டும் என்று அர்த்தமில்லை! இந்த ஒரு பாசுரத்துக்கு அத்தனை மகிமை என்று அர்த்தம்.

அந்தக் காலத்திலே, தமிழ் இலக்கியங்களெல்லாம் சங்கப் பலகையிலே ஏறவேண்டும் என்று ஏற்பாடு இருந்தது. மதுரை மாநகரத்திலே பொற்றாமரைக் குளத்திலே அந்தச் சங்கப் பலகையில் ஏறினால்தான் இலக்கியம் என்று கொண்டாடுவார்கள்.

அதனால் மதுரகவி ஆழ்வார், இந்த நம்மாழ்வாருடைய ஸ்ரீசூக்திகள், பாசுரங்கள் எல்லாவற்றையும் உருக்கமாகச் சொல்லிக் கொண்டே அங்கே போனபோது, அவர்கள் அவமதித்தார்கள்! "உங்கள் ஆழ்வாருடைய பிரபந்தம் சங்கப் பலகை ஏறிற்றா...?" என்றார்கள்!

அப்போது அந்த ஆழ்வார் ரொம்ப வருத்தத்தோடு போய்த் திருக்குருகூரிலே இருக்கும்படியான நம்மாழ்வாரிடம் சொல்கிறார் நடந்த விஷயத்தை. அப்போது இந்த ஒரு பாசுரம் அவருக்கு உபதேசம் பண்ணப்பட்டது. இந்த ஒரு சுலோகம் எழுதிக் கொடுக்கப்பட்டது நம்மாழ்வாரால். அதை எடுத்துக் கொண்டு வந்து சங்கப் பலகையிலே வைத்தார் அவர்.

கண்ணன் கழலிணை எண்ணும்
மனமுடையீர்;
எண்ணும் திருநாமம் திண்ணம்
நாரணமே–

இதை வைத்தவுடனே மீதியெல்லாம் கீழே தள்ளப்பட்டுவிட்டது! இது ஒன்றே மேல் நின்றது.

அப்படியானால் இதற்கு என்ன அர்த்தம்? அந்தக் கண்ணன் கழலிணை, எம்பெருமான் திருவடியை, நாம் அடையவேண்டும் என்றால் நாம் எதைச் சொல்ல வேண்டும்...? எதை நினைக்க வேண்டும்...?

நாராயணா என்னும் நாமத்தை நினைக்க வேண்டும்!

அந்த ஒரு நாமம் போதுமே அவனை அடைவதற்கு... ஆயிரம் நாமங்கள் எதற்கு? என்று இங்கே காட்டித் தரப்படுகிறது.

ஆனால் அதே ஆழ்வார்தான் 'பேராயிரம் கொண்டதோர் பீடுடையான்' என்று அவனைப் பாடுகிறார். அவனுடைய ஒரு திருநாமம் பிரகாசிக்க வேண்டுமானால் ஆயிரம் திருநாமம் பேசி அவன் பெருமையைப் பேசுங்கள் என்கிறார்.

பலபலவே ஆபரணம் பேரும் பலபலவே!

இன்னொரு இடத்தில் 'தமருகந்த தெப்பேர் அப்பேர்' என்று அவன் பெயர் குறித்துச் சொல்கிறார் ஆழ்வார். நாம் எந்த பெயரை உவந்து அழைத்தாலும் அந்தப் பெயரில் அவன் குடிகொள்கிறான் என்கிறார்!

அர்ச்சாவதார சௌலப்யம் இது. பாருங்கள்... ஒரு சிற்பி... பெரிய கல் ஒன்றைப் பார்க்கிறான். அதிலே அழகாக திருவேங்கடமுடையான் வடிவம் பண்ண முடியுமே என்று பார்க்கிறான். உடனே அந்தக் கல்லை எடுத்துக்கொண்டு போய் பட்டறையிலே போடுகிறான்; செதுக்குகிறான். அவன் ஹஸ்தத்திலே பகவான் உட்கார்ந்திருக்கிறான் என்கிறது



முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

வேதம். உளியினால் செதுக்குகிறான்- அழகான வடிவு! உடனே அதற்குப் பெயர் ஸ்ரீநிவாஸன்! நாமே விக்ரஹத்துக்குப் பெயர் வைத்து, ஆகம சாஸ்திர ரீதியாகப் பிரதிஷ்டை பண்ணுகிறோம். கொஞ்ச நாளில் என்ன ஆகிப்போகிறது...? அங்கே, திருப்பதியிலே, பண்ணமுடியாததெல்லாம் இங்கே பண்ணலாம் என்கிறார்கள்! எங்கே பண்ணினாலும் அதே பலன் ஏற்பட்டுப் போய்விடும் என்கிறார்கள். இவ்வளவு சக்தி அந்த விக்கிரஹத்துக்கு ஏற்பட்டுப் போய் விட்டதே!



அருள்வாக்கு

என்ன கார்யம், கடமை பண்ணினாலும் பாரத்தை அவன் தலையில் போட்டு விட வேண்டும். பட்டுக் கொள்ளாமல், ஆனாலும் பெர்ஃபெக்டாகப் பண்ண வேண்டும். இதுதான் நிஷ்காம்ய கர்மா. அவன் தலையில் போடுவது என்பதுதான் பக்தி. அப்புறம் அவனுடைய தலையிலே போட எந்தப் பாரமும் இல்லாமல் ஜீவனுடைய கர்மச் சுமை முழுதும் தீர்ந்து போய்விடும். 'தான் எதுவும் பண்ணாதவன், தன்னை எதுவும் என்னவும் பண்ண முடியாது' என்ற நிலைக்கு ஜீவன் வாஸ்தவமாகவே போய் விடுவான்.



அப்புறம் இவனுக்குப் பாரம் தெரியாமலே ஈச்வரன் இவன் மூலமாக லோக க்ஷேமத்துக்காக அநேக கார்யங்களைச் செய்தாலும் செய்விக்கலாம். ஜனகர் ராஜ்ய "பாரம்" வஹித்ததுகூட இப்படித்தான். ஆனால் அவருக்கு அது பாரமாகவோ, தாம் அதை வஹிப்பதாகவோ எண்ணம் இருந்தே இருக்காது. 'தூக்கத்தில் பால் குடிக்கிற குழந்தை' என்று சொன்னாற் போல கார்யம் செயவதாகத் தெரியாமலே செய்கிற உத்தம நிலை அது. இப்போது நமக்குக் கொஞ்சமும் எட்டாத நிலை.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

ஆகையினாலே, நாம் வைத்த பெயரை ஏற்கிறான் அவன். பக்த பராதீனனாய் இருக்கிறான்.

"ஸ்ரீநிவாஸன் என்று உனக்குப் பெயர் வைக்கிறேன்..." என்றால் சுலபமாக சரி என்கிறான்.

எவ்வளவு சுலபமாக ஏற்கிறான் பாருங்கள்–

"நீ இந்த உருவத்திலே, இங்கேயே இருக்க வேண்டும்..."

"இருக்கேன்!"

"நீ அனுக்கிரஹம் பண்ணவேண்டும்."

"பண்ணுகிறேன்."

இவ்வளவு சௌலப்யம் எங்கே கிடைக்கும்!

லோக புத்தியினாலே, ஒரு விக்ரஹத்தைப் பார்த்து நாம் இது பஞ்ச லோகத்தினால் ஆனது என்றோ, கல்லால் ஆனது என்றோ, இது சாளக்கிராமத்தினால் ஆனது" என்றோ சொல்ல ஆரம்பித்தால், அந்த விக்ரஹத்தை பகவானாகப் பார்க்காமல் அது எதனால் சமைக்கப்பட்டது என்று பார்த்து எடை போட ஆரம்பித்தோமானால் அப்படிப் பார்க்கிறவனுக்கு இருபத்தோரு நரகத்திலேயும் சித்திரவதை உண்டு என்கிறது சாஸ்திரம்!

தம்முடைய ஆசார்யரிடத்திலே எவனுக்கு மனுஷ பாவனை ஏற்படுகிறதோ... அவரும் நம்மைப் போல் மனிதராயிற்றே, அவருக்கும் நம்மை மாதிரி மூக்கு இருக்கிறது, ஜலதோஷம் வருகிறது, அவருக்கும் தான் தொண்டை கட்டிக் கொள்கிறது– என்று ஆசார்யனை தனக்கு நிகரான மனிதனாகப் பார்க்க ஆரம்பித்தால் அப்படிப்பட்டவன் பரம நரகத்தை அடைவான் என்று பிரும்மாண்டபுராணத்தில், விஷ்ணு தர்மத்தில் பல கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட எண்ணமே வரக்கூடாது.

அதேபோல் பகவானிடத்திலும் ஆராய்ச்சி வரக்கூடாது. நாம் சொல்கிற மாதிரி பகவான் நடக்கிறானா இல்லையா? இந்த விக்ரஹத்திலே இரு என்றால் இருக்கிறான்; இந்தப் பெயர் உனக்கு என்றால் அந்தப் பெயரையும் ஏற்கிறான். நாம் கூப்பிடுவதற்கு யோக்யதையாக அல்லவா அந்தப் பெயரை அவன் ஏற்கிறான்.

ஆகையினாலே, அந்தப் பெயர் இருக்கிறதே... அது பரம சுலபம். அந்த நாம சங்கீர்த்தனம் அவனை அடைவதற்குப் பரம சுலபமாக நம் வசம் இருக்கிறது. ஏழை-எளியவர்கள் எல்லோருமே சொல்லக் கூடியதாக இருக்கிறது.

'ராமா' என்று சொல்வதற்கு என்ன பயிற்சி வேண்டும்! அதனால்தான் அவனைக் காட்டிலும் அவன் திருநாமங்கள் மங்களமானவை என்று சொல்லப்பட்டது.

அப்படியானால் சஹஸ்ரநாமம்–ஆயிரம் திருநாமம் எதற்கு என்று கேட்டால், ஆயிரம் என்பது எண்ணிக்கைக்காகச் சொல்லப்பட்டது அல்ல என்கிறது விஷ்ணு தர்மம் என்ற நூல். ஆயிரம் என்பது அளவிட முடியாதது என்று அர்த்தம்.

சுவாமி தேசிகன் பாதுகா சஹஸ்ரம் என்று பாதுகையைக் குறித்து எழுதினார். "ஹே பாதுகையே! உன்னைக் குறித்து ஆயிரம்தான் சொல்ல முடியுமா? கோடி சொல்லுவேன்! கோடி சொன்னால் போதுமா? பத்து கோடி சொல்லுவேன்! பத்து கோடி சொன்னால்

ஸ்ரீ காமாக்ஷி ஸ்துதி:

சுந்தரி சௌந்தரி நிரந்தரி
சிவ சிவா மகேஸ்வரி பரமேஸ்வரி
சிரோன்மணி மனோன்மணி நீயே!
அநாத ரக்ஷகி தாயே!
அருள் பாலிப்பாயே
அம்மை காமாக்ஷி உமையே!



இந்த இதழுடன் அன்பளிப்பு:
ஸ்ரீ பங்காரு காமாக்ஷி அம்மன்
அடுத்த வார அன்பளிப்பு:
திருவையாறு தர்மசம்வர்த்தினி வண்ணப்படம்

போதுமா...? நூறு கோடி, ஆயிரம் கோடி, கோடி, கோடி, கோடி... எழுதுகிறேன் என்றே வைத்துக் கொள்... அப்படியும் உன்னைக் குறித்துச் சொல்லி முடிக்க முடியுமோ? முடியாது! கோடி சொல்லியும் பாதுகா பிரபாவத்தை முடிக்க முடியாது என்று இருப்பதைக் காட்டிலும் ஓர் ஆயிரத்துக்குள்ளே சொல்லி நிறுத்துகிறேன்'' என்கிறார்.

அந்த மாதிரி தான் பகவான் நாமத்தைச் சொல்லி முடிப்பதும்... முடியாத காரியம். அதனாலே, எல்லோரும் சொல்லக்கூடியதாக, அரை மணி நேரத்திலே அடங்கக் கூடியதாக ஆயிரம் திருநாமங்களை பீஷ்மாச்சார்யார் ஏற்படுத்தினார்.

எந்த விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் அதற்கு ஒரு பிரமாணம் வேண்டும். பெரியோர்களால் சொல்லப்பட்டிருக்கிறதா? பெரியோர்கள் அதை அங்கீகரிக்கிறார்களா...? பிரும்ம வித்துக்கள் ஒப்புக் கொள்கிறார்களா...?

நாமாக ஆரம்பித்து ஒன்றைப் பண்ணக் கூடாது.

அந்த மாதிரி, பெரியோர்களால், ரிஷிகளால் அங்கங்கே கவனம் பண்ணப்பட்ட சொல்லப்பட்ட, திருநாமங்களையெல்லாம் ஒன்று சேர்த்து நமக்குக் கோர்வையாகக் கொடுத்திருக்கிறார் பீஷ்மாச்சார்யார். அழகாக, புஷ்பங்களையெல்லாம் மாலை தொடுத்துக் கொடுக்கிற மாதிரி, மணிகளையெல்லாம் கோத்து மாலை கட்டுகிற மாதிரி... தொடுத்து கொடுத்திருக்கிறார்.

அதற்காக இவ்வளவுதான் ஆயிரம் நாமம் தான் என்று நினைத்துவிடாதீர்கள்... சஹஸ்ரம் என்பது சர்வநாம ஸாரம்!

பகவானுடைய அத்தனை திருநாமங்களுக்கும் பஸராமாய் அமைந்திருக்கிறது சஹஸ்ர நாமம்.

ஸூக்ஷ்மமாய் அமைந்திருக்கிறது. அவனுடைய எளிமையைக் காட்டவே எளிமையாய் அமைந்திருக்கிறது. சின்னதேயானாலும் அவன் பெருமையைக் காட்டக்கூடியது. எவ்வளவு சரளமாய் அமைந்திருக்கிறது! ஒருமுறை மகான்களிடத்திலே போய்க் கேட்டு சரியாக நெட்டுரு பண்ணி விட்டால் அப்புறம் தூக்கத்தில் கூட சொல்லிவிடலாம்!

ஒருத்தர் தூங்கிக் கொண்டே இருந்தார். தூக்கத்தில் பார்த்தால்கூட வாய் அசைகிறது. சஹஸ்ரநாமம் சொல்லிக் கொண்டிருக்கிறது! புத்தி வேலை செய்யவில்லை, மனம் வேலை செய்யவில்லை, ஆனால் உதடு அசைகிறது. சொல்லிக் கொண்டேயிருக்கிறது!

அதனால்தான் 'துஞ்சும்போது அழைமின் துயர்வரில் நினைமின்' என்கிறார் ஆழ்வார்.

நாராயணா என்னும் நாமத்தைத் தூக்கத்திலே கூட ஒருவர் சொல்லிக் கொண்டேயிருக்கிறார். அவசரமாக-தன்வயமின்றிச் சொல்கிறார். இன்னொருத்தர் சங்கேதமாகச் சொல்கிறார்- ''மலை மேலே ஒருத்தன் இருப்பானே, அவன்!'' என்கிறார். மலை மேலே யார் இருக்கிறார்கள்?... திருவேங்கடமுடையான். ''கிருஷ்ணா தடத்திலே இருக்கிறானே, அவன்!'' என்கிறார்- அவனை நேரே யோகானந்த லக்ஷ்மி நரசிம்ஹன், மட்டபல்லி நாதன் பிரணதோஸ்மி நித்யம்'' என்று சொல்லமாட்டேன் என்கிறார். இப்படிச் சங்கேதமாகக் குறிப்பிடுகிறார். ஆனால் பகவானையே குறிப்பிடுகிறார்.

அந்த அர்ஜுனன் இருக்கிறானே, அவன் அந்த எம்பெருமானின் தோள்மேல் கை போட்டுக் கொண்டு தோழனாக, பல வார்த்தைகளில் அவன் திருநாமத்தைச் சொன்னான். அவனோடு அர்ஜுனனோடு- தோழமை கொண்ட மாதிரி பகவான் வேறு யாரோடு கொண்டான்?... அர்ஜுனனுக்கு அவ்வளவு நட்புரிமை! பகவானுடைய திருநாமத்தைச் சுலபமாகச் சொல்லிவிட்டான் அவன். மகான்களெல்லாம் பயந்து கொண்டு சொன்னார்கள். அர்ஜுனனோ பகவானிடத்திலே பூரணமாக ஈடுபட்டு விட்டான். எப்பேர்ப்பட்ட தோழமை அவனுக்கு வாய்த்தது!

வேறு ஒருவர்... அவர் பகவானை நினையாமலே அவன் நாமத்தை மட்டும் சொல்கிறார்... அவர் கதி என்ன ஆகும்? அடுத்த வாரம் வரை காத்திருந்து தெரிந்து கொள்ளுங்கள்.

(வளரும்)

வி.பி. சிங் பேட்டி

கதிரியக்க சக்தி படைத்தவர்கள்!



"உடல் நிலை காரணமாக, தீவிர அரசியலிலிருந்து விலகியிருந்த நீங்கள், மறுபடி பொது வாழ்க்கையில் ஆர்வம் காட்டி வருகிறீர்களே! என்ன காரணம்?"

எனது பொது வாழ்க்கை பல்லாண்டுகளுக்கு முன்பே துவங்கிவிட்டது. எங்கள் ஊரில், பெண்கள் பள்ளிக் கூடம் கட்டுவதற்கு நிலம் தேவைப்பட்டபோது, எந்த விதத் தயக்கமும் இல்லாமல், எங்களுக்குச் சொந்தமான நிலத்தைக் கொடுத்தவன் நான். அரசியல் வாழ்க்கை இடையில் வந்தது. உடல்நிலை காரணமாக, அரசியலில் தீவிரமாய் ஈடுபட முடியாமல் போனது. இப்போதும் டயாலிஸிஸ் செய்து கொண்டுதான் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கிறேன். அதற்காக ஓய்வெடுக்க விரும்பவில்லை. ஒரு நாள் விட்டு ஒரு நாள் டயாலிஸிஸ் செய்து கொள்ள டெல்லி ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டியுள்ளது. இடைப்பட்ட நாட்களில் பொது

நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுகிறேன்.

நாடு முழுமைக்கும் பொறுப்பான பிரதமராக இருந்த நீங்கள் இப்போது, குடிசைப் பகுதி மக்களுக்காகப் போராடும் சிறிய வட்டத்தில் சிக்கிக் கொண்டு விட்டீர்களே!

குடிசைப் பகுதி மக்கள் குறித்த அக்கறை எனக்கு எப்போதுமே உண்டு. நான் பிரதமராக இருந்தபோது, மத்திய அமைச்சரவையில், நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சராக இருந்தவர் முரசொலிமாறன். குடிசைப்பகுதிகள் குறித்த அரசின் கொள்கைகளை வரையறுக்க முடிவு செய்து, அதற்குரிய நடவடிக்கைகளில் இறங்கும் சமயத்தில், ஆட்சி கவிழ்ந்து விட்டது. டெல்லி குடிசைப்பகுதி ஏழை மக்களுக்காக நான் தனி நபராகவே போராட்டத்தில் இறங்கியதற்கு உடனடி பலன் கிடைத்ததில் அந்த மக்களுக்கு மிக்க மகிழ்ச்சி. இந்தியாவின் உண்மையான முன்னேற்றம் என்பது அந்த ஏழைகளின் முன்னேற்றத்தில் தான் உள்ளது என நினைக்கிறேன்.

முந்நாள் பிரதமர்கள் அடிக்கடி கூடிப் பேசுகிறீர்களே!

விவசாயிகள் பிரச்னைக்காக நான் போராடிய போது, பி.ஜே.பி. அரசால் நான் பதினேழு நாட்கள் சிறைக்கு அனுப்பப்பட்டேன். ஆனால், விவசாயிகளின் பிரச்னைகள் அரசின் கவனத்தைக் கவரவில்லை. இது குறித்தும், மற்ற முக்கியக் கருத்துக்கள் பற்றியும் முந்நாள் பிரதமர்களான நான், கௌடா, குஜ்ரால் ஆகியோர் கூடிப் பேசுகிறோம். மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்த முனைகிறோம்.

அன்றைய கூட்டணி அரசின் பிரதமர் வி.பி. சிங் – இன்றைய கூட்டணி அரசின் பிரதமர் வாஜ்பாய்: ஒப்பிடுங்கள்.

காங்கிரஸ் கட்சியினால் இந்த நாட்டுக்கு வரக்கூடிய ஆபத்துகளை உணர்ந்து, நாட்டை காங்கிரஸ் கட்சியிடமிருந்து காப்பாற்ற வேண்டும் என்கிற கடமை உணர்வு உந்த, உருவானது அன்றைய கூட்டணி. என் ஆட்சி கவிழ்ந்தது, மண்டலா? மந்திரா? என்ற மாறுபட்ட கொள்கைகளிடையிலான மோதலின் அடிப்படையில்தான். ஆனால், இன்று சின்ன சின்ன விஷயங்களுக்கெல்லாம் பிரச்னை எழுகிறது. சுய லாப நஷ்டக் கணக்குப் பார்க்கிறார்கள்.

ஆனால் ஒரு விஷயம். கூட்டணி ஜனநாயகம் நமக்குப் புதியது. தவறுகளிலிருந்தும், அனுபவம் மூலமும்தான் நாம் நிறைய கற்றுக் கொள்ள வேண்டும்.

ஊழலை மையமாக்கி, எதிர்ப்புக்குரல் எழுப்பியதால் காங்கிரசிலிருந்து வெளியேற்றப்பட்டவர் நீங்கள். அப்போதைக்கு இப்போது ஊழல் அதிகம்தான் ஆகியிருக்கிறது. ஊழலை ஒழிப்பது சாத்தியமில்லையா?

ஊழலைப் பற்றி மக்கள் மத்தியில் பெரிய அளவில் விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். அரசாங்கத்தின் திட்டங்கள், செயல்பாடுகள், செலவினங்கள் எல்லாமே வெளிப்படையாக்கப்பட வேண்டும். இது பஞ்சாயத்து அளவில் ஆரம்பமாக வேண்டும். மக்கள் பணம் எப்படி செலவிடப்படுகிறது என்பதை மக்கள் குழுவே கண்காணிக்க வேண்டும். அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும். இங்கே தவறு நடந்தால் இன்னார் பொறுப்பு என்று நிர்ணயிக்கப்பட வேண்டும். தேர்தல் முறை சீர்திருத்தப்படவேண்டும். அரசே தேர்தல் செலவை ஏற்க வழி செய்ய வேண்டும். இப்படி பலமுனை நடவடிக்கையெடுத்தால்தான் சாத்தியம்!

இந்திய அரசியலில் கோஷ்டிப் பூசல் சகஜம்தான் என்றாலும், ஜனதா தளத்திலிருந்து பிரிந்த கட்சிகள் மட்டும் ஏன் சிறு சிறு கட்சிகளாகிவிட்டன.

இந்தக் கேள்விக்கு நகைச்சுவையாக நான் இப்படித்தான் சொல்லுவேன். ஜனதா கட்சித் தலைவர்கள் எல்லாம் 'ரேடியோ ஆக்டிவ்' (கதிரியக்க சக்தி படைத்தவர்கள்) ஆனவர்கள். இவர்களை வெகு நாளைக்கு ஒன்று சேர்த்து வைப்பது முடியாத காரியம். ஆனால் பிரிந்து போனவர்கள் பெர்னாண்டஸ், லாலு, சரத்யாதவ்... இப்படி எல்லாருமே இந்திய அரசியலில் முக்கியத்துவத்துடன் இருக்கிறார்களே! அதுவே பெரிய விஷயம் தானே!

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**

படம்: **ஸ்ரீஹரி**

"தலைவருக்குக் கூட்டணி பற்றி என்ன தான் அறிக்கை விடறதுன்னு ஒரு விவஸ்தை இல்லாம போச்சு..."

"என்ன?"

"ஜார்ஜ் புஷ் அவர்கிட்டே ஐம்பது தொகுதி கேட்டிருக்காராம்!"

— புளியரை கணேசன்



திருப்பூர் கிருஷ்ணன்

'உங்களைத் தானே?' என்று அழைத்தாள் என் மனைவி, திருமண வரவேற்பில், அவள் அருகில் முன் வரிசையில் அமர்ந்திருந்த என்னை. ஒரு 'ஊம்' கொட்டிவிட்டுப் பேசாமல் இருந்தேன். இது பதினேழாவது 'உங்களைத்தானே!'

வரவேற்புக்காக வந்து கூடியிருந்த கூட்டத்தால் அரங்கு நிறைந்திருந்தது. அண்மையில் மறைந்த இலட்சிய எழுத்தாளர் இதயநாதனின் புதல்வி திருமணம். அரங்கு முழுவதும் பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் அவர் மேல் அபிமானம் கொண்ட ரசிகர்கள்.

மாலை ஏழாகிவிட்டது மணி. ஆறு மணிக்கு வரவேற்பு என்று சொன்னது அழைப்பிதழ். ஒரு மணிநேரம் தாமதமாகியும் மேடைக்கு மணமகள் இன்னும் வந்து சேரவில்லை.

ஒரு வேளை சிங்காரித்துக் கொள்ள அழகு நிலையத்துக்குப் போயிருக்கிறாளா! அதனால்தான் இவ்வளவு தாமதமா! வெகு அழகுதான். காலந் தவறாமைக்குப் பேர் பெற்றவர் அல்லவா இவளது அப்பா, எழுத்தாளர் இதயநாதன்! ஒருமுறை, அமைச்சர் வருகைக்காகக் காத்திராமல் கூட்டத்தைத் தொடங்கி, அமைச்சர் வந்ததும், 'விழா நிறைவடைவதற்குள்ளாவது அமைச்சர் வந்ததே மனத்துக்கு நிறைவு தருகிறது' என்று கிண்டலடித்து அவையைக் கலகலக்க வைத்தவர்.

மணமகன் மட்டும் மாலையும் கழுத்துமாக, முன்னரே தயார் செய்து ஒட்டிக் கொண்ட செயற்கைப் புன்னகையின் போலி வெளிச்சம் முகத்தில் மின்ன உட்கார்ந்து கொண்டிருந்தான். அடிக்கடிக் கைக்குட்டையால் நெற்றி வியர்வையை ஒற்றியபடி இருந்தான். அருகே வாட்டசாட்டமாக, கறுப்புப் பூனைப் படைவீரர்கள் போல் இருந்த இரண்டு நபர்கள் அவன் டையைச் சரி செய்து, பின் கழுத்து வியர்வையில் மின் விசிறிக் காற்று படுகிற மாதிரி, பூமாலையையும் தளர்த்தி ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்தார்கள்.

மீண்டும், என் மனைவி மெல்லக் கேட்டாள் :

"உங்களைத் தானே, ஏன்...?"

"இன்னும் மணமகள் மீனா மேடைக்கு வரவில்லை என்று கேட்கப் போகிறாய். ஏற்கெனவே எத்தனை தடவை கேட்டுவிட்டாய்? எனக்கு என்ன தெரியும்




கண்ணம்மா? உனக்கு மீனாவும் மீனாவின் அம்மாவும் நல்ல பழக்கம்தானே? நீயே உள்ளே போய் விசாரித்துக் கொண்டு வாயேன்."

"அது இல்லைங்க. இது வேற கேள்வி. மணமகன் ஏற்கெனவே உங்களுக்குத் தெரிந்தவரா?"

"இல்லியே. இதயநாதன் மனைவிதான், அவங்க சொந்தக்காரங்க மூலமா இந்த வரனைத் தேடிப் பிடிச்சிருக்காங்க. காலைல முகூர்த்தத்துக்கு வந்தபோது ஒரு தடவை பார்த்தேன். இது இரண்டாவது தடவை. அவ்வளவுதான் பழக்கம்."

"அப்புறம் ஏன் மணமகன் உங்களையே பாத்துக்கிட்டிருக்காரு?"

எனக்கும் அது கொஞ்ச நேர



மாகவே உள் மனத்தில் உறைத்துக் கொண்டுதான் இருந்தது. ஒரு வேளை அமரர் இதயநாதனின் பிரதான சீடர்களில் ஒருவன் நான் என்பதை யாராவது அவனுக்குத் தெரிவித்திருக்கக்கூடும். அல்லாமலும், வரவேற்புக்கு வருகை தந்திருக்கும் ஏரானமான சக எழுத்தாளர்களும், சக பத்திரிகையாளர்களும் என்னிடம் வந்து கைகுலுக்கி, பிரியமாய்ப் பேசுவதைப் பார்த்து அவனுக்கு என்னிடம் மரியாதையும் அன்பும் ஏற்பட்டிருக்கலாம். எது எப்படியிருந்தாலும் மணமகன், என்னையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற உள்ளுணர்ச்சி எனக்குச் சங்கடத்தைத் தந்து கொண்டிருந்தது.

பின் வரிசையில் இருந்த கஜேந்திரன் மெல்ல என் தோளைத் தொட்டார். பாரம்பரியம் மிக்க கண்ணியமான வார இதழ் ஒன்றின் நிரந்தர ஆசிரியர்.

"குமரன்! தப்பா நினைக்கலைன்னா, என் சார்பில் இந்த அன்பளிப்புக் கவரை மணமகன் வீட்டாரிடம் சேத்துடறீங்களா? நான் இன்னிக்கு ஃபிளைட்டுல யு.எஸ். போறேன், நியூ ஜெர்ஸி தமிழ்ச் சங்கக் கூட்டத்துக்காக. ரொம்ப நேரம் இங்க காத்திருக்க முடியாத நிலைமை!"

"அதனாலென்ன? நீங்க புறப்படுங்க. கவரை நான் கொடுத்திடறேன்" என்றவாறே கவரை வாங்கிக் கொண்டேன். கவர் கனமாக இருந்தது. அவர் என்னிடம் விடைபெற்றுப் புறப்பட்டபோது என் கண்கள் பனித்தன.

எழுத்தாளர் இதயநாதன் சிரமத்தில் இருந்த சந்தர்ப்பத்தில் எல்லாம் வலியச் சென்று அவர் தொடர்கதையைக் கேட்டு வாங்கி

வெளியிட்டுப் பொருளுதவி செய்தவர். இதோ அவரது மகள் கல்யாணத்திற்கும் தன்னால் இயன்ற உதவியைச் செய்திருக்கிறார். உலகில் இன்னமும் நிஜமான மனிதர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இதயநாதன் தம் மூத்தமகள் கல்யாணத்திற்குப் பட்டபாடு எனக்குத் தெரியும். வரதட்சிணை கொடுக்காமல்தான் மகளைத் திருமணம் செய்து கொடுப்பேன் என்று பிடிவாதமாக இருந்தார். வரதட்சிணையை எதிர்த்து உணர்ச்சி பொங்க எழுதியும் மேடைகளில் அதிர முழங்கியும் பேர் பெற்றவர் அல்லவா அவர்! முப்பது வயதில்தான் திருமணமாயிற்று அவரது மூத்த மகளுக்கு. கடைசியில் அவரது எழுத்தின்மேல் அபிமானம் கொண்ட ரசிகன் ஒருவன், அவர் விரும்பிய வண்ணம் வரதட்சிணை, சீர் வரிசை எதுவுமில்லாமல் அவரது பெண்ணை மனம் புரிந்து கொண்டான்.

ஆறு மாதங்கள் முன்னால் இதயநாதன் இதய நோயால் காலமான பிறகு அவரது இறுதி ஊர்வலத்திற்கு வந்த கூட்டத்தைப் பார்த்துத் தமிழகமே மூக்கில் விரல் வைத்துப் பிரமித்தது. இதய நாதனின் நெஞ்சையள்ளும் சுயமுன்னேற்றச் சிந்தனைகளாலும், முற்போக்கான சீர்திருத்தக் கருத்துக்களாலும் கவரப்பட்ட நூற்றுக்கணக்கான இளைஞர்களும், இளம் பெண்களும் கண்ணீர் அஞ்சலி செலுத்தியவாறே ஊர்வலத்தில் வந்த காட்சி நாள்தோறும் பல மரணங்களைப் பார்க்கும் மயானத்தின் வெட்டியானைக்கூட கண் கலங்கிக் கரைய வைத்தது. 'இதயநாதனின் எழுத்துகளும் சிந்தனைகளும் அன்பும் எனக்கு மட்டுமே சொந்தம்' என்ற என் இறுமாப்பு தகர்ந்து தவிடுபொடியானதும் அன்றுதான். எண்ணற்ற இளைஞர்களின் நெஞ்சங்களில் ஆழ்ந்து ஊடுருவி, அவர்களின் உணர்வுகளை ஆட்சிசெய்த எழுத்துலகச் சக்கரவர்த்தி அவர் என்பதை நேரடியாக உணர்ந்து கண் பனிக்கப் பனிக்க நான் விம்மிதம் உற்றதும் அப்போதுதான்; அந்த நாளில் இதயநாதனது எழுத்தின் பாதிப்பால்தானே நானும் வரதட்சிணை வாங்காமல் திருமணம் செய்து கொண்டேன். அந்த நன்றி என் மனைவிக்கும் அவரிடமுண்டு.

"ராசியேயில்லாத கல்யாண மண்டபத்தில் என் மகனுக்குத் திருமணம் நடத்தித் தொலைச்சிட்டேன் போலிருக்கு!"

"ஏங்க! உங்க மகனின் மண வாழ்க்கையில் ஏதும் விரிசலா?"

"ஊஹூம்! கல்யாணத்தன்று மொய் வசூல் ரொம்பவும் டல்லு!"

- உ. ராஜாஜி





மறுபடியும் என் தோளை யாரோ மெல்லத் தொட்டார்கள். திரும்பினேன். முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்த குருதாஸ். கூடவே பொதுவுடமை எழுத்தாளர் பெரியபாரதி. தத்துவ எழுத்தாளர் மு.கோ.ரா. பற்பல பத்திரிகையாளர்கள் என எல்லோரும் மெல்ல என்னைச் சூழ்ந்து கொள்ள ஆரம்பித்தார்கள். கஜேந்திரன் பாணியில் தங்கள் கையிலிருந்து கவர்களை என் கையில் வலியத் திணித்து விட்டு அன்போடு விடைபெறத் தொடங்கினார்கள். பத்துப் பதினைந்து கவர்கள் என் கையில் ஒருசேரச் சேர்ந்துவிட்டன. ஒரு சிலர் சாப்பிடாமலே விடைபெற்றுப் புறப்பட்டுவிட்டார்கள். 'கொஞ்சம் இருங்கள். மணமகள் இதோ வந்துவிடுவாள்' என்று மீதியிருந்த எல்லோரையும் அமைதிப்படுத்தி உட்கார வைத்தேன். என் மனைவியிடம் "உள்ளே போய் மீனா எங்கே என்று கேள். உடனடியாக அவளை மேடைக்கு வரச் சொல். மணி ஏழரை ஆகிவிட்டது" என்று பிறர் அறியாமல் கிசுகிசுத்தேன். அவள் பரபரப்பாக உள்ளே சென்றாள்.

ஐந்தே நிமிடங்களில் அவள் திரும்பிவிட்டாள். பின்னாலேயே மாலையும் கழுத்துமாக மணமகள் மீனாவும். மீனாவை மேடையில் உட்கார வைத்துவிட்டு, அவள் பின்னலை இழுத்துச் சரி செய்துவிட்டு, என்னிடம் வந்தாள் என் மனைவி. "என்ன பிரச்னை?" என்று கேட்டேன் காதோடு.

"சரியான பிடுங்கல் கேஸ் போலருக்கு. அத்தக் கொண்டா, இத்தக் கொண்டான்னு ஒரே ரகளையா இருக்கு உள்ள. தங்க நகையெல்லாம் உரசிப் பார்த்து செக்கப் பண்ணி, திரும்ப மீனாவுக்குப் போட்டாங்க அவங்க

மல்லுக்கு நிற்கும் ம.தி.மு.க. - தி.மு.க!





கடும் போட்டி நிலவுகின்றது திருச்சி 1வது சட்டமன்றத் தொகுதியில். ம.தி.மு.க. - தி.மு.க. ஆகிய இரண்டு கட்சிகளுமே இத்தொகுதியை குறி வைத்துள்ளன. இங்கு 84, 89 பொதுத் தேர்தலில் தி.மு.க. சார்பில் வெற்றி பெற்ற மலர் மன்னன் தற்பொழுது ம.தி.மு.க.வில் வைகோவின் நம்பிக்கைக்கு உரியவர். தமது நம்பிக்கைக்கு உரிய மலர் மன்னனுக்கே வைகோ சீட் வாங்கித் தருவார் என நம்புகிறார்கள் ம.தி.மு.க. தொண்டர்கள். தி.மு.க.வில் இதற்கு நேர் எதிர். திருச்சி 1வது தொகுதி எம்.எல்.ஏ.வான பரணிகுமார், அன்பில் பொய்யாமொழி இருந்த இடத்தில் தற்போது இருக்கிறார். ஸ்டாலினின் நெருங்கிய நண்பர். எனவே தி.மு.க. சார்பில் பரணிகுமாருக்குத் தான் திருச்சி 1வது தொகுதி ஒதுக்கப்படும் என உறுதியாக இருக்கிறார்கள் தி.மு.க. உடன் பிறப்புகள்!

- இருள் நீக்கியான்

மாமியார். அதுலதான் இத்தனை தாமதம்."

என் மனைவி வருத்தத்தோடு சலித்துக் கொண்டாள். என் மனம் சுளீர் எனச் சாட்டையடி விழுந்ததுபோல் திடுக்கிட்டது. அடடா! வரதட்சணையையும், சீர் வரிசையையும் எதிர்த்து வாழ்நாள் முழுவதும் ஓயாமல் போராடிய இதயநாதனின் மகளுக்கா இப்படி...?

"மாமியார் அப்படியிருக்கலாம். ஆனால் மாப்பிள்ளை நல்லவனாயிருந்தால் போதுமே? ஏன் அதுதானே இன்னும் முக்கியம்? சரி சரி வா!"

என் மனைவியை ஆறுதல்படுத்தி உடன் அழைத்துச் சென்றேன். என் கவரையும் சேர்த்து, கையிலுள்ள எல்லாக் கவர்களையும் மீனாவிடம் கொடுப்பதற்காக.

மீனாவின் முகத்தில் அப்படியே அவள் அப்பாவின் சாயல். மூக்கும் முழியும் அச்சு அசல் இதயநாதன். என் மனம் பாசத்தால் நெகிழ்ந்தது. மணக்கோலத்தில் இருந்த அவளது மை தீட்டிய பெரிய விழிகள் கலங்கிக் கிடந்ததைத் தான் என்னால் பொறுக்க முடியவில்லை.

"மீனா!" என்று என் கையிலிருந்த கவரையெல்லாம் நீட்டுவதற்குள், சடாரென்று எழுந்தான் மாப்பிள்ளை.

"நீங்க வந்தது பத்தி ரொம்ப சந்தோஷம் சார். காலைல முகூர்த்தத்துக்குப் பொண் வீட்டு சார்பில் வந்திருந்தாக்கூட, வரவேற்புக்கு என் நண்பர்ங்கற முறைல எனக்காகத் தான் வந்திருக்கீங்கன்னு தெரியும் சார்!"

வலிய என் கரங்களைப் பற்றிக் குலுக்கிய அவன், பிடுங்காத குறையாக அத்தனை கவர்களையும் கைப்பற்றித் தன் வீட்டாரிடம் சேர்ப்பித்தான்.

"அவசியம் இருந்து சாப்பிட்டுவிட்டுப் போங்கள்" என்று வற்புறுத்திய அவனது வாட்டசாட்டமான இரு நண்பர்களும் என் இருபுறங்களிலும் வந்து நின்று கொண்டார்கள்.

இவ்வளவு மிரட்டலான உபசாரத்தை இதுவரை என் வாழ்நாளில் நான் சந்தித்ததில்லை. அதிர்ச்சியோடு மணமகள் மீனாவைப் பார்த்தேன். 'நிலைமையை ரசாபாசமாக்கிவிடாதீர்கள்' என்று கெஞ்சுவது போல் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தன அவளது கண்ணீர் ததும்பிய நீண்ட விழிகள்.

வேறு வழியில்லாத சோர்வோடு, சூழ்நிலையின் கைதியாக, நான் அடுத்து வந்தவர்களுக்கு வழிவிட்டு திரும்பிப் பாராமல் விலகி வழி நடந்தேன். முதலில் திக்பிரமித்த என் மனைவி பிறகு சுதாரித்துக் கொண்டு மௌனமாக என்னைப் பின் தொடர்ந்தது என் உள்ளுணர்வுக்குத் தெரிந்தது. ●

பொன்னியின் செல்வன்

அறுபத்து எட்டாம் அத்தியாயம்

"ஒரு நாள் இளவரசர்"

அமரர் கல்கி

சேந்தன் அமுதனின் கட்டிலுக்கு அடியிலிருந்து வந்த முனகல் சத்தத்தைக் கேட்டதும், ஆழ்வார்க்கடியான், "ஆகா! அப்படியா சமாசாரம்? சிவ பக்த சிகாமணிகளே! பழைய பரமசிவனைப் போல் மோசம் செய்ய ஆரம்பித்து விட்டீர்களா?" என்று சொல்லிக் கொண்டே மேலே போகத் தொடங்கினான்.

பூங்குழலி தன் இடையில் செருகியிருந்த கத்தியைச் சட்டென்று எடுத்துக் காட்டி, "வைஷ்ணவனே! சிவபெருமானைப் பழித்த பாதகனாகிய நீ இந்த உலகில் இனி ஒரு கணமும் இருக்கலாகாது. மேலே ஒரு அடி எடுத்து வைத்தாயானால், உடனே வைகுண்டம் போய்ச் சேருவாய்!" என்றாள்.

"தாயே! மகா சக்தி! உன்னுடைய வார்த்தைக்கு மறு வார்த்தை உண்டா? வைகுண்ட பதவி கிடைப்பது எளிதன்று. உன் கையால் என்னை அங்கே அனுப்பி விட்டாயானால், அதைக் காட்டிலும் பெரிய பாக்கியம் எனக்கு வேறு என்ன கிடைக்கக் கூடும்?" என்றான் ஆழ்வார்க்கடியான்.

இச்சமயத்தில்

சேந்தன் அமுதன் கட்டிலிலிருந்து எழுந்து வந்து, "பூங்குழலி! வேண்டாம்! கத்தியை இடுப்பில் செருகிக் கொள்! இந்த வைஷ்ணவன் சிவனைத் தூஷித்ததினால் சிவ பெருமானுக்குக் குறைவு ஒன்றும் வந்துவிடாது. பொய்மையினாலும் மோசத்தினாலும் நன்மை எதுவும் கிட்டாது. இந்த வைஷ்ணவனிடம் உண்மையைச் சொல்லி உதவி கேட்போம். இவனும் வந்தியத்தேவனுக்குச் சிநேகிதன்தானே!'' என்றான்.

"அப்படி வாருங்கள் வழிக்கு! கபட நாடக சூத்திரதாரியான கிருஷ்ண பரமாத்மாவின் அடியார்க்கு அடியேனைக் கேவலம் சிவபக்தர்களால் ஏமாற்ற முடியுமா? கருணாமூர்த்தியான ஸ்ரீமந் நாராயணனைச் சரணாகதி என்று அடைந்தால், அவர் அவசியம் காப்பாற்றி அருளுவார். ஆதிமூலமே என்று கதறிய கஜேந்திரனை முதலை வாயிலிருந்து காப்பாற்றிய பெருமான் அல்லவோ எங்கள் திருமால்...?''

"ஆமாம், ஆமாம்! உங்கள் திருமால் வைகுண்டத்திலிருந்து வந்து சேருவதற்குள் உங்கள் சிநேகிதர் இந்த மண்ணுலகிலிருந்தே போய் விடுவார்!'' என்று பூங்குழலி சொல்லி விட்டுக் கட்டிலை நோக்கி விரைந்து சென்றாள்.

மற்றவர்களும் அவளைப் பின்பற்றிச் சென்றார்கள். கட்டிலின் கீழே துணிக் குவியலினால் மறைக்கப்பட்டுக் கிடந்த வந்தியத்தேவனைத் தூக்கிக் கட்டிலின் மேலே கிடத்தினார்கள்.

வந்தியத்தேவன் நினைவற்ற நிலையில் இருந்தான். எனினும் அவ்வப்போது வேதனைக் குரலில் முனகிக் கொண்டிருந்தான். அதனாலேயே அவன் உடலில் உயிர் இருக்கிறது என்று அறிந்து கொள்ளக்கூடியதாயிருந்தது.

வாணி அம்மை மூலிகைகளை வேக வைத்து மஞ்சள் பொடி சேர்த்துக் காயத்தில் வைத்துக் கட்டுவதற்காகக் கொண்டு வந்தாள். ஆழ்வார்க்கடியானும் சேந்தன் அமுதனும் வந்தியத்தேவனுடைய கைகால்களை இறுக்கிப் பிடித்துக்கொண்டார்கள். பூங்குழலியும் வாணி அம்மையும், அவனுடைய காயத்தில் வேக வைத்த மூலிகைகளைச் சுடச் சுட வைத்துத் துணியைப் போட்டுக் கட்டினார்கள்.

அப்போது ஏற்பட்ட வேதனையினால் வந்தியத்தேவன் கண் விழித்தான். எதிரில் ஆழ்வார்க்கடியானைப் பார்த்ததும், "வைஷ்ணவனே! இப்படி வஞ்சகம் செய்து விட்டாயே! இங்கே என்னை வரச் சொல்லிவிட்டு, பின்னோடு என்னைக் கொல்லுவதற்கு ஆள் அனுப்பி விட்டாயா?'' என்று கூறி விட்டு மறுபடியும் நினைவு இழந்தான்.

ஆழ்வார்க்கடியான் முகத்தில் மனச் சங்கடத்தின் அறிகுறி தென்பட்டது. அரை நினைவான நிலையில் வந்தியத்தேவன் கூறிய வார்த்தைகள் சேந்தன் அமுதன் - பூங்குழலி இவர்களுக்குத் தன்னைப் பற்றி மறுபடியும் ஐயத்தை உண்டாக்கியிருக்கும் என்று எண்ணி அவர்கள் முகத்தைப் பார்த்தான்.

பூங்குழலியின் முகத்தில் பூத்திருந்த புன்னகை அவனுக்குச் சிறிய தைரியத்தை உண்டாக்கியது.

"வைஷ்ணவரே! வந்தியத்தேவரை நீர்தான் இங்கே அனுப்பி வைத்தீரா?'' என்று கேட்டாள்.

"ஆம், தாயே! ஆனால் இவனைக் கொல்லுவதற்குப் பின்னோடு நான் யாரையும் அனுப்பி வைக்கவில்லை.''

"அது இருக்கட்டும்; இங்கு எதற்காக இவரை அனுப்பினீர்?''

"தப்பி ஓடிச் செல்வதற்காக அனுப்பினேன். இந்த நந்தவனத்துக்குப் பக்கத்தில் அவனுக்காகவும் அவன் நண்பனுக்காகவும் இரண்டு குதிரைகளும் தயாராய் வைத்திருந்தேன்...''

"பின்னே, அவர் தப்பி ஓடவில்லை என்று எப்படித் தெரிந்தது? இக் குடிசையில் இருப்பதை எப்படி அறிந்தீர்?"

"அவனுக்காக நான் விட்டிருந்த குதிரையில் வேறொருவர் ஏறிக் கொண்டு போவதைப் பார்த்தேன். அதனாலேதான் சந்தேகம் உண்டா யிற்று..."

"திருமால் ஒன்று நினைக்கச் சிவன் வேறொன்று நினைத்துவிட்டார்!"

"இது என்ன புதிர், தாயே? இவன் எப்படிக் காயம் அடைந்தான்?"

"வைஷ்ணவரே! நீர் என்ன உத் தேசத்துடன் இவரை இங்கே அனுப் பினீரோ, தெரியாது. ஆனால் இவர் சரியான சமயத்துக்கு இங்கே வந்து நான் கல்யாணம் செய்து கொள் வதற்குள் கைம்பெண் ஆகாமல் காப் பாற்றினார்!"

இவ்வாறு பூங்குழலி சொல்லிக் கொண்டிருக்கும்போதே, ஆழ்வார்க் கடியான், சேந்தன் அமுதன் இருவரும் "என்ன? என்ன? என்ன?" என்று அதி சயத்துடன் கேட்டார்கள்.

பூங்குழலி அமுதன் பக்கம் திரும்பி, "ஆமாம்; உங்களிடம்கூட நான் சொல்லவில்லை. வெளியே ஒருவன் நின்று ஈட்டியினால் தங்களைக் குத்து வதற்குத்தான் குறி பார்த்தான். அப் போது இவர் வந்து குறுக்கிட்டு ஈட்டி யைத் தான் ஏற்றுக் கொண்டு தங் களைக் காப்பாற்றினார்?" என்றாள்.

சேந்தன் அமுதன் கண்களில் நீர் ததும்பியது. "ஐயோ எனக்காகவா என் நண்பர் இந்த ஆபத்துக்கு உள்ளா னார்?" என்றான்.

"அதனால் என்ன? தாங்கள் இவரைத் தப்புவிப்பதற்காக எவ்வளவு ஆபத்துக்கு உள்ளாகியிருக்கிறீர்கள்!" என்றாள் பூங்குழலி.

"அம்மணி! இந்த உலகத்தில் ஒருவர் செய்த உதவிக்கு உடனே பதில் உதவி செய்வதென்பது மிக அபூர்வமானது. நல்லது செய்தவர்களுக்குக் கெடுதல் செய்யாமலிருந்தாலே பெரிய காரியம். வந்தியத்தேவன் இங்கு சரியான சம யத்துக்கு வந்து, சேந்தன் அமுதனைக் காப்பாற்றியது அதிசயமான காரியந் தான்! ஆனால், கலியாணத்தைப் பற்றி ஏதோ சொன்னீர்களே? அது என்ன? கைம்பெண் ஆகாமல் காப்பாற்றிய தாகவும் சொன்னீர்கள்!"

"ஆம், வைஷ்ணவரே! சிறிது நேரத் துக்கு முன்னாலேதான் நானும் இவரும் மணந்து கொள்வது என்று முடிவு செய்தோம். செம்பியன் மாதேவியின் ஆசியையும் பெற்றோம். பெரிய பிராட்டித் திரும்பிச் சென்று கால் நாழிகைக்குள் இவர் மேல் ஈட்டி பாய்வதற்கு இருந்தது. என்னால்கூட அதைத் தடுத்திருக்க முடியாது. அதனால் இவர் உயிருக்கு ஆபத்து வந்திருந்தால், என் கதி என்ன? கலி யாணம் ஆவதற்கு முன்பே கைம்பெண் ஆகி விடுவேனல்லவா?"

"கருணா மூர்த்தியான திருமாலின் அருளினால் அப்படியொன்றும் நேராது. செம்பியன் மாதேவியின் ஆசியும் வீண் போகாது. தாங்கள் இந்த உத்தம புருஷரை மணந்துகொண்டு நெடுங்காலம் இனிது வாழ்ந்திருப் பீர்கள். ஆனால் இந்தப் பரம சாது வான பிள்ளையை ஈட்டியால் குத்திக் கொல்ல முயன்ற பாதகன் யாராயிருக் கும்? அவனைத் தாங்கள் பார்த்தீர் களா? அடையாளம் ஏதேனும் தெரிந் ததா?"

"பார்க்காமல் என்ன? தெரியாமல் என்ன? அந்த வைத்தியர் மகனாகிய பினாகபாணி என்னும் சண்டாளன் தான்! என் அத்தை மந்தாகினியைக் கோடிக்கரையிலிருந்து அக்கிரமமாகப் பிடித்துக்கொண்டு வந்து கொலைகார னுக்குப் பலியாகச் செய்தவன்தான்! சோழ ராச்சியத்தில் இப்படியெல்லாம் அக்கிரமங்கள் நடக்கின்றன..."

"இது என்ன அக்கிரமத்தைக் கண்டு விட்டீர்கள்? இதைவிட ஆயிரம் மடங்கு நடக்கப் போகிறது. சோழ நாட்டில் இன்றிரவு அராஜகம் ஆரம் பமாகப் போகிறது. சிற்றரசர்களுக்குள் பெரிய சண்டை மூளப் போகிறது.

நாடெங்கும் மக்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொண்டு மடியப் போகிறார்கள்! ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் அருளினால் ஒரு பெரிய அற்புதம் நடந்தாலன்றி இந்த நாட்டுக்கு வரப் போகும் விபத்துக்களைத் தடுக்க முடியாது!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''வைஷ்ணவரே! இது என்ன இப்படிச் சாபங் கொடுப்பது போலப் பேசுகிறீர்? சோழ நாடு செழிப்படைய ஆசி கூறலாகாதா?'' என்றான் அமுதன்.

''நாடு எப்படியாவது போகட்டும்! நாங்கள் கோடிக்கரைக்குப் போய் விடுகிறோம்!'' என்றாள் பூங்குழலி.

''நாம் போய் விடலாம்; என் உயிரைக் காப்பாற்றிய இந்த உத்தம நண்பனை என்ன செய்வது?'' என்று சேந்தன் அமுதன் கேட்டான்.

''இவனை உங்களால் எப்படியும் காப்பாற்ற முடியாது. இங்கேயே நீங்கள் இருந்தாலும் பயனில்லை. சிறையிலிருந்து தப்பி ஓடியவர்களைப் பிடிப்பதற்கு இப்போதே நாலாபக்கமும் சேவகர்கள் தேடி அலைகிறார்கள். விரைவில் இங்கேயும் வருவார்கள். வாசலில் நிற்கும் காவலர்களுக்கு நானே என்ன சமாதானம் சொல்லி அழைத்துப் போகிறது என்று தெரியவில்லை!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.


''''ஐயா! வைஷ்ணவரே! நீர் எவ்வளவோ கெட்டிக்காரர். முதன்மந்திரி அநிருத்தருக்கே யோசனை சொல்லக் கூடியவர். கொலைகாரனால் படுகாயம் பட்டிருக்கும் இந்த வாணர் குல வீரரைக் காப்பாற்ற ஒரு யோசனை சொன்னால் உமக்குப் புண்ணியம் உண்டு. நாங்கள் இருவரும் என்றென்றைக்கும் உமக்கு நன்றிக் கடன் பட்டிருப்போம்!''

''தேவி! அது அவ்வளவு சுலபமன்று!''

''ஐயா! நிமிஷத்துக்கு நிமிஷம் எனக்கு மரியாதை அதிகரித்துக் கொண்டு வருகிறதே! நேற்றுவரை என்னை 'ஓடக்காரி' என்று அழைத்தீர். சற்று முன்னால் 'அம்மணி' என்றீர். இப்போது 'தேவி' என்று அழைக்கிறீர். சற்றுப் போனால் 'இளவரசி' என்றே அழைத்து விடுவீர் போலிருக்கிறதே!''

''ஆம், இளவரசி! இதோ நினைவற்றுக் கிடக்கும் இந்த வீர வாலிபனைக் காப்பாற்ற வேண்டுமானால், அதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. தங்களை மணந்து கொள்ளப் போகும் இந்தப் பாக்கியசாலி ஒரு நாளைக்கு இளவரசராக வேண்டும்! அவர் இளவரசர் என்றால், தாங்களும் இளவரசிதானே?''

''வைஷ்ணவரே! இது என்ன பரிகாசம்? நானாவது, ஒருநாள் இளவரசனாக இருப்பதாவது? எதற்காக?'' என்று கேட்டான் அமுதன்.



''என் ஒருவனுக்கு மட்டும் தெரிந்த இரகசியத்தை இப்போது உங்கள் இருவருக்கும் சொல்லப் போகிறேன். கேளுங்கள்: – இல்லை, முதலில் இதைப் பாருங்கள்!'' என்று கூறிவிட்டு ஆழ்



வார்க்கடியான் தன்னுடன் கொண்டு வந்திருந்த மூட்டையை அவிழ்த்து அவர்களுக்குக் காட்டினான்.

மதுராந்தகர் அணிந்திருந்த கிரீடமும் முத்து மாலைகளும் வாகு வலயங்களும் ஜாஜ்வல்யமாய் ஜொலித்தன.

"ஆகா! இவை இளவரசர் மதுராந்தகர் தரித்திருந்தவை அல்லவா? சற்று முன்பு இங்கேயே நாங்கள் பார்த்தோமே?" என்றான் அமுதன்.

"இவை எங்கிருந்து கிடைத்தன?" என்றாள் பூங்குழலி.

"இந்த நந்தவனத்தில் வேலி ஓரத்தில் கிடைத்தன. இன்னும், நான் சொல்ல வந்த இரகசியத்தையும் கேளுங்கள். வடவாற்றங்கரையோடு நான் வந்துகொண்டிருந்தபோது இரண்டு குதிரைகளின் மீது இரண்டு பேர் விரைவாகப் போய்க்கொண்டிருந்ததைக் கண்டேன். அவை நான் இந்த வந்தியத்தேவனுக்காகவும் இவனுடன் சிறையிலிருந்து தப்பிய பைத்தியக்காரனுக்காகவும் இங்கே விட்டுப் போன குதிரைகள். அந்தப் பைத்தியக்காரனைத் தங்களுக்குக் கூடத் தெரியுமே?"

"ஆமாம்; தெரியும். பாண்டிய வம்சத்து மணி மகுடத்தையும் இரத்தின ஹாரத்தையும் பற்றி யாரைப் பார்த்தாலும் உளறிக் கொண்டிருந்தவன்."

"அவனேதான்! வடவாற்றங்கரையோடு அதிவேகமாகச் சென்ற குதிரைகளில் ஒன்றின் மீது அந்தப் பைத்தியக்காரன் இருந்தான். இன்னொரு குதிரை மேலிருந்தவர் இளவரசர் மதுராந்தகர் போலத் தோன்றியது. இங்கு வந்த பிறகு அது நிச்சயமாயிற்று.

"இது என்ன விந்தை? மதுராந்தகர் எதற்காகத் தமது ஆபரணங்களைக் கழற்றி எறிந்துவிட்டு ஓட வேண்டும்?"

"அதுதான் எனக்கும் தெரியவில்லை. முதன்மந்திரியிடம் சொல்லி ஓடியவர்களைத் தொடர்வதற்கு ஆள்கள் அனுப்பப் போகிறேன். ஆனால் அதற்குள்ளே இங்கு பெரிய விபாதங்கள் நடந்து விடும் என்று அஞ்சுகிறேன்."

"என்ன விபரீதம் நடந்து விடும்?"

"பழுவேட்டரையர்களும் அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த சிற்றரசர்களும் இதோ தஞ்சைக் கோட்டை வாசலை அணுகிக்கொண்டிருக்கிறார்கள். கொடும்பாளூர் வேளாரும் முதன்மந்திரியும் மலையமானும் அவர்களை வரவேற்கக் கோட்டை வாசலில் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இராஜ்ய உரிமை பற்றிச் சமாதானமாகப் பேசி முடிவு செய்ய வேண்டுமென்பது சக்கரவர்த்தியின் விருப்பம், கட்டளை. ஆனால் பழுவேட்டரையர்கள் சமாதானப் பேச்சுத் தொடங்குவதற்கு முன்பு 'மதுராந்தகர் எங்கே?' என்று கேட்பார்கள். அவரைக் காணோம் என்றதும், கொடும்பாளூர் வேளார் மீது பாய்வார்கள்! சேநாதிபதிதான் பொன்னியின் செல்வருக்குப் பட்டத்தை நிச்சயம் செய்து கொள்வதற்காக மதுராந்தகரைக் கொன்று விட்டார் என்பார்கள். பெரிய வேளார் அதற்கு மறுப்புச் சொன்னாலும், அவரால் நிரூபிக்க முடியாது. உடனே பயங்கரமான உள்நாட்டு யுத்தம் ஏற்படும்; சோழ நாடு வெகு விரைவில் சீர்குலையும்."

"அதற்குள்ளே நாம் இங்கிருந்து புறப்பட்டுப் போய் விடுவோம்!"

"தேவி! அது முடியாத காரியம்!"

"பின்னே, என்ன சொல்கிறீர்?"

"இந்தக் கிரீடத்தையும் ஆபரணங்களையும் சற்று நேரம் சேந்தன் அமுதன் அணிந்து கொள்ளட்டும். பொன்னியின் செல்வரை ஏற்றிக் கொண்டு வந்த யானையை நான் அழைத்துக் கொண்டு வருகிறேன். அதில் இவர் ஏறிக் கொள்ளட்டும். என்னுடைய ஆட்களை 'மதுராந்தகர் வாழ்க!' என்று கோஷித்துக் கொண்டு யானைக்கு முன்னும் பின்னும் போகச் சொல்லுகிறேன். மதுராந்தகர் ஏறி வந்த பல்லக்கும் அருகில் இருக்கிறது. அதில் வந்தியத்தேவனைப் போட்டுத் திரையை விட்டு விடுவோம். தேவி! தாங்கள் பல்

லக்கின் பக்கமாக நடந்து வாருங்கள். மற்றதையெல்லாம் என்னிடம் விட்டு விடுங்கள்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"இது என்ன பைத்தியக்கார யோசனை?" என்றான் சேந்தன் அமுதன்.

"இவர் கிரீடத்தை வைத்துக்கொண்டால் அடையாளம் தெரியாமல் போய் விடுமா?" என்றாள் பூங்குழலி.

"இராத்திரி வேளையில் யானைமேல் உட்கார்ந்திருப்பவரை யார் அடையாளம் கண்டுபிடிக்க முடியும்? சந்தேகம் ஏற்பட்டால் அல்லவோ கூர்ந்து பார்க்கப் போகிறார்கள்! உங்களுடனேயே நானும் வரப் போகிறேன். உங்கள் எல்லாரையும் கோட்டைக்குள் முதன்மந்திரியின் வீட்டில் பத்திரமாகக் கொண்டு போய்ச் சேர்ப்பது என் பொறுப்பு. இந்த வாணர் குலத்து வீரனைக் காப்பாற்றுவதற்கு வேறு வழி ஒன்றுமில்லை!"

இன்னும் சிறிது நேரம் விவாதம் செய்த பிறகு சேந்தன் அமுதனும் பூங்குழலியும் ஆழ்வார்க்கடியானுடைய யோசனைக்கு இணங்கினார்கள்.

அறுபத்து ஒன்பதாம் அத்தியாயம்

"வாளுக்கு வாள்!"

பழுவேட்டரையர் - சம்புவரையர் கோஷ்டி தஞ்சைக் கோட்டை வாசலை அணுகிய போது கடலும் கடலும் மோதிக் கொள்வது போலிருந்தது.

"சோழ நாட்டு தனாதிகாரி, இறை விதிக்கும் தேவர், முப்பத்தாறு போர்க்களங்களில் அறுபத்து நாலு விழுப் புண் பெற்ற வீராதி வீரர் பெரிய பழுவேட்டரையர் விஜயமாகிறார்!" என்பது போன்ற விருதுகளை ஒவ்வொரு சிற்றரசருக்காகவும் கட்டியங் கூறுவோர் கர்ஜித்து முழங்கினார்கள். அவ்விதமே கொடும்பாளூர் வேளார், திருக்கோவலூர் மலையமான் முதலியோருக்கும் விருதுகள் முழங்கப்பட்டன. இடையிடையே முரசங்களும் சங்கங்களும் முழங்கின. கோட்டைச் சுவர்கள் எதிரொலி செய்தன.

கோட்டை வாசலில் நின்ற சேநாதிபதி பெரிய வேளார், மலையமான், முதன்மந்திரி முதலியோர் கீழே நின்று கொண்டிருந்தபடியால், பழுவேட்டரையர்களும் தத்தம் வாகனங்களின் மீதிருந்து இறங்க வேண்டியதாயிற்று.

தங்களை வாகனங்களிலிருந்து இறங்கச் செய்து கோட்டைக்குள் நடத்தி அழைத்துப் போவதற்காகவே அவ்வாறு சேநாதிபதி முதலியவர்கள் வரவேற்கும் பாவனையில் கோட்டை வாசலில் நின்றதாகச் சின்னப் பழுவேட்டரையர் எண்ணினார். அவ்வாறே மற்றவர்களிடமும் கூறினார். சேநாதிபதி கோஷ்டியாருடன் பேசும் பொறுப்பைத் தம்மிடமே விட்டுவிடும்படி கேட்டுக் கொண்டார்.

பெரிய வேளாரும் மற்றவர்களும் வருகிறவர்களுடன் சிறிது நேரம் பேச வேண்டியிருக்கலாம் என்று எதிர்பார்த்தார்கள். ஆகையால் கோட்டை வாசலை மறித்து நில்லாமல், சற்று அப்பாலிருந்த கொடிமரத்து மைதானத்தில் நின்றுகொண்டிருந்தார்கள்.

சிற்றரசர்கள் வாகனங்களிலிருந்து அவர்களை அணுகி வந்ததும், சேநாதிபதி பெரிய வேளார் "வருக! வருக! சோழராச்சியத்தைத் தாங்கி நிற்கும் அஷ்டதிக்குக் கஜங்களையொத்த சிற்றரசர்களே! வருக! உங்கள் வரவினால் சோழ ராச்சியத்துக்கும் சோழ குலத்துக்கும் நன்மை உண்டாகுக!" என்றார்.

உடனே சின்னப் பழுவேட்டரையர்,

• •

மன்னர் பெருமக்களே!
உங்களையெல்லாம் பெரிதும் வேண்டிக்
கொள்கிறேன். மூத்த புதல்வரைப் பறி
கொடுத்துத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும்
சக்கரவர்த்தியின் உள்ளத்தை உங்கள்
பூசல்களினால் புண்படுத்தாதீர்கள்!

• •





"ஆம், ஐயா! எங்கள் வருகையினால் சோழ ராச்சியத்துக்கு நன்மை உண்டாகுக! அது போலவே தங்கள் போகையினாலும் நன்மை விளைக!" என்றதும் பெரிய வேளாரின் கண்கள் சிவந்தன.

"ஐயா! சோழ ராச்சியத்தின் செழிப்புக்காகவும் சோழ குலத்தின் புகழுக்காகவும் நாலா திசைகளிலும் போவதுதான் கொடும்பாளூர் வேளார் குலத்தின் வழக்கம். என் அருமைச் சகோதரன் பராந்தகன் சிறிய வேளான் ஈழத்துப் போர்க்களத்தில் உயிர் நீத்ததை உலகமெல்லாம் அறியும். நானும் சில நாளைக்கு முன்பு வரை ஈழ நாட்டிலேதான் இருந்தேன். குண்டு சட்டியில் குதிரையோட்டும் கலையை எங்கள் குலத்தார் அறியார்கள். கோட்டைச் சுவர்களுக்குள்ளே பத்திரமாக இருந்துகொண்டு அரண்மனை அந்தப்புரங்களையும் பொக்கிஷ நிலவறைகளையும் காத்துக் கொண்டிருக்கும் வழக்கத்தையும் நாங்கள் அறியோம். உங்கள் வருகையினாலும் என்னுடைய போகையினாலும் சோழ குலம் நன்மையுறுவது உறுதியானால், பின்னர் ஒருகணமும் இங்கு நிற்க மாட்டேன்!" என்ற பெரிய வேளார் கர்ஜித்தார்.

இச்சமயம் முதன்மந்திரி அநிருத்தர் தலையிட்டு, "மன்னர் குலத் தோன்றல்களே! உங்கள் எல்லோருடைய வரவும் சோழ நாட்டிற்கு நன்மையே தரும் என்பதில் ஐயம் என்ன? நீங்கள் ஒவ்வொருவருமே சோழ ராச்சியத்தின் மேன்மை கருதித் தலைமுறை தலைமுறையாகப் பாடுபட்டவர்கள். சோழ குலத்துக்கு உயிரைக் கொடுத்துவர்கள் உங்கள் ஒவ்வொருவருடைய பரம்பரையிலும் உண்டு. இப்போதும், இனி எப்போதும், சோழ நாட்டுக்கு உங்கள் கூட்டுறவும் சேவையும் தேவையாயிருக்கும். இதனாலேயே பராந்தக சுந்தர சோழ சக்கரவர்த்தி உங்களுக்குள் நேர்ந்துள்ள வேற்றுமையைக் குறித்து வருந்துகிறார். தமது அருமைப் புதல்வர், வீர பாண்டியன் தலை கொண்ட வீராதி வீரர், ஆதித்த கரிகாலர் அகால மரணமடைந்த பெருந்துயரத்தையும் மறந்து உங்களையெல்லாம் ஒருமிக்க அழைத்திருக்கிறார். பட்டத்து உரிமை பற்றியும் மற்ற எல்லாப் பிரச்னைகளைப் பற்றியும் சக்கரவர்த்தியின் முன்னிலையில் சமாதானமாகப் பேசி முடிவு செய்து கொள்ளலாம். மன்னர் பெரு மக்களே! உங்களையெல்லாம் பெரிதும் வேண்டிக் கொள்கிறேன். மூத்த புதல்வரைப் பறிகொடுத்துத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் சக்கரவர்த்தியின் உள்ளத்தை உங்கள் பூசல்களினால் புண் படுத்தாதீர்கள்!" என்று கேட்டுக்கொண்டார்.

இந்த வார்த்தைகள் அங்கே கூடியிருந்த எல்லோருடைய மனத்திலும் தைத்தன. தங்களுடைய சொந்தக் கோப தாபங்களையெல்லாம் வெளிப்படுத்திக் கொள்வதற்கு அது தக்க சமயமல்ல என்பதை உணர்ந்தார்கள்.

உடனே, சின்னப் பழுவேட்டரையர், "முதன்மந்திரி! சக்கரவர்த்தியின் விருப்பத்தின்படியே நாங்கள் நடந்து கொள்ளச் சித்தமாயிருக்கிறோம். சக்கரவர்த்தியின் தரிசனம் எங்களுக்கு எப்போது கிடைக்கும்? இன்று இரவே பார்க்க முடியுமா? சக்கரவர்த்தியின் விருப்பத்தை அவருடைய வாய்மொழியாக நேரில் தெரிந்து கொள்ள விரும்புகிறோம்!" என்றார்.

"தளபதி! தங்கள் விருப்பம் நியாயமான விருப்பம்தான்! அது நிறைவேறும் என்பதிலும் சந்தேகமில்லை. ஆனால் சக்கரவர்த்தியின் உடல் நிலையும் மன நிலையும் நீங்கள் எல்லாரும் அறிந்தவை. இரவு வந்தால் சக்கரவர்த்தியின் உடல் வேதனையும் மனவேதனையும் அதிகமாகின்றன. மேலும் சிற்றரசர்களுடன் பட்டத்து உரிமையைப் பற்றிப் பேசுவதற்கு முன்னால், சக்கரவர்த்தி செம்பியன்மாதேவியுடன் முடிவாகப் பேச விரும்புகிறார். அவருடைய மனத்தை மாற்ற ஒரு கடைசி முயற்சி செய்ய விரும்புகிறார். எதன் பொருட்டு என்பது உங்களுக்குத் தெரியும். ஆகையால், நாளைப் பகல் முடிவதற்குள்ளே சக்கரவர்த்தி உங்களையெல்லாம் அழைப்பார். இன்றிரவு நீங்கள் எல்லா

ரும் கோட்டைக்குள் வந்து அவரவர்களுடைய அரண்மனையில் நிம்மதியாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். கோட்டைக்குள் அரண்மனை இல்லாதவர்களுக்கு வேண்டிய ஜாகை வசதிகள் செய்து கொடுக்கும்படி பெரிய வேளாருக்குக் கட்டளையிட்டிருக்கிறார்...''

மறுபடியும் சின்னப் பழுவேட்டரையர் குறுக்கிட்டு, ''முதன் மந்திரி! எங்களுக்கு ஜாகை வசதிகள் தேவை இல்லை. போர்க்களங்களில் திறந்த வெளியில் இருக்கப் பயின்றவர்கள். சக்கரவர்த்தி எங்களை நாளைக்குத்தான் பார்க்கப் போகிறார் என்றால், இன்றிரவு கோட்டைக்குள் நாங்கள் வர வேண்டிய அவசியம் என்ன?'' என்றார்.

''உங்களுடைய அரண்மனைகளில் நீங்கள் வந்து தங்காமல் வெளியில் தங்க வேண்டிய அவசியம் என்ன?'' என்று கேட்டார் முதன்மந்திரி.

''தளபதி காலாந்தக கண்டர் தஞ்சைக் கோட்டைக்குள் வந்து தங்கப் பயப்படுகிறார் போலும்!'' என்றார் சேநாதிபதி.

''பயமா? அது எப்படியிருக்கும்? கருப்பா? சிவப்பா? அதற்குக் கொம்பு உண்டா? சிறகு உண்டா? ஈழத்துப் போர்க்களத்திலிருந்து அவசரமாக ஓடி வந்திருக்கும் பெரிய வேளாருக்கு ஒரு வேளை தெரிந்திருக்கலாம்'' என்றார் சின்னப் பழுவேட்டரையர்.

ஏது ஏது? இவர்கள் இருவரும் முட்டி மோதிக் கொள்ளாமல் தடுக்க முடியாது போலிருக்கிறதே என்று முதன்மந்திரி சிந்தித்துக்கொண்டிருந்தபோது, பெரிய பழுவேட்டரையர், வானவெளியெல்லாம் நிறையும்படி 'ஹூம்' என்று சத்தமிட்டுக் கொண்டு, முன்னால் வந்தார்.

அவரை எல்லாரும் மிகுந்த மரியாதையுடன் கவனித்தார்கள்.

''தம்பி! கொடும்பாளூர் வேளார் பாரி வள்ளலின் வம்சத்தில் வந்தவர். வேளிர் குலத்தினர் வாக்குத் தவறி நடந்ததில்லை. பெரிய வேளார் நமக்குப் பாதுகாப்பு அளிப்பதாகச் சொல்லும்போது, நாம் கோட்டைக்குள் போவதற்கு என்ன தடை?'' என்று கேட்டார் பெரிய பழுவேட்டரையர்.

''அண்ணா! நமக்கு இன்னொருவரின் பாதுகாப்பும் தேவையில்லை; வாக்குறுதியும் தேவையில்லை. நம்முடைய உடைவாள்களும் முப்பதினாயிரம் வீரர்களின் வேல்களும் இருக்கின்றன. இந்தத் தஞ்சைக் கோட்டையின் தளபதி நான். கோட்டை மறுபடியும் என் வசம் வந்தாலன்றி நாம் கோட்டைக்குள் போகச் சம்மதியேன்!'' என்றார் காலாந்தக கண்டர்.

சேநாதிபதி வேளார் பெரிய பழுவேட்டரையரைப் பார்த்து, ''ஐயா! சக்கரவர்த்தி கட்டளை பிறப்பித்தால் அவ்வாறே செய்யச் சித்தமாயுள்ளேன்!'' என்றார்.

''சக்கரவர்த்தியின் கட்டளையின் பேரிலா கோட்டையை இவர் கைப்பற்றினார்?'' என்று கேட்டார்.

''இல்லை; வாளின் பலத்தைக் கொண்டு இந்தக் கோட்டையைக் கைப்பற்றினேன்!'' என்றார் பெரிய வேளார்.

''வாளின் பலங் கொண்டு திரும்பக் கைப்பற்றுவேன்! இப்போதே சோதித்துப் பார்க்கலாம்!'' என்று சின்னப் பழுவேட்டரையர் சொல்லிக் கொண்டே கத்தியின் பிடியில் கையை வைத்தார்.

பெரிய பழுவேட்டரையர் தம் தம்பியைக் கையினால் மறித்து ''தம்பி! வாள் எடுக்கும் சமயம் இது என்று! சக்கரவர்த்தியின் விருப்பத்தின்படி நாம் இங்கே வந்திருக்கிறோம்!'' என்றார்.

''அண்ணா! கோட்டைக்குள் புகுந்ததும் இவர் நம்மைச் சிறையிட மாட்டார் என்பது என்ன நிச்சயம்? சக்கரவர்த்தியின் கட்டளையை எதிர்பாராமல் திடீரென்று கோட்டையைத் தாக்கிக் கைப்பற்றியவரை எப்படி நம்பச் சொல்கிறீர்கள்!'' என்று கேட்டார் சின்னப் பழுவேட்டரையர்.

''இவரை நம்பித்தானே நம்முடைய

பெண்டு பிள்ளைகளையெல்லாம் இந்தக் கோட்டையிலே விட்டு விட்டு நீ வெளியேறினாய்? இளவரசர் மதுராந்தகரையும் விட்டு விட்டுக் கிளம்பினாய்?" என்றார் பெரியவர்.

"அது தவறோ என்று இப்போது சந்தேகப்படுகிறேன். மதுராந்தகருக்கு மட்டும் ஒரு சிறு தீங்கு நேர்ந்திருக்கட்டும், கொடும்பாளூர்க் குலத்தை அடி வேரோடு அழித்துவிட்டு மறுகாரியம் பார்ப்பேன்!" என்று இரைந்தார் சின்னப் பழுவேட்டரையர்.

இதுவரையில் அலட்சியமாகப் பேசி வந்த சேநாதிபதி பூதி விக்கிரம கேசரிக்கு இப்போது கடுங்கோபம் வந்துவிட்டது! அந்த இடத்தில் ஒரு பெரிய விபரீதமான மோதல் அடுத்த கணமே ஏற்பட்டிருக்கக் கூடும்.

நல்லவேளையாக, அந்தச் சமயத்தில் கோட்டை வாசலில் ஏதோ கலகலப்பு ஏற்பட்டது. எல்லாருடைய கவனமும் அங்கே சென்றது.

சற்று முன்னால் முதன்மந்திரி அநிருத்தர் தம்மைச் சமிக்ஞையினால் அழைத்த ஆழ்வார்க்கடியானிடம் சென்றிருந்தார். அவன் ஏதோ அவரிடம் இரகசியச் செய்தி கூறினான். அதைக் கேட்டு விட்டு அவர் பழுவேட்டரையர்களும் பெரிய வேளாரும் நின்ற இடத்தை அணுகி வந்தார். வரும்போது, சின்னப் பழுவேட்டரையர் மதுராந்தகத் தேவரைப் பற்றிக் கூறிய வார்த்தைகள் அவர் காதில் விழுந்தன.

"தளபதி! இளவரசர் மதுராந்தகரைப் பற்றி என்ன கவலை? அவருக்கு யாராலும் எவ்விதத் தீங்கும் நேரிடாது. சற்று முன்னால்கூட மதுராந்தகத் தேவரும் அவருடைய அன்னை செம்பியன் மாதேவியும் கோட்டைக்கு வெளியே சென்றார்கள். திருக்கோயிலுக்குப் புஷ்பகைங்கரியம் செய்யும் சேந்தன் அமுதனைப் பார்க்கப் போயிருந்தார்கள்..." என்று முதன்மந்திரி கூறுவதற்குள் காலாந்தக கண்டர் குறுக்கிட்டார்.

"ஆமாம்; தாயும் மகனும் கோட்டைக்கு வெளியே வந்தார்கள். ஆனால் தாய் மட்டுந்தான் கோட்டைக்குள் திரும்பிச் சென்றார்!" என்றார் சின்னப் பழுவேட்டரையர்.

"ஆகா! அது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்றார் முதன்மந்திரி.

"முதன்மந்திரி! உங்களிடம் மட்டுந்தான் கெட்டிக்கார ஒற்றர்கள் உண்டு என்று நினைத்தீர்களா? வெளியே வந்த மதுராந்தகத் தேவர் திரும்பக் கோட்டைக்குள்ளே போகவில்லை. அதன் காரணத்தை நான் அறிய வேண்டும்!" என்றார் சின்னப் பழுவேட்டரையர்.

முதன்மந்திரியின் முகத்தில் புன்னகை மலர்ந்தது. அதே சமயத்தில் கோட்டை வாசலில் "இளவரசர் மதுராந்தகத் தேவர் வாழ்க! வாழ்க!" என்ற கோஷங்கள் எழுந்தன.

எல்லாரும் கோஷங்கள் வந்த அந்தத் திசையை ஆவலோடு நோக்கினார்கள்.

கோட்டை வாசலுக்குள் பிரவேசித்துக் கொண்டிருந்த யானையின் மீது இளவரசக் கிரீடமும் பிற ஆபரணங்களும் அணிந்த 'மதுராந்தகர்' வீற்றிருந்தார்.

யானைக்குப் பக்கத்தில் மூடு பல்லக்கு ஒன்று ஊர்ந்து சென்றது.

"தளபதி! மதுராந்தகத் தேவர் கோட்டைக்குள் திரும்பிப் போவதற்குச் சிறிது காலதாமதம் நேர்ந்தது. வாணி அம்மையின் மகன் சேந்தன் அமுதன் குதிரையிலிருந்து கீழே விழுந்து படுகாயமுற்றிருக்கிறான். அவனைப் பல்லக்கில் ஏற்றிக் கோட்டைக்குள் அழைத்து வரும்படியாகச் செம்பியன் மாதேவி சொல்லி விட்டு முன்னால் சென்று விட்டார். அன்னையின் விருப்பத்தை மகன் நிறைவேற்றி வைக்கிறார். அமுதனைப் பல்லக்கில் ஏற்றிக் கொண்டு தாம் யானை மீது செல்கிறார். விரைவிலே மகுடாபிஷேகம் நடக்கும்போது, பட்டத்து யானை மீது ஊர்வலம் வர வேண்டியிருக்குமல்லவா? அதற்கு இப்போதே ஒத்திகை செய்து கொள்கிறார்!" என்றார் முதன்மந்திரி அநிருத்தர்.

(தொடரும்)



புளியங்கொட்டை காப்பி!

உப்பும், புளியும் இரட்டைப் பிறவி போலத்தான். ஆனால், உப்பு எவ்வளவு பயன்படுத்துகிறோமோ, அதில் பாதி அளவுக்குப் புளியைப் பயன்படுத்த வேண்டும் என்பதுதான் சரியான உப்பு, புளி விகிதம்! சாப்பாட்டில் புளிப்புச் சுவைக்குரிய லிமிட், புளிப்பு என்பதே தனியாகத் தெரியாமல், மற்ற சுவைகளுடன் கலந்து, உணவுக்குச் சுவையூட்டும்படியாக இருக்க வேண்டும் என்பதுதான்.

புளியில், பழைய புளி, புதிய புளி என்று இரண்டு வகை உண்டு. பழைய புளி, கொஞ்சம் கறுப்பு நிறமாக இருக்கும். இதனால் பழைய புளியைப் பயன்படுத்தி சமையல் செய்கிறபோது, சாம்பாரோ, ரசமோ நல்ல கலராக இருக்காது. ஆனாலும் சொல்லுகிறேன். சமையலுக்குப் பழைய புளி பயன்படுத்துவதுதான் நல்லது. சமையல் நல்ல நிறமாக இருக்க வேண்டும் என நினைப்பவர்கள், பழைய புளியையும், புதிய புளியையும் சேர்த்துப் பயன்படுத்தலாம்.

எந்தப் புளியானாலும், கடையிலிருந்து வாங்கி வந்ததை, அது சுத்தம் செய்யப்பட்டது என்றாலும் கூட, அப்படியே சமையலுக்குப் பயன்படுத்த வேண்டாம். முதலில் நன்றாக வெயிலில் காய வைத்துக்கொள்ளுங்கள். அதன் பின், வாணலியில் போட்டு லேசாக வறுப்பது போலச் செய்யுங்கள். லேசான புகை வரத் தொடங்கும். அதுதான் பதம். அத்துடன் எடுத்து ஆற வைத்து, பத்திரப்படுத்துங்கள். கொஞ்சம் கொஞ்சமாய் எடுத்துச் சமையலுக்குப் பயன்படுத்துங்கள்.

புளி ஒரு வாய்வு அகற்றி மட்டுமில்லை, நிரந்தரமான மலச்சிக்கல் தொல்லை வராமலும் இருக்கச் செய்யும் குணமுடையது.

அடுத்து, யார் யார் புளியை உணவில் சேர்த்துக் கொள்ளுகிறபோது, எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று பார்க்

மூலிகைமணி
டாக்டர் க. வேங்கடேசன்
டாக்டர் க.வே. அபிராமி







"தேர்தலில் ஜெயித்தால் ஊழல் எதுவும் பண்ண மாட்டேனு நீங்க பேசியிருக்கக் கூடாது தலைவரே!"

"ஏன்யா?"

"கூட்டணி பற்றி மறு பரிசீலனை பண்ணணும்னு தோழமைக் கட்சியினர் சொல்லிட்டாங்க!"

— அம்பை தேவா

● ● ● ● ● ● ● ● ● ● ● ● ●

கலாமா? ஆஸ்துமா தொல்லையில் கஷ்டப் படுகிறவர்கள், அல்சர் உள்ளவர்கள், இந்த இரண்டு பிரிவினரும், சாப்பாட்டில் புளியை மிகக் குறைந்த அளவில்தான் பயன்படுத்த வேண்டும். புளியின் உபயோகம் அதிக மானால், இவர்களின் பிரச்னை தீவிரமாகி விடும் அபாயம் உண்டு.

இன்னும் சிலருக்குப் புளி ஒத்துக் கொள்ளாது. இவர்கள் சமையலில் புளிக்குப் பதிலாக, எலுமிச்சம் பழத்தைப் பயன்படுத்த லாம். இதில் புளியைவிட அமிலத்தன்மை குறைவு. அவசியமானால், எலுமிச்சம் பழத்தைவிட, அசிடிடி குறைந்த தக்காளி யையும் சமையலில் புளிப்புச் சுவையூட் டுவதற்குப் பயன்படுத்தலாம்.

பொதுவாக உணவில் புளி அதிகமாகிற போது பற்களில் அதிகமாகத் தேய்மானம் ஏற்படும். பற்கள் வலு இழக்கும். இதையும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

புளியை உணவில் அதிகமாகச் சேர்த்துக் கொண்டால், என்னென்ன தீமைகள் என்று எடுத்துக்காட்டும் சித்தர் பாடல் ஒன்று உண்டு. அதன்படி புளி அதிகரித்தால் சீக் கிரமே நரை ஏற்பட்டு விடும்; புத்தி கொஞ் சம் மந்தம் அடையும். பித்தம் அதிகரிக்கும். இதனால் வாந்தி, மயக்கம் வரும். முன்னாரே குறிப்பிட்டாற்போல, புளியை வாங்கிக் கொண்டு வந்தவுடன் வெயிலில் காய வைத்து, வாணலியில் வறுத்து, அதன்பின் பயன்படுத்தினால், புளியைப் பயன்படுத்து கிறபோது ஏற்படக்கூடிய நெகடிவ் எபெக்ட் களைத் தவிர்த்து விடலாம்.

புளி கரைத்தத் தண்ணீரை, நன்றாக வடி கட்டி, அதில் வாய்க் கொப்பளிக்க வேண் டும். இப்படி, தினம் மூன்று தடவை வீதம், இரண்டு அல்லது மூன்று தினங்கள் செய்து வந்தால் வாயில் வரும் புண்கள் ஆறிவிடும்.

புளி மட்டுமில்லாமல் புளிய மரத்தின் இலை, புளியங்கொட்டை, புளியின் ஓடு இவைகளுக்கெல்லாம்கூட மருத்துவ குணமுண்டு. கர்ப்பிணிப் பெண்கள், வாந்தி வரும்போல இருந்தால் புளிய மரத்தின் இலைகளை கொஞ்சம் எடுத்து வாயில் போட்டு, நன்றாகச் சிறிது நேரம் மென்று விட்டு, அதன்பின் துப்பி விடலாம். மற்றவர்களுக்கு, வாந்தி, பசியின்மை, ருசியின்மை போன்றவற்றுக்கு, புளியம் இலைகளை மென்றுவிட்டு, துப்புவது பலன் தரும்.

சமூக விரோதிகள், காப்பிப் பொடியில், புளியங்கொட்டை பொடியைச் சேர்த்து, மக்களை ஏமாற்றுவது கலப்படக்காரர் களுக்குக் கைவந்த கலை என்பது பகிரங்க மான ரகசியம். சட்டப்படி இது தவறு என் றாலும்கூட, ஆரோக்கியக் கண்ணோட்டத் தில், இதை அனைவருமே பின்பற்றலாம். புளியங்கொட்டைப் பவுடரை, வயிற்றுப் போக்கு, நீர்க்கடுப்பு இருந்தால், சிறிதளவு காபிப் பொடியுடன் சேர்த்து, டிகாஷன் போட்டு காபிப் போட்டுக் குடித்தால், பயன் கிடைக்கும்.

புளிய இலை கொழுந்தில் துவை யல் செய்து சாப்பிடலாம். அத்துடன் இல்லாமல் கொத்துமல்லி, கருவேப்பிலை துவையல் செய்கிறபோது, புளிக்குப் பதிலாக, புளிய மரத்து இலைகளைப் பயன்படுத் தலாம்.

இந்தக் காலத்தில், திடீர் புளியோ தரை மிக்ஸ் மளிகைக் கடைகளில் கிடைக் கிறது என்பதற்காக, பல வீடுகளிலும் வாங்கு கிறார்கள். செய்முறை ரொம்ப சுலபம் என்ப தாலும் ஆபீசுக்கு மதிய உணவுக்கு எடுத்துக் கொண்டு போவதற்குச் சௌகரியம் என்பதாலும், அடிக்கடி புளியோதரை செய்து விடுகிறார்கள். அடிக்கடி புளியோ தரை சாப்பிடுவது உடம்புக்கு நல்லதல்ல. தவிர, நிறைய புளியை உணவில் சேர்த்துக் கொள்ளுவதும், புளியோதரை சாப்பிடுவதும், மிகவும் ஆக்டிவ் ஆன இல்லற உறவுக்கு ஸ்பீடு பிரேக்கர் போட்டுவிடும் என்பதையும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். ○



நன்கு வளர்ச்சியடைந்த
சென்னைப் புறநகர்ப் பகுதியில்
டீலக்ஸ் அபார்ட்மெண்டுகள் ரூ.3.41 லட்சம் முதல்!!

சிக்கனமான விலையில் வசதியான வாழ்க்கை

HANSA
GARDEN
ராஜகீழ்ப்பாக்கம்

ஹன்ஸா கார்டன்

தாம்பரத்திற்கு முன்னதாக அமைந்துள்ள ஹன்ஸா கார்டன், ஒன்று / இரண்டு படுக்கையறை மற்றும் இரண்டு படுக்கையறை + படிப்பறை கொண்ட ஃப்ளாட்டுகளை வழங்குகிறது.

நேர்த்தியான வடிவமைப்பு, தரமிக்க கட்டுமானம்.

- ஒரு படுக்கையறை ஃப்ளாட்டின் விலை ஏறத்தாழ ரூ.3.41 லட்சம். இரண்டு படுக்கையறை ரூ.4.64 லட்சம் முதல். இரண்டு படுக்கையறை + படிப்பறை ரூ.5.58 லட்சம் முதல்.
- ஃப்ளாட் முழுவதும் செராமிக் டைல்ஸ் ஃப்ளோரிங்.
- ஒவ்வொரு ஃப்ளாட்டிற்கும் தொலைபேசி மற்றும் டிஷ் ஆன்டெனா இணைப்பு.
- சுத்தப்படுத்தப்பட்ட குடிநீர் சப்ளை மற்றும் நவீன முறையில் அமைக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு.
- விளையாட போதுமான இடவசதி மற்றும் புல்வெளியமைந்த சுற்றுச்சூழல்.
- தாம்பரம் ரயில் நிலையம் செல்ல காம்ப்ளக்ஸிற்கே சொந்தமான போக்குவரத்து வசதி.
- பாரிமுனை, அண்ணாசாலை, சைதாப்பேட்டை, வேளச்சேரி, தி.நகருக்கு நேரடி அரசு பேருந்துச் சாலை இணைப்பு.

இடம் : மாடம்பாக்கம் பிரதான சாலை, ராஜகீழ்ப்பாக்கம், வேளச்சேரி - தாம்பரம் சாலையில் தாம்பரத்திற்கு 5 கி.மீட்டருக்கு முன்னால் உள்ளது.

ஹன்ஸா வந்தனா

குரோம்பேட்டை ரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள ஹன்ஸா வந்தனா, ஒன்று மற்றும் இரண்டு படுக்கையறை கொண்ட டீலக்ஸ் அபார்ட்மெண்டுகளை உங்களுக்கு வழங்குகிறது.

HANSA
VANDANA
குரோம்பேட்டை

- நான்கு ஃப்ளாட்டுகள் உள்ள தனித்தனி கட்டிடம்.
- ஃப்ளாட்டின் விலை ரூ.4.21 லட்சம் முதல்.
- ஃப்ளாட் முழுவதும் செராமிக் டைல்ஸ் ஃப்ளோரிங்.
- வாட்டர் ட்ரீட்மெண்ட் பிளாண்ட்.

இடம் : நாயுடு ஷாப் ரோடு, ராதா நகர், குரோம்பேட்டை.

புக்கிங்கிற்கு அணுகவும்:

ஹன்ஸா எஸ்டேட்ஸ் பிரைவேட் லிமிடெட்

சிவராஜ் எஸ்டேட்ஸ், நான்காம் தளம்,
624, அண்ணா சாலை, சென்னை - 600 006.
போன் : 8293135, 8292315, 8292323
ஃபேக்ஸ் : 8293135.
email : hansaest@md4.vsnl.net.in

"தமிழ்நாட்டில் கடந்த ஐந்தாண்டு காலத்தில், திமுக அரசால் நிறைவேற்றப்பட்ட திட்டங்களும் வளர்ச்சிப் பணிகளும் ஏராளம். குறிப்பாக எங்கள் சமயநல்லூர் சட்டமன்றத் தொகுதி, சாதனைகளின் மகுடமாக விளங்குகிறது. வரும் தேர்தலிலும் அண்ணன் வெற்றி பெற்று அமைச்சராகி விட்டால், இந்தத் தொகுதி தமிழ்நாட்டின் மாதிரித் தொகுதிகளில் ஒன்றாகி விடும்" என்று சொல்கிறார் தொகுதியில் உள்ளடங்கிய கள்ளந்தரி ஊராட்சித் தலைவரான ஜெயவேலு. தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர்: ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி நலத்துறையின் அமைச்சர் சமயநல்லூர் செல்வராஜ்.

தமிழ்நாட்டிலேயே பத்து பெரிய தொகுதிகளில் சமயநல்லூரும் ஒன்று. கிட்டத்தட்ட நான்கு லட்சம் வாக்காளர்கள். கிராமப் பகுதிகள் தவிர, மதுரை மாநகராட்சியின் எட்டு வட்டங்களும் இந்தத் தொகுதியில் அடக்கம். வாக்காளர்களில் கணிசமானவர்கள் ஆதி திராவிடர்கள்.

1977ல் அ.தி.மு.க சார்பாக இந்தத் தொகுதியில் நின்று வெற்றி பெற்றார் செல்வராஜ். பிறகு 1980ல் திமுகவுக்கு வந்தார். இன்று வரை கலைஞர் தலைமையில் உறுதியாக இருக்கிறார். இடையில் 1984ல் தி.மு.க சார்பாக போட்டியிட்டுத் தோல்வியைத் தழுவினார். பொதுவாகவே இந்தத் தொகுதி "இரட்டை இலை" பக்தர்களைக் கொண்ட தொகுதி. "அ.தி.மு.க.வுக்கு இந்தத் தொகுதி பட்டா போட்டு கொடுத்துவிட்டதைப் போல அவர்கள் பேசிக் கொண்டு திரிகிறார்கள். ஆனால் அவர்கள் மண்ணைக் கவ்வப் போவது நிச்சயம். இந்த முறை அந்த அளவுக்கு அமைச்சர் தொகுதிக்குச் செய்திருக்கிறார்" என்று பட்டியலிடுகிறார் ஜெயவேலு.

● வண்டியூர் - தொண்டி சாலை ராணி மங்கம்மா காலத்தில் போடப்பட்டது. அதன்பின் அந்தச் சாலை முழு அளவில் செப்பனிடப்படவேயில்லை. குண்டும் குழியுமாக இருந்த அந்தச் சாலையைப் பள பள சாலையாக

மங்கம்மா சாலைக்

மாற்றியிருக்கிறார் அமைச்சர். சாலையின் இடையில் வைகை ஆற்றில் மணலூர் - சக்குடி கிராமங்களை இணைக்கும் விதமாக ஏழு கோடி செலவில் பாலம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.

● பூவலாம்பட்டி - மாலைப்பட்டி இடையே பெரியாற்றுக் கால்வாய் மேல் ஐம்பத்து ஐந்து லட்சம் ரூபாய் செலவில் பாலம். அந்தப் பகுதி கரும்பு விவசாயிகளின் நாற்பது ஆண்டு கால கோரிக்கை அது.



● சமயநல்லூர் ரயில்வே மேம்பாலம் திறந்தாகிவிட்டது.

● கூடல் நகரில் உயர்மட்டப் பாலம் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

● வண்டியூர் கண்மாய் தூர் வாறப்பட்டு அதில் பெரியாறு பாசன கால்வாய் இணைக்கப்பட்டு தண்ணீர் வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதில் தண்ணீர் நிரப்பி படகுகள் விடப்பட்டு, பொழுதுபோக்கு மையமாக்க மாற்று ஏற்பாடுகள் நடக்கின்றன.

● அமைச்சர் முயற்சியில், சமயநல்லூரில் ரூ. 480 கோடி செலவில் 205 மெகாவாட்

உற்பத்தி செய்யும் தனியார் மின் நிலையம்.

● தொகுதியெங்கும் நூற்றுக்கணக்கான கிராமங்களில் மேல்நிலைத் தொட்டிக் கட்டப்பட்டு பாதுகாக்கப்பட்ட தண்ணீர் விநியோகம்.

● பறவை - அதலை இடையே ஐம்பத்து மூன்று லட்சம் செலவில் பாலம்.

"நான் 1996ல் தேர்தலில் வோட்டு கேட்டபோது மக்கள் என் முன் வைத்தவை சாலை, பஸ் வசதி மற்றும் குடிதண்ணீர்ப் பிரச்னைகள் தான். இப்போது ஏராளமான கிராமங்களுக்குத் தார்ச் சாலை மற்றும் சிமெண்ட் சாலை போட்டாகி விட்டது. பேருந்துகளும் விடப்பட்டுள்ளன. தொகுதியில் இப்போது எங்கும் குடிநீர் பஞ்சம் கிடையாது" என்கிறார் அமைச்சர்.

அரசியலுக்கு வரும் முன் பதினோரு ஆண்டுகாலம் ஆசிரியர் பணியில் இருந்துள்ளார். தி.மு.க நடத்திய எல்லா போராட்டங்களிலும் கலந்து கொண்டிருக்கிறார். "1985ம் ஆண்டு மொழிப்போர் போராட்டத்தில் அரசியல் சட்டத்தை எரித்த போது மதுரை பெரிய ஆஸ்பத்திரி முன்பு அண்ணனைக் கைது செய்தார்கள்.



"இந்த முறை எதிர்க்கட்சியினரின் யுக்திகளை மட்டுமல்லாமல் காலைவாரக் காத்திருக்கும் கட்சித் தோழர்களையும் அமைச்சர் சமாளித்தாக வேண்டும்!"

வந்த மவுசு!

அவரை வண்டியில் ஏற்றும்போது, அவரது தாயாரை மிகவும் சீரியஸான நிலையில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்தார்கள். இவர் அம்மாவைக் கூட பார்க்காமல் ஜெயிலுக்குப் போய் விட்டார். தாயார் இறந்தபோதும் ஜாமீனில் வரவில்லை. 49 நாட்கள் ஜெயில் வாசம் அனுபவித்த பிறகே வெளி வந்தார். இதைக் கேள்விப்பட்டு தலைவர் கலைஞர் உணர்ச்சி வசப்பட்டுப் போனார். "தமிழ்த் தாய் காக்க தன் தாய் மறந்தார்" என்று முரசொலியில் இவரைப் பற்றி எழுதினார்" என்கிறார் மதுரையில் உள்ள கழக பகுதிச் செயலாளர் ஜெகந்நாதன்.

தொகுதியில் மட்டுமல்லாமல் தான் பொறுப்பு வகிக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையிலும் தனது முத்திரையைப் பதித்திருக்கிறார் அமைச்சர் என்கிறார்கள் கோட்டை அதிகாரிகள்.

"1991 - 96 அ.தி.மு.க ஆட்சியில் ஆதி திராவிடர்களுக்கு 3000 தொகுப்பு வீடுகள்தான் கட்டப்பட்டன. ஆனால் கடந்த ஐந்து வருட காலத்தில் மட்டும்

இரண்டரை லட்சம் வீடுகள் ரூ. 660 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன. மூன்று லட்சம் பேருக்கு வீட்டு மனைப்பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆதி திராவிட மாணவர்களுக்கான கல்வி மற்றும் உணவு உதவித் தொகை பல மடங்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. ஹாஸ்டல்கள் கோடிக்கணக்கான செலவில் பழுது பார்க்கப்பட்டுள்ளன. கலைஞர் ஆட்சியில் புதிதாக 124 ஹாஸ்டல்கள் கட்டப்பட்டிருக்கின்றன. பழங்குடியினர் ஜாதிச் சான்றிதழ் பெறுவதில் உள்ள சிரமங்கள் குறைக்கப்பட்டுள்ளன'' என்று சொல்கிறார் அமைச்சரின் முதுநிலை உதவியாளர்.

மாநிலத்தின் முதல் உழவர் சந்தை அமைச்சர் தொகுதியில் தான் திறக்கப்பட்டது. மாதம் ஒருமுறை அதிரடியாக அங்கு 'விசிட்' செய்து நிலைமையைக் கண்காணிக்கிறார் அமைச்சர். உயர்நீதி மன்றத்தின் கிளை மதுரையில் அமைச்சரின் தொகுதியில்தான் அமைக்கப்படுகிறது. இவற்றைத் தவிர பன்னிரண்டு கோடி செலவில் நெல்மண்டி வளாகம், பத்து கோடி செலவில் அட்டகாசமான மாட்டுத் தாவணி பஸ் ஸ்டாண்டு என்று அசத்தியிருக்கிறார் அமைச்சர்.

தொகுதியில் அமைச்சர் சந்திக்கும் பெரிய சவால் உட்கட்சிப் பிரச்னை. இந்த முறை அமைச்சர் எதிர்க்கட்சியினரின் யுக்திகளை மட்டுமல்லாமல், அவரைக் காலை வாரக் காத்திருக்கும் கட்சிப் பிரமுகர்களையும் சமாளித்தாக வேண்டும் என்கிறார்கள். அமைச்சரை யார் வேண்டுமானாலும் எளிதில் அணுக முடியும். ''மதுரை நகரத்தில் குடியிருப்பதால் தொகுதியின் உட்புற கிராமங்களிலிருந்து மக்கள் அவரைச் சந்திக்கச் சற்று சிரமப்படுகிறார்கள்; எனவே தொகுதியின் மையத்தில் அவர் வசித்தால் நல்லது'' என்று ஒரு கருத்தும் மக்கள் மத்தியில் சொல்லப்படுகிறது. ''இந்தச் சிறு குறைகளையெல்லாம் மீறி, இந்த முறையும் அமைச்சர் வெற்றிக் கொடி நாட்டுவார்'' என்று நம்பிக்கையுடன் காத்திருக்கிறார்கள் அவருக்கு நெருக்கமான உடன்பிறப்புக்கள்.

— ப்ரியன் ஸ்ரீநிவாசன்

படம்: ராஜன்

மாட்டு வண்டி பூட்டிக்கிட்டு...

த.மா.காவின் சைக்கிள் சின்னத்தை மக்கள் மனத்தில் பதிய வைப்பதற்காக மாட்டு வண்டியில் பிரசார ஊர்தி வடிவமைத்திருக்கிறார், த.மா.கா



பிரமுகரான பேராசிரியர் உதயபானு. சத்தியமூர்த்தி பவனில் மூப்பனார் அந்தப் பிரசார ஊர்தியைப் பார்வையிட்டார். ''இந்த மாடர்ன் யுகத்தில் மாட்டு வண்டி பிரசாரமா?'' என்ற ஆச்சர்யத்துடன் அவர் கேட்டபோது ''கார், வேன் என்றால் கிராமங்களைச் சுற்றி வரும்போது, கிடு, கிடுவெனச் சுற்றி வந்து மறைந்துவிடும். ஆனால் மாட்டு வண்டி என்றால் நன்றாகப் பார்க்கும் வண்ணம் நிதானித்துச் செல்லும். ஊர்தியில் வரையப்பட்டிருக்கும் சைக்கிள் சின்னமும் மக்கள் மனத்தில் பதியும்'' என்று பதில் சொன்னார் உதயபானு. ''கூட்டணி அமைப்பதில் மட்டுமல்ல; பிரசார பாணியிலும் த.மா.கா 'ஸ்லோ'தான் போலிருக்கிறது' என்று ஜோக்கடித்தார் பத்திரிகை நண்பர் ஒருவர்.

— கௌசி

படம்: ராஜன்

திலகவதி தன் தோளைத் தொட்டதும்தான் உணர்வுக்கு வந்தாள் யமுனா.

"என்ன யமுனா..! அப்படியே திகைச்சுப் போயிட்டே. நான் ஏதாவது தப்பா சொல்லிட்டேனா....?"

"அய்யோ...! இல்லீங்கத்தே..."

"பின்னே என்ன...



கண்ணுல தண்ணி...?"

"அது.... வந்து.... அத்தே..."

"எனக்குத் தெரியும்... சொல்லட்டா..." தன்னைப் பார்த்து புன்னகைக்கிற திலகவதியைக் கொஞ்சம் பயத்தோடு பார்த்தாள் யமுனா.

'அத்தை என்ன சொல்லப் போகிறாள்..?'

திலகவதி தொடர்ந்தாள். "எந்த ஒரு பொண்ணுக்குமே தான் உண்டாகியிருக்கிற விஷயம் தெரிஞ்சதுமே தன்னைப் பெத்த அம்மாவோட ஞாபகம் வரும். அம்மா இப்போ உயிரோடு இருந்திருந்தா எப்படியிருக்கும்ன்னு நினைக்கத் தோணும். என்ன... நான் சொன்னது சரியா...?"

திலகவதி இப்படிக் கேட்டதும் அது வரைக்கும் வராமல் இருந்த அம்மாவின் ஞாபகம் முட்டி மோதியபடி உள்ளேயிருந்து கிளம்ப, கண்களில் புது பிளேடின் கூர்மையோடு கண்ணீர் சட்டென்று எட்டிப் பார்த்து பளபளத்தது.

"அ...த்...தே...!"

"அடேடே.... என்னம்மா இது...! உனக்கு உன்னோட அம்மா ஞாபகம் வந்தா என்னை நினைச்சுக்கோ. வெளில இருந்து பார்க்கிறவங்களுக்குத்தான் நீ இந்த வீட்டுக்கு மருமக. எனக்கு நீ பொண்ணுதான். சௌம்யா ஹரிதாவோடு சேர்த்து எனக்கு மூணு பொண்ணுங்க. போதுமா."

"அத்தே...!" கண்ணீர் பெருக்கோடு திலகவதியின் தோளில் சாய்ந்து கொண்டாள் யமுனா. அவள் தலையைக் கோதி விட்டாள்.

"இதோ பார் யமுனா...! வெள்ளிக்கிழமையும் அதுவுமா ஒரு சுமங்கலிப் பொண்ணு வயத்துல குழந்தையோடு அழக் கூடாது. உனக்கு அம்மாவா நான் இருக்கேன். நீ எது கேட்டாலும் சரி. அது அடுத்த நிமிஷமே உன் கையில் இருக்கும். இந்த வீட்டுக்கு நீதான் ராணி..."

"சாதாரண ராணி கிடையாது. மஹாராணி." குரல் கொடுத்துக் கொண்டே அறைக்குள் நுழைந்தார் சிவப்ரகாசம்.

திலகவதி குரலைத் தாழ்த்திக் கொண்டு கிசுகிசுத்தாள். "கண்ணைத் துடைச்சுக்கோம்மா. உன்னோட மாமா பார்த்துட்டார்ன்னா பழையபடி முருங்கமரம் ஏறிடுவார்..."

யமுனா விநாடிக்கும் குறைவான நேரத்துக்குள் கண்களைச் சேலைத் தலைப்பால் ஒற்றிக் கொண்டு முகத்திற்குப் பளிச்சென்று ஒரு புன்னகையைக் கொடுத்தாள்.

சிவப்பிரகாசம் உள்ளே வந்தார். "என்ன திலகம்..! ஒரு இளவரசனைப் பெத்து கொடுக்கப் போகிற நம்ம மருமகளைப் பார்த்து வெறுமனே ராணின்னு சொல்லிக்கிட்டிருக்கே. அவ மஹாராணி."

"மஹாராணி'ன்னு வெறும் வாய்ல

ராஜேஷ்குமார்

11

சொல்லிட்டா போதுமா...?"

"வேற என்ன பண்ணணும்ங்கிற...?"

"கீர்த்திலால் பவன்தாஸ் ஜுவல்லரி பேலஸுக்குக் கூட்டிப் போய் ஒரு வைர நெக்லஸை வாங்கிப் போட வேண்டாமா?"

யமுனா பதற்றமாய்ப் பார்த்தாள்.

"அய்யோ... அத்தே...! அதெல்லாம் வேண்டாம். இருக்கிற நகைகளையெல்லாம் போட்டுக்கவே...."

"ஏன் என் மருமகளுக்கு வாங்கிப்போட மாட்டேனா.... இன்னிக்குச் சாயந்திரம் கீர்த்திலால் பவன்தாஸ் கடைக்குப் போறோம். வைர நெக்லஸை வாங்கறோம்."

"வேண்டாம் மாமா... அத்தைதான் ஏதோ சொன்னாங்கன்னா... நீங்களும் அதைப் பெரிசா எடுத்துக்கிட்டு.."

சிவப்பிரகாசம் புன்னகை செய்தார். "இது எனக்குப் பெரிய விஷயந்தாம்மா. இந்த வீட்டுக்கு நீ ஒரு வாரிசைக் கொடுக்கப்போறது பெரிய விஷயம் இல்லையா...? என்னைப் பொறுத்த வரைக்கும் நீ இந்த வீட்டுக்கு மருமகளா வந்த பிறகுதான் எல்லா நல்ல விஷயங்களும் நடந்திருக்கு. செவ்வாய் தோஷம் இருந்த சௌம்யாவுக்குப் பார்க்கிற வரன் எல்லாமே தட்டித் தட்டிப் போயிட்டிருந்தது. நீ இந்த வீட்டுக்குள்ளே காலடி எடுத்து வெச்சே... எல்லாம் வெளிநாட்டு வரன்களாக வந்தது. சௌம்யாவைக் கல்யாணம் பண்ணிக்க ஒரு போட்டியே இருந்தது. அந்தப் போட்டியில்



...ஜெ டிஸ்னி

ஒரு நல்ல மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுத்தோம். அடுத்த மாசம் கல்யாணம் நடக்கப் போகுது. அது மட்டுமா... உன் புருஷன் அகிலுக்குப் ப்ரமோஷன். சம்பளம் இருபத்தேழாயிரம் ரூபாய். எல்லாத்துக்கும் மேலா உன்னோட அத்தையை எடுத்துக்கோ. நீ இந்த வீட்ல காலடி எடுத்து வைக்கிறதுக்கு முந்தி இவ டாக்டர் வீட்டுக்குப் போகாத நாளே கிடையாது. உடம்புல இருக்கிற ஒவ்வொரு பார்ட்டுக்கும் டைம் டேபிள் போட்டுக்கிட்டு கலர் கலரா மாத்திரை சாப்பிட்டுக்கிட்டு இருந்தா... இப்போ ஒரு சாதாரண தலைவலி ஜலதோஷம்கூட இவளைக் குசலம் விசாரிக்க வர்றது கிடையாது. டாக்டர் சதாசிவத்துகிட்டே போய் மாசக்கணக்காச்சு."

யமுனா செல் செல்லாய் நெகிழ்ந்து கொண்டிருக்கும்போதே பக்கத்தில் இருந்த டெலிபோன் கூப்பிட்டது. திலகவதி ரிஸீவரை எடுத்து 'ஹலோ' சொல்லி செவிமடுத்துவிட்டு சற்றே பதற்றத்தோடு கணவரிடம் நீட்டினாள்.

"என்னங்க...! ஃபோன்ல மாப்பிள்ளையோட அப்பா...."

ரிஸீவரை வாங்கி காதுக்குப் பொருத்தினார் சிவப்ரகாசம்.

"நமஸ்காரம்...! நானே உங்களுக்குப் போன் பண்ணனும்ன்னு நினைச்சிட்டிருந்தேன். காலையில் ஆறு மணிக்கெல்லாம் லலிதாம்பிகை கோயிலுக்குப் போய் இன்விடேஷன் பண்டலை வெச்சு பூஜை பண்ணிட்டு வந்தாச்சு. ஜெகந்நாத ஸ்வாமிகளுக்கு முதல் இன்விடேஷனும் கொடுத்துட்டோம். ஸ்வாமிகள் கண்டிப்பா கல்யாணத்துக்கு வந்துடுவார். டயரியில் தேதியை நோட் பண்ணிக்கிட்டார்... நீங்க உங்க குல தெய்வ கோயிலுக்குப் போய்ட்டு வந்துட்டீங்களா...?"

"........"

"அப்படியா... ரொம்ப சந்தோஷம்."

"........"

"நீங்க எப்படி சொன்னாலும் சரி. இதுல உங்க விருப்பம்தான் முக்கியம். இன்னிக்கு நானும் என்னோட ஒய்ஃப்பும் ஃப்ரீயாத்தான் இருக்கோம். புறப்பட்டு வரச் சொன்னா வந்துடறோம்..."

".........."

"நோ...நோ... எங்களுக்கு எந்தத் தொந்தரவும் இல்லை. ஒரு பத்து நிமிஷத்துல புறப்பட்டு வந்துடறோம்" சொல்லி ரிஸீவரை வைத்த சிவப்ரகாசம் மனைவியை ஏறிட்டார்.

"திலகம்...! இன்னிக்கு நாள் நல்லாயிருக்கிறதால நம்ம பக்கத்திலேயும் அவங்க பக்கத்திலேயும் இருக்கிற நெருங்கின சொந்தம் சில பேரை இருவீட்டு அழைப்பா கூப்பிட்டுடலாம்ன்னு மாப்பிள்ளையோட அப்பா பிரியப்படறார்.... ராகு காலத்துக்கு முன்னாடி வீட்டைவிட்டுப் புறப்பட்டு வரச் சொல்றார். நாம கிளம்பலாமா... அவங்க தயாராயிருக்காங்களாம்."

"போய்ட்டு மத்தியானம் ஒரு மணிக்குள்ள வந்துடலாம் இல்லையா...?"

"தாராளமா...! அவங்க சைடுல ரெண்டு சொந்தம். நம்ம சைடுல ரெண்டு சொந்தம். அவ்வளவுதான்..." சொன்னவர் யமுனாவை ஏறிட்டார்.

> **"தேர்தல்ல ஜெயிச்சப்புறம் நம்ம தலைவர் சொதப்பிட்டார்!"**
> **"அதெப்படி?"**
> **"வாக்காளர்களுக்கு நன்றி அறிவிப்பு கூட்டம் நடத்தறதுக்கு பதில் கள்ளவோட்டு போட்டவங்களுக்கு நன்றி அறிவிப்பு கூட்டம் நடத்திட்டாரு!"**
> **– வந்தவாசி பா. ஜெயக்குமார்**

"அம்மா யமுனா...! நாங்க போய்ட்டு வர்ற வரைக்கும் நல்லா படுத்துத் தூங்கி ரெஸ்ட் எடும்மா. சாயந்தரம் நாம கீர்த்திலால் பவன்தாஸ் கடைக்குப் போறோம். நாலு லட்சத்துல வைர நெக்லஸ் வாங்கறோம்..."

"மா....மா..."

"பேசாமே படும்மா.. இனி ஒரு பத்து மாச காலத்துக்கு நாங்க என்ன சொல்றோமோ அதைத்தான் நீ கேட்கணும்.... நாங்க வெளியே போய்ட்டு வர்ற வரைக்கும் நீ இந்த ரூமை விட்டு வரக்கூடாது. நேரத்துக்கு டைனிங் டேபிளுக்கு வரணும். சாப்பிடணும். படுத்துத் தூங்கணும். இந்த வீட்ல இனிமே உனக்கு இதுதான் வேலை..."

இருவரும் அறையிலிருந்து கிளம்பி வெளியேறிப் போக அவர்களை உற்றுப் பார்த்தாள் யமுனா. அவர்கள் பார்வையில் இருந்து மறைந்ததும் மனத்திரையில் ஸ்டில் போட்ட மாதிரி இன்ஸ்பெக்டர் பால்பாண்டியன் தெரிந்தார். தலைக்கு மேல் ஃபேன் உச்சகட்ட வேகத்தில் சுழன்று

கொண்டிருந்தாலும் உடம்பு உஷ்ணமாக வியர்த்தது.

'இப்போது மணி என்ன இருக்கும்...?'

கட்டிலிலிருந்து மெல்ல இறங்கி பூனை நடைபோட்டு கதவோரம் சென்று ஹால் சுவரில் அப்பியிருந்த கடிகாரத்தைப் பார்த்தாள்.

மணி ஒன்பதே கால்.

இன்னும் முக்கால்மணி நேரம் இருக்கிறது. இந்த வீட்டை விட்டு வெளியேறி இன்ஸ்பெக்டர் பால்பாண்டியனை ஆஞ்சநேயர் கோயிலில் போய்ச் சந்திக்க முடியுமா...?

வாய்ப்பே இல்லை. சௌம்யாவும் ஹரிதாவும் வீட்டில் இருக்கும் போது எப்படி வெளியே போக முடியும்?



'சரளாவுக்குப் ஃபோன் செய்து வீட்டில் இருக்கும் இக்கட்டான விவரத்தை எடுத்துச் சொல்லி அவளை மட்டும் கோயிலுக்கு அனுப்பி வைத்து இன்ஸ்பெக்டர் பால்பாண்டியனிடம் போகச் சொல்லலாமா...?'

போர்டிகோவில் நின்றிருந்த காருக்குள் சிவப்ரகாசமும் திலகவதியும் ஏறிக் கொள்ள அது புறப்பட்டு காம்பௌண்ட் கேட்டைத் தாண்டுவது தெரிந்தது. சௌம்யாவும் ஹரிதாவும் சமையல் அறையில் இருந்தார்கள்.

இப்போது சரளாவுக்குப் ஃபோன் செய்தால் பேரலல் லைனில் யாரும் இருக்க மாட்டார்கள்.

கதவைச் சத்தம் இல்லாமல் சாத்திவிட்டு டெலிபோனுக்கு வந்து ரிஸீவரை எடுத்துக் கொண்டாள். டயலில் சரளாவீட்டு டெலிபோன் எண்களை ஒற்றி எடுத்தாள்.

மறுமுனையில் எங்கேஜ்ட் டோன் கேட்டது. ரீடயல் பட்டனை அழுத்த மறுபடியும் எங்கேஜ்ட் டோன். ஐந்து நிமிஷ நேரம் வரைக்கு முயற்சி செய்து பார்த்து விட்டு ரிஸீவரைக் கீழே வைத்தாள்.

உடனே ரிங் அடித்தது.

யமுனா ரிஸீவரை எடுத்தாள்.

"ஹலோ..."

மறுமுனையில் சரளாவின் குரல்.

"யமுனா...!"

"சரளா! உனக்குத்தான் ஃபோன் பண்ணிட்டிருந்தேன்."

"நான் உனக்கு ட்ரை பண்ணிட்டிருந்தேன்."

"சரி...! கோயிலுக்குப் போக ரெடியாயிட்டியா?"

"ஸாரி... யமுனா... நான் இப்போ கோயிலுக்கு வர முடியாத நிலைமை..."

யமுனா திகைத்தாள்.

"ஏ...ஏன்...?"

"மன்த்லி ப்ரீயட்.... ஸ்டமக் பெயின். அசைஞ்சா வலி உயிர் போறது. மாத்திரையை விழுங்கிப் பார்த்தேன். வலி குறையவே இல்லை."

"என்ன சரளா இப்படி பண்ணிட்டே! நான் இங்கே எப்பேர்ப்பட்ட பிரச்சனையில் மாட்டிக்கிட்டு இருக்கேன் தெரியுமா...?" யமுனா பதற்றமாய்ச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே- அறைக்கதவு மெல்லத் தட்டப்படும் சத்தம் கேட்டது.

தயானந்த் வருணை அழைத்துக் கொண்டு முன்னறைக்கு வந்தார். கம்ப்யூட்டருக்கு முன்பாக உட்கார்ந்து கீ போர்டில் எதையோ தட்டிக் கொண்டிருந்த பர்வதா எழுந்து நின்றாள்.

"பர்வதா..."

"ஸார்...."

"லேட்டஸ்ட் ரிச்சி மேகஸின் என்னோட கார்ல இருக்கு. போய்க் கொண்டா."

பர்வதா போர்டிகோவை நோக்கி வேக வேகமாய்ப் போனாள். தயானந்த் கலங்கிய தன் விழிகளைக் கர்ச்சீப்பால் ஒற்றிக் கொண்டு வருணிடம் திமிர்ந்தார்.

"வருண்! வாழ்க்கையில் எனக்கு எத்தனையோ தோல்விகள். எத்தனையோ அதிர்ச்சிகள். எல்லாத்தையும் தைரியமா கடந்து வந்திருக்கேன். பட் என் மனைவியோட இழப்பை மட்டும் என்னால் தாங்கிக்க முடியலை. அவளை உயிரோடு தகனம் பண்ணின காட்சி இப்போதும் என்னோட இதயத்தை அறுத்துக்கிட்டு இருக்கு. இப்படி ஒரு கொடுமை உலகத்துல யாருக்காவது நடந்திருக்குமாங்கிறது சந்தேகம்

வாட்ச் கேமரா!



கைகடிகாரத்தில் காமிரா

நாட்டில் திருடர்கள் பெருத்து விட்ட நிலையில் வீடு மற்றும் அலுவலகத்திற்கான பாதுகாப்பு சமாசாரங்களை விற்பதற்கென்றே சென்னை 'ஸ்பென்சர் ப்ளாசா'வில் டெக்ஸோன் (Techzone) என்ற ஒரு கடை திறக்கப்பட்டிருக்கிறது. வீட்டு வாசலில் பொருத்தக்கூடிய தம் மாத்தூண்டு கேமரா. (இது வாசலில் நிற்பவரைப் படம்பிடித்து உள்ளே இருப்பவருக்குத் திரையில் காண்பித்துவிடும்) கதவு அலாரம், கதவு மைக், பணப்பை அலாரம், வயர்லெஸ் வீடியோ, ஆடியோ என்று நீளும் இந்த ஐட்டங்கள் நம்மை ஆச்சர்யத்தில் மூழ்கடிக்கின்றன.

''வீட்டுப் பாதுகாப்புக்கான பொருள்களை சென்னையில் நாங்கள்தான் முதன் முதலாக அறிமுகப்படுத்தியிருக்கிறோம். விலை ரொம்பக் குறைவு என்பதால் மக்களிடம் நல்ல வரவேற்பு. அது மட்டுமில்லை வாட்ச் கேமரா, லேசர், பைபர் ஆப்டிக் லைட்ஸ், கார்-டீ.வி போன்று நிறைய நவீன ஐட்டங்கள் இங்கே விற்பனைக்கு உண்டு...'' என்கிறார் இந் நிறுவனத்தின் நவீன் பண்டாரி.

– அப்பு

படங்கள்: ஜரிஸ்



• நவீன்

தான்...''

வருண் அவரிடம் நிமிர்ந்தான். ''ஸார்...! இந்த கேஸட்டை போலீஸில் கொடுத்து யார்ன்னு கண்டுபிடிக்கச் சொன்னீங்களா...?''

''போலீஸ்ல கொடுக்காமலா இருப்பேன்...? இந்த கேஸட்டோட ஒரு காப்பி போலீஸ்ல இப்பவும் இருக்கு. அப்போ போலீஸ் கமிஷனராய் இருந்த ஜெயச்சந்திரன் தனிப்பட்ட முறையில் முயற்சி எடுத்துக்கிட்டு கொலையாளியைக் கண்டு பிடிக்க பிரம்ம பிரயத்தனப்பட்டார். முடியலை. ஒரு தனி போலீஸ் படையை இதுக்காக நியமிச்சார். கொலையாளி இருக்கிற திசையைக்கூட அவங்களால் கண்டுபிடிக்க முடியலை. கடந்த எட்டு வருஷ காலத்தில் நாலு கமிஷனர்கள் மாறிட்டாங்க. ஒருத்தராலேயும் இந்தக் கேஸை கொஞ்சம் கூட நகர்த்த முடியலை...! இதோ... இந்தப் ஃபைலை ஒரு பத்து நிமிஷம் புரட்டிப்பாரு. கேஸோட தீவிரம் எப்படி இருந்ததுன்னு உனக்குத் தெரியும்...''

சொன்ன தயானந்த் டீபாய்க்குக் கீழே வைத்திருந்த ஒரு பழைய ஃபைலை எடுத்து வருணின் கைகளில் திணித்தார்.

''ம்... பாரு...''

வருண் தயக்கமாய் அந்த ஃபைலைப் புரட்டினான். உள்ளே நிறைய பேப்பர் கட்டிங்குகள். எல்லாம் பிரபல நாளிதழ்களிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டவை. ஒவ்வொரு பேப்பர் கட்டிங்கிலும் தயானந்தின் மனைவி வைசாலி போட்டோ பார்வைக்குக் கிடைத்தது. பக்கத்திலேயே செய்தி தலைப்புகள்.

பிரபல தொழிலதிபர் தயானந்தின் மனைவி கோரக் கொலை!

கொலையாளியின் வெறிச் செயல்.

வருண் பேப்பர் கட்டிங்குகளைப் புரட்டினார். 'கொலையாளி பிடிபடுவது எப்போது... கமிஷனர் பேட்டி.

தயானந்த் கண்ணீர் பேட்டி.

கொலையாளியைப் பிடிக்க போலீஸ் தனிப்படை.. வீடியோ காஸட் சி.பி.ஐ. போலீஸாரிடம் இன்று ஒப்படைப்பு.

வருண் அந்த ஃபைலைப் பார்த்து முடிப்பதற்குள் பர்வதா கையில் ஒரு வழ வழப்பான அட்டையோடு கூடிய புத்தகத்தோடு வந்தாள்.

தயானந்த் அந்தப் புத்தகத்தை வாங்கினார்.

''வருண்..''

''ஸார்...'' வருண் நிமிர்ந்தான். கையில் இருந்த புத்தகத்தைக் காட்டி கேட்டார்.

'' 'ரிச்சி' என்கிற இந்தப் புத்க்கத்தைப் பத்தி நீ கேள்விப்பட்டிருக்கியா...?''

பார்த்துவிட்டுத் தலையாட்டினான் வருண்.

''இல்லை.....ஸார்....''

''தமிழ் நாட்டில் இருக்கிற டாப்-10 பணக்காரர்கள் யார் யார்னு சொல்ற புத்தகம் இது. என்னோட மனைவியை உயிரோடு தகனம் பண்ணின பாவி இந்தப் புத்தகத்துல முப்பத்தி ஆறாவது பக்கத்தில் இருக்கான். புரட்டிப் பாரு....''

வருண் அந்தப் புத்தகத்தை வாங்கி வேகமாய்ப் பக்கங்களைத் தள்ளினான். முப்பதியாறாவது பக்கம் வந்தது.

(தொடரும்)

"ஐந்து மாநிலங்களில் நடக்க இருக்கும் சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றிக் கனியைப் பறித்து விட முடியும்" என்ற நம்பிக்கையுடன் இருந்த தேசிய ஜனநாயகக் கூட்டணிக்குப் பெரிய இடியாக இறங்கியிருக்கிறது தெஹல்கா இணைய தளம் அம்பலப்படுத்தியிருக்கும் ஊழல்!

ஆயுதங்கள் மற்றும் ராணுவத் தளவாடங்கள் வாங்குவதில் ஊழல் நடப்பது என்பது இன்று நேற்றல்ல; நாடு சுதந்திரம் வாங்கியதிலிருந்தே இந்த விவகாரங்கள் குறித்துச் செய்திகள் அரசல்புரசலாக அவ்வப்போது வெளிவந்து கொண்டுதான் இருக்கின்றன. வாங்கிய கமிஷன் கோடிக்கணக்கில் இருந்ததால் போபர்ஸ் அதிகமாக அடிபட்டுக் கொண்டிருக்கிறது. தேசப்பற்று, தேசப் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு உதாரணமாக தங்களைத் தாங்களே ஐஎஸ்ஐ முத்திரை போட்டுக் கொண்டு வளைய வரும் பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ் பிரமுகர்கள் மாட்டிக் கொண்டதுதான் காலத்தின் கோலம். என்றைக்குக் கமிஷன், பேரம் என்று இறங்கி விட்டார்களோ அப்போதே வாங்கப் போகும் ஆயுதங்களின் தரம் கேள்விக்குறியதாகிவிடும் என்பது பா.ஜ. பிரமுகர்களுக்குத் தெரியாததல்ல.



மேட்ச் பிக்ஸிங் விவகாரத்தில் 'ஊழல்' கிரிக்கெட் வீரர்களை மனோஜ் பிரபாகர் துணையுடன் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்த தெஹல்கா அற்புதமான புலனாய்வு செய்து ஜனநாயகத்துக்கு வலுவூட்டியிருக்கிறது. கிட்டத்தட்ட பத்து லட்ச ரூபாய் செலவு செய்து ஏழு மாதங்களில் அரசியல்வாதிகள் - அதிகாரிகள் - புரோக்கர்கள் ஆகியோர் அமைந்துள்ள ஊழல் அணியைத் தோலுரித்துக் காட்டியிருக்கிறார்கள். அநிருத்த பெஹல், மாத்யூ சாமுவேல் என்ற பெயர் கொண்ட தெஹல்கா நிருபர்கள் வெஸ்ட் எண்ட் இண்டர்நேஷனல் என்ற கற்பனை நிறுவனத்தின் பிரதிநிதிகளாய் செயல்பட்டு தெர்மல் பைனாகுலர் மற்றும் காமிரா ஆர்டர் கொடுக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்டவர்களை அணுகி 'பேரம்' பேசியிருக்கிறார்கள். அவர்கள் எதிர்பார்த்தபடியே ஊழல் முகங்கள் அறிமுகமாகியிருக்கின்றன. கைப்பெட்டியுடன் இணைக்கப்பட்ட சிறிய ரகசிய காமிராவில் பணம் கொடுப்பது உட்பட காட்சிகள், உரையாடல்களைப் பதிவு செய்து, பிரமிக்க வைத்து விட்டார்கள்! கிட்டத்தட்ட நூறு மணி நேரம் படப்பதிவு இருக்கிறதாம். அதை நான்கரை மணி நேரமாக சுருக்கியிருக்கிறார்கள். "ஆபரேஷன் வெஸ்ட் எண்ட்" என்று பெயரிடப்பட்ட இந்த அஸைன்மெண்டுக்கு வழிகாட்டியாக இருந்தவர் ஆசிரியர் தருண் தேஜ்பால்!

பின்னணியில் இந்துஜா சகோதரர்கள்...

"இந்த விவகாரத்திற்குப் பின்னால் சதி இருக்கிறது" என்று பா.ஜ.க.வினர் சொல்வதையும் அலட்சியப்படுத்த முடியாது. பொதுவாகவே இந்தியாவில் இணைய தள நிறுவனங்கள் தடுமாறிக் கொண்டிருக்கின்றன. வருமானம் இல்லாததால் பல தளங்கள் மூடப்பட்டும் விட்டன. இந்த நிலையில் ஒரு இளைய தளம் லட்சக்கணக்கில் செலவு செய்து ஊழலை அம்பலப்படுத்தியிருக்கிறது என்றால் பின்னணியில் ஒரு சக்தி இருக்கிறது என்று சொல்பவர்களும் உண்டு. போபர்ஸ் ஊழலில் கோர்ட்டுக்கு இழுத்தடிக்கப்பட்டு இருக்கும் இந்துஜா சகோதரர்களை நோக்கி சந்தேகக் கைகள் நீள்கின்றன.

— சஞ்சயன்



“இந்த முன்னேற்றத்துக்குத் தடை போடுவது நியாயமில்லை!”

‘**வா**டகைத் தாய்’ கட்டுரையை ஏற்றுக் கொள்ள முடியவில்லை’ என்ற கடிதத்தைப் படித்தேன். ஆதரவற்ற அனாதைக் குழந்தையைத் தத்தெடுக்கலாம் என்பது நல்ல சிந்தனைதான். ஆனால் ஒரு விஷயத்தை மனத்தில் கொள்ளவேண்டும்.

‘அனாதைக் குழந்தைகள் அப்பாவிகள்தான் என்றாலும் இதயமே இல்லாத இருவரால், தங்களின் குழந்தை சந்திக்கப்போகும் தவிப்பையே உணரமுடியாத கல்நெஞ்சக்காரர்களினால் உருவாக்கப்பட்டவர்கள் அவர்கள். அவர்கள் உள்ளங்களிலும் அதே இறுக்கம் இருந்துவிட்டால்?... பெற்ற குழந்தைகள் புண்படுத்திப் பேசினாலே பொறுத்துக் கொள்ள முடியவில்லை என்கிறபோது தத்துக் குழந்தைகள் பிற்காலத்தில் அப்படி நடந்து கொண்டால்..? இரத்த பந்தமே இல்லாது வளர்ந்த உறவு கடைசிவரை நீடித்து நிற்குமா?’ – இதைப் போன்ற சஞ்சலங்கள் தம்பதிகளுக்கு வருவது இயல்பு.

அதோடு, திருமணம் என்ற பந்தத்தில் உருவாவது குழந்தை. கணவன் – மனைவி இருவர் மூலம் ஒரு குழந்தையை உருவாக்க எங்காவது சிறு துளி வாய்ப்பிருக்கிறதென்றால், அந்த வாய்ப்பை நழுவ விட முடியுமா? அதைப் பற்றிக் கொண்டு, பலனைத் தேடத் தானே அவர்கள் துடிப்பார்கள்? தங்கள் முட்டை, தங்கள் கருவணு இணைந்த சொந்தக் குழந்தையைப் பெற விஞ்ஞான முறையில் முயற்சிப்பதில் தவறில்லையே!

வாடகைத் தாயைப் பொறுத்த வரையில், வாழ்வில் அவள் நினைத்துப் பார்த்திராத வசதி, சுகம், அன்பு, பராமரிப்பு அவளுக்குக் கிடைக்கிறது.

பிராப்தம் – விதி என்றெல்லாம் நொந்து போகும் காலமல்ல இது. விஞ்ஞான முன்னேற்றம் விதியை வென்று காட்டும் காலம்! அந்த விஞ்ஞான வளர்ச்சிக்குத் தடை போடுவது நியாயமல்ல!

ஜி.ஜி. மருத்துவமனை, டாக்டர். கமலா செல்வராஜ்

‘**வா**டகைத் தாய்’ கட்டுரையை ஏற்றுக் கொள்ள முடியவில்லை’ என்ற ‘டாக்டர் நர்மதா அசோக்கின் ஆதங்கம் உண்மையானதே. என்னதான் பணத்திற்காக தன் கருப்பையை வாடகைக்குக் கொடுத்தாலும் அந்தப் பிஞ்சுக் கால்களும், கைகளும் வயிற்றுக்குள் அசைந்த அந்த இனிமையான நாட்களைத் தாயுள்ளத்தினால் கண்டிப்பாக மறக்க முடியாது. தன் genes – ல் தான் குழந்தை வேண்டும் என்று லட்சக் கணக்கில் பணம் செலவு செய்வதைவிட ஒரு அனாதைக் குழந்தைக்கு வாழ்வு கொடுப்பதே நல்ல முடிவு என்று சொன்ன ‘நர்மதா’ அவர்களுக்குப் பாராட்டு.

திருச்சி-17, உஷா முத்துராமன்.

‘**வா**டகைத் தாய் கட்டுரையை ஏற்க முடியாது’ என்று ஆணித்தரமாக கூறுகிறார் டாக்டர் நர்மதா. பத்து மாதம் சுமந்த பிறகு, பெற்று வளர்த்து ஆளாக்கும் பொறுப்பை ஏற்க முடியாமல் அனாதையாய் விட்டுச் செல்வதும் பெண்தானே!

சென்னை–53, பி. பத்மாக்ஷிபுண்ணியகோட்டி.


“**டா**க்டர் நர்மதா அசோக்கின் கடிதம் உண்மையான மனிதநேயம் எப்படிச் செயல்பட வேண்டும் என்று மிகத்

தெளிவாக எடுத்துக் காட்டியது. அந்த ஆக்க பூர்வமான ஆலோசனையை அனைத்து மகப்பேறு மருத்துவர்களும் ஏற்கலாமே...

திருவாரூர், ஆர். திலகவதி.

டாக்டர் நர்மதா அசோக்கின் கடிதத்தை முதல் பக்கத்தில் வெளியிட்ட கல்கிக்கு நன்றி! வாடகைத்தாய் மகப்பேறு, அப்பட்டமான வர்த்தகமே. இடைத்தரகர் (மருத்துவர்) தனது மருத்துவ அறிவியல் அறிவைச் சந்தைப்படுத்துவதற்கு வாடகைத் தாய் பலியிடப் படுகிறாள்! உயிரணுக்கள் பிறருடையதாக இருப்பினும் கருவைப் பத்து மாதங்கள் சுமந்து, அதற்கு இரத்தமும் சதையும் வழங்கிய 'வாடகைத் தாயே குழந்தைக்கு உண்மையான அம்மாவாவாள். ஏழ்மையை முன்னிலைப்படுத்தி, அத்தாயின் அக உணர்வுகளைப் புறந்தள்ளி, மனித நேயமற்று மருத்துவர்கள் இச் செயல்களைச் செய்ய முன் வரக்கூடாது. புனிதமான கருவறைக் கோயிலை பணத்தால் விலை பேசுவது மனித உரிமை மீறலாகும். ஆதரவற்ற குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்ப்பதுதான் நமது பண்பாட்டுக்குரிய உயரிய வழிமுறை!

பாளையங்கோட்டை, இரா. கண்ணன்.



இது கலிபோர்னியாவில் நடந்தது: வாடகைத் தாய் மூலம் உருவான 'ஜேஸீ' என்ற குழந்தையை 'ஸ்நெல்' என்னும் வாடகைத் தாய் சுமக்கும்போது அவளை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்திய தம்பதி, தங்கள் மணவாழ்வு தோல்வியைத் தழுவிய தன் காரணமாக மண விலக்குப் பெற்றனர். இரண்டு வயதுக் குழந்தையைத் தன்னுடையது அல்ல எனக் கூறி இருவரும் நிராகரிக்க, (அமெரிக்க சட்டப்படி விந்து, சினை முட்டை அளித்தவர்கள் பெற்றோர் அல்லர்) வாடகைத் தாயின் ஒப்பந்தம் காலாவதி ஆகிவிட்டபடியால் ஜேஸிக்குப் பெற்றோர் யார் என்பது சட்டப் பிரச்னையாகிவிட்டது. இறுதியில் She is 'nobody's child- என்ற தீர்ப்பில் முடிவுற்றது. கேட்கவே பரிதாபமாக இல்லையா!

சென்னை-78, ராதா ஸ்ரீதர்.

ஒரு பசு ஈன்றதுமே 'ம்ம்மா' என ஒரு சத்தம் போட்டு கன்றுக் குட்டியைத் தன் நாவால் சுத்தம் செய்யும்போது பாருங்கள்... அந்தப் பசுவின் முகத்தில் மகிழ்ச்சியைக் காணலாம். வாய் பேச முடியாத அந்தப் பசு ம்ம்மா... என குரல் கொடுப்பது தான் தாய் ஆகிவிட்டது என்பதை பறை சாற்றத்தான்! பசு இவ்வளவு பரவசம் அடையும்போது ஆறறிவு படைத்த மனித இனம் அடையும் தாய்மையின் ரணத்தைப் புரிந்து கொள்ள முடியாதா!

வாடகைத் தாய்க்குக் குழந்தை மீது **உரிமை** (உரிமம்) இல்லாமல் போகலாம் (கமலா செல்வராஜ் பேட்டி) **உணர்வு** (டாக்டர் நர்மதா அசோக்கின் கடிதம்) நிச்சயம் இருக்கும்.

கோவை – 6, பி. தங்கவேல்.

அழைப்பு மணியின் பிடிவாத அலறலில், நடராஜன் தூக்கம் கலைந்தார். கடிகாரம் ஆறு தொட நகர்ந்து கொண்டிருந்தது.

"சீக்கிரம் திறங்க சாப்" என்றது பாபுஜியின் அவஸ்தைக் குரல்.

கதவைத் திறந்ததும் பாபுஜி தன்னை வீட்டிற்குள் நுழைத்துக் கொண்டு அவரே அவசரமாய் கதவைச் சாத்தினார்.

"என்ன ஆச்சு பாபுஜி!"

பாபுஜி, இந்தியர்கள் வசிக்கும், பாங்காக்கின் பிரசித்தி பெற்ற "சுகும்வித்" பகுதியில் இருந்த அந்த சிறிய குடியிருப்பின் நிர்வாகி. கொஞ்சம் பதற்றமாயிருந்தார். பாபுஜி சாதாரணமாய் அதிகம் அலட்டிக் கொள்ளாத ஆசாமி. அவர் பதற்றமாய் இருந்தது ஏனோ சரியில்லை என்று நடராஜனுக்கு உணர்த்தியது.

"சாப்... போலீஸ் வந்திருக்கு."

"போலீஸா?"

"இமிக்ரேஷன் போலீஸ்."

"எங்கே."

"பக்கத்துத் தெருவிலே. ஒரு வீட்டைச் சோதனை பண்றாங்க சாப்."

"வந்துட்டாங்களா...?" பயம் அவருக்குள் உணர்ந்தது.

இது அவர் எதிர்பார்த்ததுதான். காவல் துறை தேடி வருவது, தாய்லாந்தில் எல்லா இந்தியர்களும் சகஜமாக வேலைக்கமர்த்தும் பர்மா அகதிகளைத் தேடி. நடராஜன் கலவரப்பட்டது அவர் வீட்டில் வேலை செய்யும் ஒரு பர்மா அகதிப் பெண்ணுக்காக.

"அந்தப் பொண்ணைப் பாத்தா உங்களையும் பிடிச்சிடுவாங்க சாப்."

"என்ன செய்யலாம் பாபுஜி?"

"இப்ப வெளிய போனா ஆபத்து... தெரு முனையிலே போலீஸ் நிக்குது."

மாலதி தூக்கம் கமந்து வந்து "யாருங்க காலங்காத்தால" என்றாள் கொட்டாவியில்.

"நான் உங்கிட்ட எத்தனை நாளா சொல்லிக்கிட்டிருக்கேன். நிலைமை சரியில்ல. பர்மா அகதிகளைத் தேடி ஊரு முழுக்க போலீஸ் சோதனை இருக்கு. அந்தப் பொண்ணை அனுப்பிடுன்னு... கேட்டியா... இப்ப பார் வீதியிலே சோதனை போடுறாங்களாம்."

மாலதி தூக்க முகம் விலகி, சமையற்கட்டுத் திசையில்... "சீதா..." என்று அலறினாள்.

சீதா ஓடி வந்தாள். 'மியா மி லெய்' என்கிற சீதாலட்சுமி பர்மாவிலிருந்து எல்லை கடந்து தாய்லாந்தின் பாதுகாப்பில் வாழ வந்தவள். சீரழிந்த பொருளாதாரத்தாலும், ராணுவ ஆட்சியின் பயத்திலும் நாட்டைத் துறந்து, தாய்லாந்தின் செழிப்பான பொருளாதாரம்



அளிக்கும் ஏராளமான சாத்யக் கூறுகள் சர்க்க, விதிமுறைக்கு மாறாய் ஊருக்குள் வந்து வேலை பார்க்கும் ஆயிரக்கணக் கானவர்களில் அவளும் ஒருத்தி.

வயது பதினெட்டு. கூரான நாசியும், அழகான பல் வரிசையும், வாளிப்பான தேக முமாய் வீட்டு வேலை செய்யும் பெண் என்கிற முத்திரைக்குச் சம்பந்தமே இல்லாமல் இருந்தாள்.

"சீதா சீக்கிரமா உன் துணி மணியெல்லாம் எடுத்துக்கிட்டு வெளியே போயிடு" என்றார் நடராஜன்.

அகதி

ஆனந்தி



"ஏன் அவளை வெளியே போகச் சொல்றீங்க? இங்கியே எங்கியாவது ஒளிஞ்சி கிட்டு இருக்கட்டும்."

"முடியாது.... அது ஆபத்து. இந்த கட்டடத்துலேயே அவ இருக்கக் கூடாது."

"திடீர்னு காலங் காத்தால வெளியே போன்னா அவ எங்க போவா? அவளுக்கு வீடா இருக்கு?

"எனக்கு அதைப் பத்தி கவலையில்லை. இப்ப வீட்டுக் குப் போலீஸ் வந்தா ஜெயி லுக்குப் போறது நானோ நீயோதான். ஞாபகம் வச்சுக்க."

"பணம் குடுத்து சரிக் கட்டிடலாங்க. கிருஷ்ணன் வீட்டுல அப்படிதான் 2000பாட் குடுத்து அனுப்பிட் டாங்க."

"இல்லே மேம்சாப், இத்தனை நாள் அப்படித்தான் பணம் குடுத்து சமாளிச் சோம். இப்போ நிலைமை சரியில்லை. ஒரு மாசமா எல்லைல பர்மா ராணுவத்துக்கும் இந்த விடுதலைப் போராளிங்களுக்கும் ஓயாத சண்டை. அதனால இங்க போலீஸ் கெடுபிடி அதிகமாயிடுச்சி."

"விவாதம் பண்ண நேரமில்லை மாலதி, என் வேலை போயிடும். டிபோர்ட் பண்ணிடுவாங்க... இத்தனை நாள் பர்மிட் இல்லாம ஒரு பொண்ணை வீட்டுல வச்சி ருந்ததே மடத்தனம்."

"அவ நம்ம ஊரு பொண்ணுங்க. வீட்டோட இருந்து ராத்திரி பகல் பாக்காம அத்தனை வேலையும் செய்றா. அர்ஜுனை தம்பி மாதிரி பாத்துக்கறா. உள்ளூர்காரங் களுக்கு மூணு மணி நேர வேலைக்குக் குடுக் கற சம்பளத்துக்கு இவ நாள் பூரா வேலை செய்யறா."

"அதுக்கெல்லாம் சேர்த்துத் தான் இப்ப ஒட்டுமொத்தமா அபராதம் கட்டப் போறோம். விபரீதம் தெரியாம பேசாத. இனிமே இதைப் பத்தி நீ பேச வேணாம். சீதா வெளியே போயிடு."

"எங்க போகச் சொல்றீங்க ஐயா?"

"பார்டர்ல இருக்கற அகதிகள் முகாமிலே போய் இரு."

"அங்கே இருக்க முடியாதுங்க. அந்த முகாமெல்லாம் எல்லைக்குப் பக்கத்துல இருக்குங்க.. திடீர்னு பர்மா ராணுவம்

ராவோட ராவா வந்து தீ வைக்கறாங்க, துப்பாக்கியால சுட்டுப் பொசுக்கறாங்க. போன வாரம் கூட நிறைய பேர் இறந்துட்டாங்க. மூணு கைக்குழந்தைங்க எரிஞ்சி செத்துப் போச்சாம். எப்பிடிங்க இருக்கறது?"

"இல்லம்மா என்னால உன்னை வீட்டுல வச்சிக்க முடியாது. போயிடு."

"ஒரு நாள் அவகாசம் குடுங்க. வர்மாஜி கிட்ட போன் போட்டுச் சொல்லி, அழைச்சுக்கிட்டுப் போயிடச் சொல்றேன்."

வர்மாஜி பர்மாவிலிருந்து அகதிப் பெண்களைத் தருவிக்கும் தரகன். யாருக்காவது பணியாள் வேண்டுமென்றால் இவர்களின் பிரத்யேகத் தகவல் தொடர்பில் தெரிந்து கொண்டு தேவைக்கேற்ப ஆள் அனுப்புவான். இந்த அபலைப் பெண்கள் சம்பாதிக்கும் பணத்தில் ஒரு பகுதியை அவனுக்குச் செலுத்த வேண்டும்.

"இப்ப என்ன பண்றது? பாபுஜி."

"இப்ப வெளியே போக முடியாது சாப். பேசாம மூட்டை முடிச்சோட அந்தக் கச்சடா ரூம் உள்ள கிடக்கச் சொல்லுங்க. அவங்க போனப்பறம் வெளியே வரட்டும்" என்று பாபுஜி தற்காலிக உத்தி சொன்னார்.

சீதா அந்த இரைச்சலான மோட்டார் ஓடும் அறையில், குப்பைக் கூளங்களுக்கிடையே கிடத்தப்பட்டாள். கதவை மூடிய பின் கும்மிருட்டு சூழ்ந்தது. இருட்டு... அவளுக்குக் கிலியூட்டும் இருட்டு... அவளை சதா விரட்டும் பழைய ஞாபகங்களை நினைவுறுத்தி வருத்தும் இருட்டு...

அந்த அபாயகரமான சூழலில் வேலைக்கு வருவதற்குச் சீதாவுக்குக் காரணம் இருந்தது. வறுமையும், குறிப்பாய் பர்மாவில் அவள் குடும்பத்துக்கு ராணுவத்தால் நேர்ந்த கொடுமையும் அவளைச் சொந்த நாட்டில் இருக்க விடாமல் விரட்டியடித்தது. சீதா பத்தாவது வரை படித்த பிறகு கல்லூரியில் சேர முடியவில்லை. ராணுவம் ஆட்சியை அபகரித்த பிறகு ஜனநாயக ஆட்சிக்கு ஆதரவாய் மாணவர்கள் திரண்டெழுந்ததால் ராணுவ அரசு கல்லூரிகளை ஒழுங்காக நடத்தவில்லை.

சீதாவின் குடும்பம் பெரியதுதான். அம்மாவுக்கு இருதய நோய் இருப்பதாய் மருத்துவர் சொல்லியிருக்கிறார். அடிக்கடி உடம்பு முடியாமல் படுத்து விடுவாள். சீதாவின் அப்பா கஜேந்திரன் பூர்வீகத் தமிழரானாலும் பிறந்து வளர்த்தது பர்மாவில். மிங்லா சே மார்க்கெட்டில் அவருக்குப் பலசரக்கு வியாபாரம். அவருக்கு இருந்த அரசியல் ஈடுபாட்டால் ராணுவ ஆட்சியை எதிர்த்துப் போரிடும் தேசிய ஜனநாயக முன்னணியில் நிறைய பங்கெடுப்பு இருந்தது. ஜனநாயக ஆட்சி கோரி போராடிய நூற்றுக்கணக்கான அப்பாவி மக்களை ராணுவம் சுட்டுத் தள்ளி இரத்த வெள்ளம் ஓடியதையும், அவர் நண்பர்கள் பலர் சிறையிலிருப்பதையும் அவர் சொல்லி சீதா கேட்டிருக்கிறாள். ராணுவ ஆட்சிக்கு எதிராக ஏதாவது கூட்டம், உண்ணாவிரதம் என்று, வீட்டில் இருக்காமல் எங்காவது கிளம்பிப் போவார்.

ஒருநாள் அவர்கள் நினைத்தது போல அந்தப் பயங்கரம் நடந்தது. ஒரு நிசப்தமான இரவில் நாலைந்து ராணுவ வீரர்கள் கதவை உடைத்து வீட்டில் நுழைந்து அவரை இரத்தம் வர அடித்தார்கள். ஒருவன் துப்பாக்கியைத் தூக்கி அவரைக் குறிபார்த்தபடி எப்போது வேண்டுமானாலும் சுடுவான் என்கிறமாதிரி நின்று கொண்டு... "பென்னை யாவ் ஷீலே?* பென்னையாவ் ஷீலே?" என்று கேட்டுக் கொண்டிருக்க, இருவர் "குவே மாதா?"** என்று விளித்தபடி அவரைத் தாக்கினார்கள். குறுக்கே போன அம்மா பூட்சு காலால் உதைபட்டதையும், தாக்கப் போன அண்ணனை இருவர் பிடித்துக் கொள்ள ஒருவன் அண்ணனின் அடிவயிற்றில் குத்தியதையும் பார்த்து பயத்தில் உறைந்து போனாள். அப்பாவின் காலைப் பிடித்துத் தரையோடு இழுத்து ஜீப்பில் தூக்கிப் போட்டதுதான் சீதா இறுதியாய் அவரைப் பார்த்தது.

அப்பாவைத் தொடர்ந்து ஒரு நாள் அவள் அண்ணனும் காணாமல் போனான். அவன் கொரில்லாப் படையில் சேர்ந்து விட்டதாக அக்கா சொன்னாள். விடுதலைப் படைக்கும், பர்மா ராணுவத்துக்கும் நிகழும்

''பெண் விடுதலையில் ஆர்வம் இருக்கற மாதிரி தலைவரை நடிக்கச் சொன்னது தப்பாப் போச்சு!''

''ஏன்?''

''ஜெயில்ல இருக்கற பெண் கைதிகளை எல்லாம் விடுதலை பண்ணச் சொல்லிப் போராடப் போறாராம்!''

— அம்பை தேவா

* நீங்கள் எத்தனை பேர்? ** நாய் மகனே

சண்டையைப் பற்றிச் செய்தி வரும் போதெல்லாம் அண்ணன் ஞாபகம் வரும். அவ்வப்போது ராணுவத்திலிருந்து யாராவது வந்து அண்ணனைப் பற்றி விசாரித்துவிட்டு, தகவல் கேட்டு மிரட்டி விட்டுப் போவார்கள்.

சீதாவின் அக்கா எல்லை தாண்டிப் போய் ரட்சபுரியில் ஒரு நூற்பாலையில் வேலை செய்கிறாள். ஒரு முறை அண்ணனை விசாரிக்க ராணுவத்திலிருந்து வந்தவனுக்குச் சரியாய்ப் பதில் சொல்லவில்லை என்று அக்காவை அடித்து மிரட்டியதில் அக்காவையும் சீதாவையும் வீட்டில் வைத்திருக்க பயந்து அவர்களை எல்லைதாண்டித் தாய்லாந்து போக ஏற்பாடு செய்தாள் அம்மா. ஓர் இரவு சக வயதுப் பெண்களுடன் அம்மாவையும், ஏழு வயது



தம்பியையும் அழுதபடி விட்டுவிட்டு வந்தது சீதாவுக்கு மறக்கவில்லை.

வந்த ஒரு மாதம் வர்மா ஏதோ ஒரு இடத்தில் ஒரு இருட்டான வீட்டில் அத்தனை பேரையும் கிடத்தி வைத்திருந்தான். வெளியே ·தலைகாட்டக் கூடாது என்று உத்தரவு. எல்லோருக்கும் இருட்டறை. மேலே இருக்கும் சின்ன ஜன்னல் வழியே அவள் பார்த்ததெல்லாம் உயரமான கட்டடங்கள். அம்மா ஞாபகம் வந்து அழுவாள். அப்படியே தூங்கிப் போய் விடுவாள். சில நாட்கள் கடந்த பின் வர்மா வந்து அவர்கள் எல்லாரையும் ஒவ்வோர் இடத்துக்குக் கூட்டிச் சென்றான். அப்படித் தான் மாலதி வீட்டிற்கு வந்து சேர்ந்தாள்.

சீதா அவர்கள் வீட்டின் அடைக்கலம் பெற்று ஒரு வருடம் ஆகும்போது, அந்த அரசியல் சிக்கல் நிகழ்ந்தது. ஜனநாயக ஆட்சியை அபகரித்த பர்மாவின் ராணுவத்திற்கு எதிரான விடுதலைப் போராட்டங்கள் தீவிரமடைந்து, ராணுவத்துக்கும் போராளிகளுக்கும் இடையே அடிக்கடி சண்டை வலுத்த பின்னணியில், அந்தப் போராட்டத்தின் பாதிப்பு தாய்லாந்து பர்மா எல்லைப் பிரதேசங்களில் எதிரொலிக்க ஆரம்பித்தது. விடுதலைப் படையினர் சிலர், தாக்கப்படும் தங்கள் வீரர்களுக்கு மருத்துவ வசதி கோரி தாய்லாந்தின் மருத்துவமனை ஒன்றை ஆக்ரமித்ததுடன் பிரச்னை விஸ்வரூபம் எடுத்தது. பத்திரிகைகளின் கொட்டை எழுத்து பிரகடனமாய், தொலைக்காட்சியின் நேரடி ஒளிபரப்பாய், விவகாரம் கொந்தளிக்க, எதிர்க்கட்சிகள் இந்தப் பிரச்னையை அரசியலாக்கியதில் தாய்லாந்து அரசு அத்தனை பர்மா நாட்டவரையும் சோதித்து வெளியேற்றும் நடவடிக்கை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்ட பின் லட்சக்கணக்கான அகதிகள் தாய்லாந்து புகலிடம் இழந்தார்கள்.

பாபுஜி பயந்தது போல அவர்கள் குடியிருப்புக்கு அன்று காவல் துறை வரவில்லை. மூன்று மணி நேர காத்திருத்தலுக்குப் பின் சீதா வெளியே வந்தாள்.

அலுவலகம் சென்ற முதல் காரியமாய் நடராஜன் தொலைபேசியில்...

''வர்மாஜி... அந்தப் பொண்ணை இன்னைக்கே அழைச்சிட்டுப்போயிடுங்க. என்னால் அந்தப் பொண்ணை ஒரு நாள் கூட தங்க வைக்க முடியாது'' என்றார் கண்டிப்பாக.

நடராஜன் வீட்டிற்கு வந்ததும் வாக்கு வாதம் தொடர்ந்தது. பாஸ்போர்ட் செய்து தரலாம், விசா ஏற்பாடு செய்யலாம் என்ற மாலதியின் அத்தனை வாதங்களையும் நிராகரித்தார்.

"உங்களுக்குக் கல்லு மனசுங்க... சின்ன வயசு, ஊர்ல கஷ்டம்னு நம்மை நம்பி வந்த பொண்ணைத் திடீர்னு துரத்தினா எங்க போகும்?"

"நாம இங்க வேலை செய்ய வந்த வெளிநாட்டவங்க... நமக்கு இதால ஏதாவது பிரச்னை வந்தா நம்மை யாரு காப்பாத்தறது?"

சீதா துணிகளைக் கட்டிய மூட்டை முடிச்சும், அழுது சிவந்த கண்களுமாய் இதற்கெல்லாம் தயாரானவள் போல பேசாமல் இருந்தாள். வர்மா ஒன்பது மணிக்கு வண்டியோடு வந்தான். இன்னும் இரண்டு பெண்கள் வண்டியில் இருந்தார்கள். மேசாட் வரை ஓட்டிச் சென்று ஒரு



புது மார்கழி

மாநகர் வந்து
மாதங்கள் பல ஓடி விட்டன
பொருட்களை ஏற்றி வந்து விட்டேன்
அப்போதே.
வராமல் அடம் பிடித்துக்
கொண்டிருக்கும்
இந்த மனசைத் தான்
எப்படி கொண்டு வருவதெனத்
தெரியவில்லை.

வாசல்களில் போடப்படும்
பெரிய கோலங்களைப் பார்த்து
பார்த்துதான்
மார்கழியை உணர முடிகிறதிங்கு

வரப்புகளில் மண்டிக் கிடக்கும்
அருகம்புல்லில்
துளிர்த்திருக்கும் பனித் துளிகளை
மிதித்து உடைத்து
முழங்காலுக்குக் கீழ் நனைந்த துணியின்
குளிர்ந்த ஒட்டலோடு
பூப்பறிக்கவோ... புல்லறுக்கவோ...
முள்கீறி இலந்தைப் பழம் பொறுக்கவோ
படிக்கவோ... எழுதவோ செல்லாத
என் முதல்
மாநகர் மார்கழி இது.


— இளம்பிறை

வாரம் கழிந்து எல்லையில் அவர்களைக் கடக்க வைக்க ஏற்பாடு செய்திருந்தான். அவன் போவதை உணர்ந்து கூச்சலிட்டு ரகளை செய்த மகன் அர்ஜுனை சீதாவிடமிருந்து பிரிக்க இரண்டு ஆள் தேவையாயிருந்தது. நடராஜன் ஆத்திரமிகுதியில் குழந்தையை அடித்து அறைக்குள் கொண்டு கிடத்தினார். சீதா போகும் முன் மாலதியைக் கட்டிக் கொண்டு "பயமாயிருக்கு அக்கா" என்று அழுதாள். வண்டியில் சீதா தரையில் காலைக் கட்டி உட்கார்ந்ததைப் பார்க்க முடியாமல் வீட்டிற்குள் வந்தாள் மாலதி.

அன்று இரவு சீதாவின் முகம் நினைவில் அலைமோத குற்ற உணர்வோடு தூங்கிப் போனார். மறுநாளே பாபுஜி ஏற்பாடு செய்த தாய் பணிப்பெண் வீட்டிற்கு வந்து வேலை தொடங்க, அர்ஜுன் அவளை ரொம்ப அடிக்கிறான் என்றும், சமைக்கவே தெரியவில்லை என்றும் மாலதி முறையிட்டதை நடராஜன் பொருட்படுத்தவில்லை.

சீதா அவர்கள் வீட்டை விட்டு விலகிய ஒரு வாரத்தில் அவர்களின் அவசரகதியான வாழ்கைச் சுழற்சியில் அந்தப் பெண்ணின் நினைவு மெல்ல மெல்ல கரைந்து போனது. நடராஜன் சுமை ஒன்று நீங்கிய நிம்மதியில் அலுவலகக் கவலைகளில் மறுபடி மூழ்கி வீட்டுக்குத் தூக்கி வரும் கோப்புகளோடு ஒன்றிப் போனார். செய்தித் தாள்கள் செய்தி வெளியிட்ட பரபரப்பும் கொஞ்சம் கொஞ்சமாக அடங்கத் தொடங்கியது. அரசை இந்த விவகாரத்தில் ஒன்றும் செய்ய முடியாது என்று உணர்ந்த எதிர்க்கட்சிகள் கூச்சலைக் குறைத்து நிதியமைச்சகத்தின் ஊழல் பற்றி பேசத் தொடங்கினார்கள். வார இறுதியில் நடக்கப்போகும் கால்பந்தாட்ட ஆர்வத்தில் மக்கள் மூழ்க, அகதிகள் மூட்டை முடிச்சோடு வெளியேறும் புகைப்படத்தோடு முதல் பக்கச் செய்தி வெளியிட்ட பாங்காக் போஸ்டில் பர்மா செய்திகள் மெல்ல மூன்றாம் பக்கத்துக்குச் சறுக்கின. மாலதி அவள் நினைவு வரும்போதெல்லாம், "போட்டும்; இனியாவது அம்மா, குடும்பத்தோடு அவ ஊரிலேயே இருக்கட்டும்" என்று தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொண்டாள்.

வார இறுதி பாங்காக் போஸ்டில், எல்லையைக் கடந்த சில பெண்களைப் பர்மா ராணுவத்தினர் கைப்பற்றி கற்பழித்ததாக வந்த சிறிய பெட்டிச் செய்தியை நிறைய பேர் படிக்கவில்லை. ○



"மீட்டிங்கில் நம்ம தலைவர் சரளமா பேசுவாரே, ஏன் கையில கத்தை பேப்பர் வைச்சிருக்காரு?"
"கூட்டணி கட்சிங்க பேரெல்லாம் மறந்து போய்டுதாம் அதான் லிஸ்ட்டு."
"எதிர்க்கட்சிக்காரர்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன். முற்பகல் செயின் பிற்பகல் வீச்சருவா!"
"அத்தனை எலக்ட்ரானிக் இஞ்சினியர்கள் அவங்க கட்சில சேரும்போதே சந்தேகப்பட்டேன்..."
"என்னாச்சு?"
"ஓட்டு மெஷின்ல எந்தப் பட்டனை அமுக்கினாலும் அவங்க வேட்பாளருக்கே ஓட்டு விழுற மாதிரி கோல்மால் அடிச்சிட்டாங்க."
மாதுரி
"நமது கட்சித் தொண்டர்களுக்கு ஒரு வேண்டுகோள்: நேற்று டி.வியில் காட்டிய எதிர்க்கட்சி ஊர்வலம் முழுதும் கிராஃபிக்ஸ் கலக்கல். அந்தக் கும்பலைக் கண்டு பதற வேண்டாம்."
"எங்கள் கூட்டணியின் கொள்கை என்னவென்று கேட்கிறார்கள் எதிர்க்கட்சியினர். நாங்கள் எப்போதாவது இது போன்ற கேவலமான கேள்வியை அவர்களிடம் கேட்டிருக்கிறோமா? அதிலிருந்தே அவர்கள் தரம் தெரியவில்லையா?"







• இரா. மோகன்

உற்றுழி உதவும் நூல்!

இருபத்தைந்து ரூபாய்க்கு ஒரு நல்ல தமிழ்ப் புத்தகம் வாங்க முடியுமா...?

முடியாது என்று பந்தயம் வைத்துத் தோற்று விடாதீர்கள். ஏனெனில் அந்த மகிழ்ச்சியை நமக்கு அளிக்க முன்வந்துள்ளது சாகித்திய அகாதெமி; அதற்கு **'உற்றுழி உதவி'**யிருக்கிறார் மதுரை பல்கலைக் கழகப் பேராசிரியர் இரா. மோகன்.

சாகித்திய அகாதெமியின் 'இந்திய இலக்கியச் சிற்பிகள்' நூல் வரிசையில் அமரர் கல்கி பற்றிய இந்த நூலை எழுத இரா. மோகன் 54 தமிழ் நூல்களையும் அரை டஜன் இலக்கிய மலர்களையும் சில உதிரிக் கட்டுரைகளையும் கரைத்துக் குடித்திருக்கிறார். இது, இந்தத் தகவல் நூலின் இறுதியை நாம் எட்டும்போதுதான் தெரிய வருகிறது; ஆனால் மோகனின் உழைப்பு முதல் பக்கத்திலேயே பதிவாகியிருக்கிறது.

சுந்தா எழுதிய பொன்னியின் புதல்வர் (அமரர் கல்கி வாழ்க்கை வரலாறு) புத்தகத்தை ஆதரமாகக் கொண்ட வாழ்க்கைச் சித்திரத்தில் தொடங்கி, அமரர் கல்கியின் பன்முக எழுத்துத் திறனை நடுநிலைமையுடன் எடை போட்டு நிறுத்துகிறது இந்நூல். அவரது சிறுகதைகள் குறித்த மாறுபட்ட மதிப்பீடுகளை மறைக்காமல் வரிசைப் படுத்துகிறது. நாவல்களில் பாத்திரப் படைப்பு, கதை புனையும் யுக்திகள், வரலாற்றையும் புனைபொருளையும் பின்னும் ஆற்றல் என்று பட்டியலிடுகிறது. கட்டுரைகளில் மிளிரும் நகைச்சுவையையும் காலத்தை வென்று நிற்கும் புத்துணர்ச்சியையும் படம் பிடிக்கிறது. கல்கி எழுதிய குணச்சித்திரங்களுக்கு க.நா.சு மொழியில் 'நடைச் சித்திரம்' என்று பெயர் சூட்டி, அவற்றை ஆராய்ந்து மகிழ்கிறது. கல்கி என்கிற எழுத்தாளரின் எழுத்து மட்டுமின்றி பொதுவாழ்வுப் பணிகளும் ஆளுமையும் தமிழக வரலாற்றில் பதிவுகளை விட்டுச் சென்றிருப்பதை வியக்கிறது.

இத்தனை வியப்பும், களிப்பும், ஆராய்ச்சியும், மதிப்பீடும் அடங்கிய இந்த நூல் 160 பக்கங்களுக்குள்ளே அடங்கிவிடுகிறது என்பதுதான் சிறப்பிலும் சிறப்பு. இந்த வரையறை சாகித்திய அகாதெமி விதித்ததாகவே இருக்கலாம்; ஆனால் அதற்குள் வெற்றிகரமாக இயங்கியிருக்கிறார் முனைவர் மோகன்.

மோகனின் தமிழ் முத்திரைகளும் இப்புத்தகத்தில் நீள நெடுக இடம் பெற்றுள்ளன: 'உற்றுழி உதவினார்', 'ஈன்று புறந்தந்தார்', 'தன்னகத்தே கொண்டிருக்கும்', 'சாலவும் பொருத்தமாக இருக்கும்', 'மனங் கொள்ளத் தக்கச் செய்திகள் ஆகும்', 'கடைக்கண் பார்வையைக் காட்டல் நன்று' போன்ற பாடப் புத்தகத் தமிழ்ப் பிரயோகங்கள் கலபத் தமிழுக்கிடையே முரண்டு பிடித்துக் கொண்டு நிற்கின்றன.

தமிழை இலகுவாக்க ஓயாமல் பாடுபட்டவரைப் பற்றிய புத்தகம் என்பதால் இந்த முரண்பாடு அதிகமாய் உறுத்துகிறது என்பது **மனங் கொள்ளத் தக்க விஷயமாகும்!**

எனினும் தமிழிலக்கிய மாணவர்களுக்கும் கல்கி அன்பர்களுக்கும் இந்நூல் **உற்றுழி உதவியாயிருக்கும்** என்பதை ஒப்புக் கொண்டேயாக வேண்டும்.

— அலமு



இனிப்பான செய்தி!

✉ 'கெடைச் சோறு' சிறுகதை படித்தேன். நெல்லைவாசியான எனக்கு வரிக்குவரி கிராமிய மணம் கமழும் இக்கதை மிகவும் ருசியாக உள்ளது. கோடிக்கணக்கான கிராம ஏழை மக்களின் அவல நிலையைச் சித்திரிக்கும் வாழ்க்கைச் சித்திரம்.
சென்னை – 78, தி.க.சிவசங்கரன்(தி.க.சி)

✉ "சர்க்கரை நோய்க்கு இனி தடுப்பூசியா? வெரிகுட்... இனிப்பான செய்திதான்!"
பொன்மலை, ஆர். பிரகாஷ்

✉ பிளஸ் டூ, பத்தாம் வகுப்பு தேர்வுகள் தொடங்கும் நேரத்தில் ஹயக்ரீவர் படத்தையும் ஸ்லோகத்தையும் தந்து 'வெற்றி நிச்சயம்' என்ற தன்னம்பிக்கையை மாணவ உள்ளங்களில் விதைத்து விட்டீர்கள்!
நெய்வேலி, எஸ். ஸ்ரீகாந்த்

✉ "ஒரு படம் நல்லாயிருக்கா என்பதற்குப் பத்து நிமிடம் செலவிட்டா போதும். அதுக்கு என்ன செய்யணும்னா, கல்கியில் வர்ற விமர்சனம் படிச்சா போதும்"– அல்ஹோ சூப்பரா விமர்சனம் பண்றீங்க!
விழுப்புரம், வை. சண்முகவேல்

✉ யஷ்வந்த் சின்ஹாவின் பட்ஜெட்டை மனம்விட்டு பாராட்டிய கல்கி, குறைபாடுகளையும் சுட்டிக்காட்டி தட்டிக் கொடுத்திருந்த விதம் பாராட்டுக்குரியது!
கும்பகோணம், எஸ்.கே. மூர்த்தி

✉ அரசியல் கட்டுரைகள், ஆன்மிகம், மூலிகை வைத்தியம், டி.வி. விமர்சனம், சினிமா செய்திகள் என எல்லாவற்றையும் சரியான விகிதத்தில் கலந்து இந்த வார கல்கி அசத்திவிட்டது!
திருச்செங்கோடு, டி.ஏ.சி. பிரகாஷ்

✉ மார்ச் 8க்கு என்ன அர்த்தம்? அற்புதமான பேட்டிக் கட்டுரை. பல பொய் முகங்களுக்கிடையே ஒரு நிஜ முகமாக திருமதி தேன்தமிழ் காந்திநாதனைக் காட்டியுள்ளீர்கள். பாராட்டுக்கள்.
சென்னை– 106, ஏ. அசோகன்,

✉ முகுந்தன் எழுதிய 'பிரசாதம்' சிறுகதை மிக அருமை. என்னைப் போன்ற ஆய்ந்து ஓய்ந்து போன முதியவர்களுக்கு உற்சாக டானிக் அக்கதை.
சென்னை – 86, எஸ்.ஜி. ராமன்.

✉ வாடிக்கையாளர்களைத் தெய்வமாக்கி விவேக்ஸ் செய்த ஆராதனை அற்புதம். மார்க்கெட்டிங் மற்றும் வாடிக்கையாளர் சேவையே விற்பனையின் தாரக மந்திரம் என்று உணர்த்தியது.
திருஇந்தளூர், டி. வெங்கடேசன்

✉ பட்ஜெட்டைப் பாராட்ட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் தலையங்கம் எழுதப்பட்டிருக்கிறது. அடிப்படையில் நம் நாடு ஒரு விவசாய நாடு என்பதை மறந்து போடப்பட்ட பட்ஜெட்டின் குறைகளைச் சரியாக அலசி ஆராய வில்லை.
மதுரை, என். பால கிருஷ்ணன்



வாழை மரம் இல்லாமல் கல்யாணம் நடக்கும். கட்-அவுட் இல்லாமல் தேர்தல் நடக்குமா? புகழ் பெற்ற சில கட்-அவுட் ஓவியர்களைச் சந்தித்து நிலவரம் கேட்டோம்.

கட்டாகும் கட்-அவுட்கள்!

• ஜே.பி. கிருஷ்ணா

ஜே.பி. கிருஷ்ணா (மாநிலத் தலைவர், தமிழ்நாடு ஓவியர்கள் சங்கம்)

"ஏப்ரல் மாதக் கடைசியிலோ, இல்லை மே முதல் வாரத்திலோ தேர்தல் என்று சொல்லிவிட்டார்கள். இடைப்பட்ட ஒரு மாதம்தான் பிரசாரத்திற்கான அவகாசம். இந்தச் சின்ன இடைவெளியில் எங்களுக்குக் கட்-அவுட் வேலை வரும் என்ற நம்பிக்கையில்லை. காரணம், கலைஞர், ஜெயலலிதா இருவருமே விளம்பர விஷயத்தில் எடுத்திருக்கும் கொள்கை முடிவுகள்தான்.

"கலைஞர் மருந்துக்குக் கூட கட்-அவுட் கூடாது என்று சொல்லி விட்டார். ஜெயலலிதா தனி அறிக்கையே விட்டிருக்கிறார். பதவியை எதிர்பார்த்து, கட்-அவுட் வைப்பவர்களுக்கும், போஸ்டர் ஒட்டுபவர்களுக்கும் கட்சி உறுப்பினர் தகுதிகூட இல்லாமல் செய்து விடுவேன் என்று சொல்லி விட்டார்.

"இதனால் பாதிக்கப்பட்டிருப்பது தமிழ்நாடு முழுவதும் உள்ள மூன்று லட்சம் ஓவியர்கள்தான். இவர்களுக்குப் பேனர், சுவர் விளம்பரத்தை விட்டால் வேறு எதுவுமே தெரியாது. கடந்த 1990 - ஆண்டு தேர்தலில் என்னைப் போன்ற பெரிய ஓவியர்களுக்கு லட்சக்கணக்கில் வேலை வந்தது. இப்போது அரசியல் கட்சி மாநாடு என்றால்கூட ஆயிரங்களில்தான் வேலை வாய்ப்பு. இதுவரை எந்த அரசியல் கட்சியிடமிருந்தும், ஒரு தொலைபேசி அழைப்புக்கூட வரவில்லை. இப்போதைக்கு என்னைப் போன்றவர்களுக்குச் சோறு போடுவது சினிமா பேனர், கட்-அவுட்கள்தான்.

"கட்-அவுட், பேனர்கள் தவிர அவற்றை மட்டுமே நம்பியிருக்கும் ஆர்ட்டிஸ்டுகளுக்குப் பெரிய தலைவலி, சம்பந்தப்பட்ட சுவர் அனுமதி பெற்றதாக இருக்க வேண்டும். எல்லா சுவர்களிலும், குறிப்பாக அரசு அலுவலக சுவர்களில் வெள்ளையடித்து, தேர்தல் விளம்பரங்களையோ, வேறு எந்த விளம்பரத்தையோ எழுத முடியாது. அனுமதி பெற்ற தனியார் சுவர்களில் எழுதினாலும், ஒரு சதுர அடிக்கு ரூபாய் நாற்பது வீதம் நகராட்சியோ, ஊராட்சியோ, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு வரி போடுகிறது. சதுர அடி பத்து ரூபாய் இருபது ரூபாய்க்கு எழுதுகிற ஓவியர்கள்தான் அதிகம். இவர்கள் வரிக்கும் சேர்த்து, சதுர அடி அறுபத்தைந்து ரூபாய் என்று கூலி நிர்ணயித்தால் வேலை தர யாரும் முன் வர மாட்டார்கள்.

"இது தவிர பொதுமக்களுக்கு இடையூறாகவோ, சாலையில் வாகனத்தில் செல்வோரின் கவனம் சிதறும்படியாகவோ, விளம்பரங்கள் இருந்தால் முதலில் ஓவியத்தை வரைந்தவர் மீது வழக்கு. இது போல் பல பிரச்னைகள். இதையெல்லாம் கருத்தில் கொண்டு தமிழ்நாடு ஓவியர்கள் சங்கத்தை இந்த ஆண்டு தொடங்கினோம். முதல்வரிடம் எங்கள் கோரிக்கைகளைக் கொடுத்தோம். எங்களது தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதை உணர்ந்த அவர், எங்களுக்காக நல வாரியம் அமைத்திருக்கிறார். இது எங்கள் தொழிலுக்கு அங்கீ









• நாகராஜன்

காரமாக இருக்குமே தவிர, தினசரி வாழ்க்கைக்கு விளம்பர வேலை வாய்ப்புகளே முக்கியம். அரசியல் கட்சிகள் எங்களைப் போன்ற லட்சக்கணக்கான ஓவியர்களை மனத்தில் வைத்து, தேர்தல் பிரசாரத்தில் பேனர் - கட் அவுட்களுக்குத் தேர்தல் கமிஷன், உள்ளாட்சி அமைப்புகள் முன்னுரிமை கொடுக்க வேண்டும்."

சந்திரன் ஆர்ட்ஸ் - நாகராஜன்:

"தேர்தல் வேலைகள் வரும் என்ற நம்பிக்கை சுத்தமாகப் போய்விட்டது. தேர்தலுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பிருந்தே எல்லா கட்சியிலிருந்தும் கட்-அவுட், பேனர் ஆர்டர் தருவார்கள்.

"இந்த முறை கூட்டணி சேருவதற்கும், தொகுதிப் பங்கீடு செய்து கொள்வதற்குமே அதிக தாமதமாகிவிட்டது. கட்சிகள் கட்-அவுட்டை நம்பிய காலம் போய் இப்போது டீவி விளம்பரத்தை நம்ப ஆரம்பித்து விட்டார்கள்.

"தி.மு.க. சன் டீவியில் இப்போதே மூன்று நிமிடம் விளம்பரம் செய்கிறது. ஜெயா டீவியிலோ எல்லா நிகழ்ச்சிகளும் தேர்தல் பிரசாரத்தை மையமாக வைத்தே செய்யப்படுகிறது. இன்னொரு பக்கம் சீரியல் பல்பு, கட்-அவுட்களுக்கும் அதிக மவுசு வந்துவிட்டது. இது கூட கட்-அவுட் ஒழிந்து வருவதற்கு முக்கிய காரணம்.

"ஒரு ஐந்து வருடத்திற்கு முன்பு வரை கட்-அவுட், பேனர்களைத் திராவிட கட்சிகள் பெரிய விளம்பர சாதனமாக பயன்படுத்தினார்கள். இப்போது அதுவும் இல்லை.

"நமது கட்-அவுட் கலாசாரம் அமெரிக்கர்களைக்கூட ஒரு கட்டத்தில் பாதித்தது. அங்கே ஜார்ஜ் புஷ் முதன் முதலில் பதவிக்கு வந்தபோது அவரது உருவத்தை நூறடி கட்-அவுட்டாகச் செய்து கேட்டார்கள். இங்கிருந்து கட்-அவுட்டை வரைந்து விமானத்தில் ஏற்றுமதி செய்தோம். அங்குள்ள அமெரிக்கன் எம்பசிக்குக் கூட அப்போது நூறடி கட்-அவுட் செய்து கொடுத்தோம். இப்போது பதவியேற்றிருக்கும் ஜூனியர் டபுள்யூ புஷ்ஷுக்கும் கட்-அவுட் ஆர்டர்கள் தருவார்கள்' என்று எதிர்பார்த்தோம். ஆனால், யாரும் கட்-அவுட் வைக்கக் கூடாது என்று ஜூனியர் புஷ் கட்டளை இட்டுவிட்டதாகச் சொல்கிறார்கள்.

"கட்-அவுட் ஆர்டர்கள் வராததற்கு இன்னொரு காரணமும் உண்டு. கட்-அவுட்கள் பொதுநலனுக்கு விரோதமானவை என்று உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது. அது முடிந்தால்தான் கட்-அவுட்களைத் தேர்தல் பிரசாரத்தில் பயன்படுத்தலாமா? கூடாதா? என்று தேர்தல் கமிஷன் சொல்லும் என்கிறார்கள். இந்த வழக்கில் தீர்ப்பு வருவதற்குள் தேர்தல் முடிந்தாலும் முடிந்துவிடும்."

— **சக்கரத்தாழ்வார்**

கலைஞர் ராஜதந்திரம் + வைகோ உழைப்பு = தி.மு.க. வெற்றி...?

● ப. இராம் முருகன், சிவகங்கை

? சுற்றுப்புறச் சூழலைப் பாதிக்கும் பிளாஸ்டிக் கொடிகளைப் பயன்படுத்தக் கூடாது என்கிற 'ஜெ' அறிக்கை பற்றி....?

! வரவேற்றுப் பாராட்டவேண்டிய மிக நல்ல முடிவு.



● எம். சம்பத், வேலாயுதம்பாளையம்

? எல்லோரும் எதிர்பார்த்தபடி அ.தி.மு.க வுடன் கூட்டணி என்பதை அறிவிக்க, மூப்பனார் வரலாறு காணாத தாமதம் செய்தது ஏன்..?

! அப்படி இழுபறி செய்ததால்தானே கூடுதல் சீட் கிடைத்தது...அதான்!

● க. நாகராஜன், பரமக்குடி

? எதிர்க்கட்சியினராக இருந்தும்கூட பட்ஜெட்டில் உள்ள நல்ல அம்சங்களை வரவேற்றிருக்கும் ப. சிதம்பரம் பற்றி தங்கள் கருத்து யாது..?

! பட்ஜெட்டில் சில குறைகள் இருந்தாலும் அவற்றை நல்ல அம்சங்கள் பின்னுக்குத் தள்ளுவதை எடுத்துரைத்தது போலவே, 'அ.தி.மு.கவுடன் கூட்டணி வைப்பதில் தவறில்லை என்றாலும் அந்தக் கூட்டணி கௌரவமான முறையில், தமிழக நலனுக்கு உகந்த முறையில் அமையவில்லை' என்றும் கூறியிருக்கிறார். A sane voice in the political wilderness!

● என். பாலகிருஷ்ணன், மதுரை – 1

? காஞ்சிபுரம் கோயிலில் சினிமா படப்பிடிப்புக் குழுவினர் செய்த அட்டகாசம் பற்றி..?

!அதைவிடப் பெரிய அட்டகாசம், சினிமா படப்பிடிப்புக்கு அனுமதி வழங்கிய கோயில் நிர்வாகத்தினுடையது அல்லவா! கொள்ளிக்கட்டையால் தலை சொறிந்து கொண்டால் தீங்கு நேராமலா இருக்கும்...?

● எம். குணசேகரன், வேலாயுதம்பாளையம்

? குமரி அனந்தன் தொடங்கியிருக்கும் தொண்டர் காங்கிரஸ் கட்சி தேறுமா...?

! அது குமரி அனந்தனுக்கே தெரியாத விஷயம், என்னைக் கேட்டால்...?

● ஜி. ஜெயராமன், கூத்தனூர்.

? 'என்னை நம்பிக் கெட்டவர்கள் யாரும் இல்லை' என்று ஜெ. சொல்லியிருக்கிறாரே...?

! இதற்கு நான் பதில் சொல்வானேன்? சிறப்பு நீதிமன்றத்தில் குற்றவாளி கூண்டும் போலீஸ் வண்டிகளும் வேலூர் சிறையும் ஜாமீன் தொகைகளும் பதில் சொல்லும்.

● ஜி.ஜி.குமார், சென்னை – 29. ❐

? அ.தி.மு.கவுடனான கூட்டணி பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று

• தடைக்குப் பாராட்டு!

நீங்கள் கேட்டவை — தராசு


• அறியாமை பலம்!


• தொண்டு தேறுமா!


• அறிவுக்குரல்!

இளங்கோவன் கூறுவதற்கு ஒரு நாள் முன்பே காங்கிரசுக்கும் சேர்த்து மூப்பனார் ஜெயலலிதாவிடம் கையெழுத்துப் போட்டிருப்பது குறித்து...?

! மூப்பனார் முடிவை ஏற்பதாக சோனியா கூறிய பிறகு, சோனியா தீர்மானம் எதையும் ஏற்பதாக இளங்கோவனும் சொன்ன பிறகு இவருக்குக் கூட்டணி விவரங்கள் பற்றித் தெரிந்தால் என்ன, தெரியாவிட்டால் என்ன?

● இந்திரா ஜி. பெங்களூர் – 11 ●

? நடுநிலையாக இருக்க வேண்டிய பத்திரிகைகள் இன்ன கட்சிதான் ஆட்சிக்கு வரலாம் என்று கருத்து கூறுவது பற்றி...?

! பத்திரிகைகளுக்குக் கட்சி சார்பு, தனி நபர் சார்பு கூடாதுதான். ஆனால் ஒரு குறிப்பிட்ட அரசியல் சூழலில் நாட்டு நலன் கருதி முடிவெடுக்க மக்களுக்கு வழிகாட்டும் பொறுப்பும் பத்திரிகைக்கு உண்டு. அதனால் தேர்தல் சமயத்தில், நல்லாட்சி தரக்கூடிய கட்சியை இனங்காட்டுவதும் கடமையாகிறது.

● உமரி.பொ.கணேசன், மும்பை – 37

? அன்று நரசிம்மராவ் படங்களை சத்தியமூர்த்திபவன் முன்பு கொளுத்தினார்கள்; இன்று சிதம்பரம் படங்களைக் கொளுத்துகிறார்களே...? எது நியாயம்?

! இரண்டும் அநியாயம்; அநாகரிகம்!

● கோ. வீரராகவன், அறந்தாங்கி.

? கலைஞரின் ராஜதந்திரமும் வைகோவின் உழைப்பும் தி.மு.க. கூட்டணிக்கு வெற்றியைத் தேடித் தருமா..?

! தமது கட்சி போட்டியிடாத தொகுதிகளிலும் தி.மு.கவுக்கு உழைப்பது என்று வைகோ முடிவெடுத்தால் வெற்றி சாத்தியம். கூடவே பி.ஜே.பியும் அதன் ஆதரவு அமைப்புகளும் அதே அணுகுமுறையை மேற்கொண்டாக வேண்டும்.

● மு. இராமசாமி, வயலூர்.

? இந்திய வரலாற்று காங்கிரஸ் அமைப்பின் புதிய தலைவராக தினமணி முந்நாள் ஆசிரியரும் தொல் எழுத்து ஆய்வு நிபுணருமான ஐராவதம் மகாதேவன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது பற்றி.

! உருப்படியான காரியம். வரலாறுகள் வரலாற்று நாவல்களாகிவிடாமல் அவர் காப்பாற்றட்டும்!

● எஸ். அப்துல்லா அஹ்மது, நாகூர்.

? அரசியல் தலைவராவதற்கு ஒரு தகுதி வேண்டும்; படிப்பு வேண்டும் என்ற நிலை வந்தால்...?

!பயனில்லை. நேர்மை, நாட்டு நலன் கருதும் போக்கு இன்றி வேறு தகுதிகள் இருந்தும் பயனில்லை. திறமையைச் சம்பளம் தந்து வேலைக்கு அமர்த்திக் கொள்ளலாம். நேர்மையை அப்படிப் பெற முடியாது என்று அடிக்கடி எடுத்துச் சொல்லுவார் ராஜாஜி.

● எஸ். கந்தவேல், சென்னை – 17

? இன்றைய அரசியல் சூழ்நிலையில் 'அரசியல் சாணக்கியன்' என்று யாரைக் குறிப்பிடுவீர்கள்..?

! சாணக்கியன் என்ற ராஜதந்திரியின் கௌரவத்தைப் பாழடிக்க நான் விரும்பவில்லை.

● கே. சண்முகம், ஆதமங்கலம்புதூர்.

? என்னதான் கரடியாய்க் கத்தினாலும் காகமாய்க் கரைந்தாலும் 'ஜெ' மீண்டும் ஆட்சிக்கு வருவதைத் தடுக்க எந்தக் கொம்பனாலும் முடியாது போலிருக்கிறதே...?

! மனம் வைத்தால் திரு. வாக்காளர் என்ற கொம்பனால் நிச்சயம் அதைச் சாதிக்க முடியுமே!

☐ ரூ. 50 பரிசு பெறுபவர்:
ஜி.ஜி.குமார்,
312, பி.எச். ரோடு,
சென்னை – 600 029

* ரூ. 25 பரிசு பெறுபவர்:
ஜி. இந்திரா,
660, முதல் மாடி, IV பிளாக்,
11வது மெயின் ஜெயநகர்,
பெங்களூர் – 560 011



பிள்ளையாருக்கு நன்றி!

இந்திய பௌலர்களை ஆஸ்திரேலியர்கள் துவம்சம் செய்த சமயத்தில் 'கவலைப்படாதே சகோதரா' என்று களத்தில் இறங்கி ஹாட்டிரிக் உட்பட ஏழு விக்கெட்டுகளை வீழ்த்திய ஹீரோ ஹர்பஜன்சிங்கிடம் ஒரு மினி பேட்டி...

ஹாட்டிரிக் எடுத்தபொழுது உங்கள் மனநிலை எப்படி இருந்தது?

மூன்றாவது விக்கெட் விழுந்துவிட்டது என்பதை உணர்வதற்குள் கங்குலி ஓடி வந்து என்னை அலாக்காகத் தூக்கி முத்தமே கொடுத்து விட்டார். அடுத்தடுத்து எல்லோரும் வந்து என்னைக் கட்டிப்பிடித்துக் கொள்ள, எனக்கு அழுகையே வந்துவிட்டது! வானமே என் வசமானது போலத் தோன்றியது!

ஹாட்-டிரிக் போட வேண்டும் என்று ஸ்ட்ராடிஜி ஏதாவது...

'தேநீர் இடைவேளையின்பொழுது ஆஸ்திரேலியா 200 ரன்களுக்கு ஒரே ஒரு விக்கெட் இழந்து வலுவான நிலையில் இருந்தார்கள். கங்குலி என்னிடம் வந்து 'அட்டாக் பண்ணிப் போடு. அவர்கள் ரன்கள் எடுத்தாலும் எடுக்கட்டும்' என்று சொன்னார். அதேபடி போட்டேன்.

சதத்தை நெருங்கிக் கொண்டிருந்த ஹேடன், சதம் அடித்து விட வேண்டும் என்ற துடிப்பில் என் பந்தைத் தூக்கி அடித்து ஹேமங் பதானிக்குக் காட்ச் கொடுத்தார். அதற்குப் பிறகு, 16ஆவது ஓவரில் ரிக்கிபாண்டிங்கும், கில்கிரிஸ்டும் அடுத்தடுத்த பந்துகளில் அவுட். டில்லியில் இரண்டு இன்னிங்ஸிலும் சதம் அடித்தவர் பாண்டிங். மும்பையில் இந்தியாவின் வெற்றியைத் தடுத்தவர் கில்கிரிஸ்ட். இரண்டும் முக்கியமான விக்கெட்டுக்கள். எனக்கு ஒரே குஷி. அப்போது கங்குலியும் சச்சினும் என்னிடம் வந்து, "மட்டைக்கு எதிராக அடித்துப் போடு. பயத்திலேயே ஷேன் வார்ன் அவுட்டாகி விடுவார் பார்!" என்றார்கள். அவர்கள் சொன்ன மாதிரி போட்டேன். வார்னின்யின் மட்டையிலிருந்து கிளம்பிய பந்தை டைவ் அடித்து அபாரமாகப் பிடித்தார் ரமேஷ்.

ஹாட்டிரிக் எடுத்தவுடன் நீங்கள் விசுவாசத்தோடு நினைத்துக் கொண்டது யாரை?

பிஷன்சிங் பேடியைத்தான். மும்பை ஆட்டத்திற்குப் பிறகு டில்லியில் பிஷன்ஜியைச் சந்தித்து ஆலோசனை கேட்டேன். நிறைய டிப்ஸ் கொடுத்தார். பேட்ஸ்மேன் அடித்து ஆடினால் தைரியத்தை இழந்துவிடாமல் நம்பிக்கையுடன் பௌல் பண்ண வேண்டும் என்று வலியுறுத்திச் சொன்னார். அவர் சொன்னதை நினைவு வைத்துக்கொண்டே பௌல் செய்தேன், கைமேல் பலன் கிட்டியது!

கும்ப்ளேவுக்கு அடுத்த நல்ல பௌலர் நீங்கள்தான் போலிருக்கிறதே...

சாரி. ரியலி சாரி. கும்ப்ளே இமயமலை, நான் மடு. இருவரையும் ஒப்பிடாதீர்கள். ஆனால் எனக்கு நிறைய கான்ஃபிடன்ஸ் வந்திருப்பது உண்மை. அணியில் இருப்போமா மாட்டோமா என்ற பயம் எல்லாம் போய்விட்டது. தொடர்ச்சியாக இருக்கப் போகிறோம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. கேப்டனின் துணையோடு நன்றாக பௌல் பண்ணுவேன் என்று தெம்பு வந்திருக்கிறது.

இந்தியா ஜெயித்துக் கொண்டிருக்க வேண்டும். அதற்கு என் பௌலிங் துணை புரிய வேண்டும். அதுதான் என் லட்சியம்! அதற்குக் கணேஷின் அருள் வேண்டும். கணேஷ் யார் என்று யோசிக்கிறீர்களா? பிள்ளையாரேதான்! கணேஷை எனக்கு அறிமுகம் செய்தவர் நம்ப ரமேஷ்.

— உமாமணி

“ராஜீவை விட ரஜினிக்குச் செல்வாக்கா?”

தேர்தல் நெருங்கியுள்ள நேரத்தில் காங்கிரசை உதறிவிட்டு, திடீரென தொண்டர் காங்கிரசை ஆரம்பித்திருக்கிறார் குமரி அனந்தன்.

காங்கிரஸ் மீது என்ன வருத்தம்?

திருத்த முடியாததால் உண்டான வருத்தம்தான். எந்தெந்த சூழ்நிலைகளுக்கு ஏற்ப எப்படி முடிவு எடுப்பது என்று தெரியாமல், ஆலோசனை சொன்னாலும் ஏற்றுக் கொள்ளாமல் தமிழகத்தில் காங்கிரஸைக் கரைத்துக் கொண்டிருக்கிறார்கள். 1989ல் தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தலில் நான்குமுனை போட்டி இருந்தது. ஜெயலலிதாவோடு கூட்டணி வைத்து காங்கிரஸ் போட்டியிட்டால் வெற்றி நிச்சயம் என்று சொன்னேன்; கேட்கவில்லை. தி.மு.க வெற்றி பெற்றது. 1996ல் பதினான்கு கட்சிகள் தவிர ரஜினியின் ஆதரவைப் பெற்று காங்கிரஸ் தனி அணியாகப் போட்டியிட வேண்டுமென்று சொன்னேன். அ.தி.மு.கவுடன் சேர்ந்து எதிர்ப்பு அலையில் அடித்துச் செல்லப்பட்டோம். 1989ல் ராஜீவ், தமிழகத்தில் 13 முறை சுற்றுப்பயணம் செய்தும் காங்கிரஸால் வெற்றி பெற முடியவில்லை. அப்படியிருக்க ராஜீவை விட ரஜினி செல்வாக்கு மிக்கவரா? என்று 1996ல் கேட்டார்கள்.

இப்போது தொண்டர் காங்கிரஸ் துவங்குவதற்கு இதுதான் காரணமா?

“சமீபத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி என் உள்ளத்தை ரணமாக்கிவிட்டது. காந்தியின் நோக்கம் மதநல்லிணக்கத்தை வளர்ப்பது. காந்தியப் பேரவை என்ற பெயரில் ஒரு கட்சி சார்பற்ற அமைப்பை நடத்தி வருகிறேன். இந்த அமைப்பின் சார்பாக, சென்னையிலிருந்து, தர்மபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டிக்கு நடைப்பயணம் சென்றோம். அங்கே மதநல்லிணக்கத்தை வளர்க்கும் விதமாக பாரதமாதா கோயிலுக்கு அடிக்கல் நாட்டினேன். இந்த பாரத மாதா கோயில் அறுபது ஆண்டுகளுக்கு முன் சுதந்தர போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவா கண்ட கனவு. நடைப்பயணம் சென்னையில் துவங்கியபோதும் பின்னர் பாப்பாரப்பட்டியிலும் இந்து முன்னணி மற்றும் முஸ்லீம் தலைவர்கள் எல்லாம்கூட வந்திருந்தார்கள்.

வழியெங்கும் எல்லா கட்சிக்காரர்களும் வரவேற்றார்கள்-காங்கிரஸ்காரர்களைத் தவிர!





தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் 'நடைப்பயணம் கட்சி ஏற்பாடு அல்ல; காங்கிரஸார் கலந்து கொள்ள வேண்டாம்' என்று கடிதம் போட்டார். கட்சி சார்பற்ற முறையில் நான் நடத்தினாலும் மத நல்லிணக்கம் காந்தியின் நோக்கமல்லவா; காங்கிரஸின் நோக்கமல்லவா' இது ஒரு பக்கம் இருக்க, சமீபத்தில் சோனியா காந்தி மயிலாடுதுறையில் விவசாயிகள் பேரணியில் பேசினார். என்னை மொழி பெயர்க்கச் சொன்னார்கள். நானும் மேடைக்கு அருகில் இரண்டு மணி நேரமாகக் காத்துக் கொண்டிருந்தேன். கடைசியில் வேறு ஒருவரை விட்டு மொழி பெயர்க்கச் சொல்லி விட்டார்கள்... என்னவென்று விசாரித்தால், "நீங்கள் நடத்திய ஒரு நிகழ்ச்சிக்கு இந்து முன்னணித் தலைவர்களை அழைத்தீர்களே... அது ஏன்?" என்று என்னிடம் கோபத்துடன் கேள்வி கேட்கிறார் குலாம் நபி ஆசாத்.

பாரத மாதா கோயில் சம்பந்தமாக, எல்லா கட்சித் தலைவர்கள், மத அமைப்புகளுக்கு நான் கடிதம் மட்டும்தான் போட்டிருந்தேன். நல்ல நோக்கமாக இருந்ததால் எல்லோரும் வந்திருந்தார்கள்... ஆனால் நெறியை வளர்க்க வேண்டிய காங்கிரஸ் தலைவர்கள் வெறியை வளர்க்கும் விதமாகச் செயல்படுவது கண்டு கொந்தளித்துப் போனேன். எனவே என்னைப் போன்ற தொண்டர்களின் காயத்துக்கு மருந்தாகத் துவங்கியதுதான் 'தொண்டர் காங்கிரஸ்.' 'கொடியெடுக்கும் தொண்டனே முடிவெடுப்பான்' என்பது நான் உருவாக்கிய கோஷம்.



"மாப்ளே! என் பொண்ணைக் காலம் பூரா கண் கலங்காம பார்த் துக்குவீங்களா?"
"கவலைப்படாதீங்க மாமா! வீட்ல டி.வி. இல்லை. டி.வி. சீரியல் பார்க்க வழியேஇல்லை.
– சென்னிமலை
சி.பி. செந்தில்குமார்

கலைஞருடன் கூட்டு... திருப்திதானா?

"கலைஞரது நல்லெண்ணமும், செயல்களும் என்னை அவருக்கு நெருக்கமாகக் கொண்டு சென்றுவிட்டன. நான் எதற்கெல்லாம் போராடுகிறேனோ அதையெல்லாம் அவர் நிறைவேற்றி வருகிறார். "ஒவ்வொரு முறையும் குமரி அனந்தன் வேண்டிக் கொண்டதன் அடிப்படையில் செய்கிறேன்" என்று சொல்கிறாரே அதுதான்.. அந்தப் பெருந்தன்மைதான் நெருக்கத்தை உண்டாக்கிவிட்டது.

— ப்ரியன் ஸ்ரீநிவாசன்
படம்: ராஜன்

வாஸ்துவே வா! வா!!

குமரி அனந்தன் ஹோமம் வளர்த்து, பூஜை செய்து, புதுக்கட்சியைத் துவக்கினார். தமது அலுவலகத்தில் மூடப்பட்டிருந்த ஒரு பக்க வாசலை வாஸ்துவுக்கு ஏற்ப திறந்து விட்டார். "1996ல் தலைவர்தான் சத்தியமூர்த்தி பவன் வாசலை வாஸ்துவிற்கு ஏற்றபடி மாற்றி அமைத்தார். ஆனால் அதன் பலனை த.மா.காவினர் அறுவடை செய்து கொண்டு போய்விட்டார்கள்" என்கிறார் அனந்தன் உதவியாளர் ஒருவர். அனந்தன் தொண்டர்கள் காங்கிரஸை துவக்கினாலும், அவரது சகோதரர் வஸந்த், காங்கிரஸிலேயே தொடர்ந்து இருக்கிறார். அவரது குறி தாம்பரம் சட்டமன்றத் தொகுதியாம்.

– கௌசி



• தசரதன் - பிரபாகரன்

மாறி மாறி 'டைவ்' அடிக்கும் அரசியல் கூட்டணிகளுக்கிடையே இதோ சில மாறாத கூட்டணிகள்:

மாறாத கூட்டணி!



லதா - அனு *(இம்மார்டல் பியூட்டி பார்லர் நிர்வாகிகள்)* :

நாங்க ரெண்டு பேரும் குழந்தையா இருக்கும்போதே ஃப்ரண்ட்ஸ். பக்கத்துப் பக்கத்து வீடுங்கறதால ஒண்ணாவே விளையாடினோம். படிச்சோம். சுத்தினோம். அதனால ஆரம்பத்துலயே ஸ்ட்ராங்கான கூட்டணி எங்களுடையது. கல்யாணத்துக்கப்புறம் சின்ன பிரிவு வந்தது. ஒரு வருஷம் கழிச்சு மீண்டும் தொடர்ந்து கூட்டணி. கூட்டணி மாறாம இருக்க என்ன பண்ணலாம்னு பார்த்தோம். பெண்களுக்குப் பயன்படற மாதிரி ஒரு பிசினஸ் பண்ண யோசிச்சோம். 'இம்மார்டல்' பிறந்தது. சின்ன சின்னப் பிரச்னைகள் அப்பப்ப வரும். இருந்தாலும் பெவிகால் ஸ்ட்ராங் எங்களோட கூட்டணி.

ஜேடி - ஜெர்ரி *(இயக்குனர்கள்)* :

என் பெயர் ஜோசப் டிசாமி (ஜேடி), நண்பர் பெயர் ஜெரால்டு ஆரோக்கியம். (ஜெர்ரி). இரண்டு பேரும் திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில ஒண்ணா படிச்சோம். அப்பதான் நட்பு உருவாச்சு. அப்புறம் லயோலாவில எம்.எஸ்.சி. சேர்ந்தே படிச்சோம். ஹாஸ்டல்ல இருந்தோம். இரண்டு பேரோட ரசனையும் ஒண்ணாகவே இருக்க, கூட்டணி ஸ்ட்ராங் ஆச்சு.

பிறகு நான் (ஜேடி) டைரக்டர் பாலு மகேந்திராட்ட சேர்ந்தேன். ஜெர்ரி பெங்களூர்ல டாகுமெண்டரி படம் எடுப்பதில் பிஸி. 1990ம் வருஷம் தூர்தர்ஷனுக்காக அறிவியல் சம்பந்தமா ஒரு படம் எடுக்க வாய்ப்பு வந்தது. இரண்டு பேரும் மீண்டும் இணைந்தோம். இது வரை முப்பது டி.வி. தொடர்கள் இயக்கி இருக்கிறோம். எங்க கூட்டணி இது வரை மாறலை. மாறாது.

தசரதன் - பிரபாகரன் *(பிஸினஸ்)*

சின்ன வயசிலயே ஒண்ணாதான் படிச்சோம். அப்பவே கூட்டணி உறுதியாயிடுச்சி. படிப்பை முடிச்சிட்டு ஒரு பினாயில் கம்பெனியில இருவரும் வேலை பார்த்தோம். சேர்ந்து பிஸினஸ் பண்ணலாமேங்கற ஐடியாவுல தொழிலைக் கத்துட்டு கழன்றுகிட்டோம். ஆளுக்கு நூறு ரூபாய் போட்டு பினாயில் போன்ற சில பொருட்களைத் தயாரித்து விற்



• ஜேடி - ஜெர்ரி

றோம். இப்ப, சாதாரண தரை, மொசைக் தரை, மார்பிள், கிரானைட் தொழிற்சாலைகளில் கிரீஸ் படிந்த தரை என்று இவற்றிற்குத் தகுந்த பினாயில்களைத் தயாரிச்சு விற்று வளர்ந்திருக் கிறோம். கூட்டணியில சலசலப்பு இல்லைனா எப்படி? வரும். வெளியே போய் அறிக்கை விடற மாதிரி இல்லாம நாங்களே பேசி முடிச் சுக்குவோம். எங்க கூட்டணி நிலையானது. நிரந்தரமானது. வலுவானது.

வந்தனா - வைஷ்ணவி *(பான்யன்)* : ராகிங்லதான் எங்க கூட்டணி உருவாச்சு. முதல்ல மோதல் அப்புறம் காதல்ங்கற மாதிரி! வைஷ்ணவி ஒரு வருஷ ஜுனியர். இரண்டு பேருக்குமே ஒரே மாதிரியான டேஸ்ட். சமுதாயத்துல பாதிக்கப்பட்டவங்களுக்காக ஏதாவது செய்யலாம்னு தீர்மானிச்சோம். 'பான்யன்' பிறந்துச்சு. சேத்துபட்டு வண்ணான்துறையில் கண்டெடுக்கப்பட்ட மனநோயாளி செல்லம்மாவுடன் எளிமையாய்த் துவங்கிய எங்கள் அமைப்பில் இன்று நானூறு பாதிக்கப் பட்டப் பெண்கள்!

இரண்டு பேரும் தினமும் ஏதாவது ஒரு விஷயத்துக்காக முறைச்சுக்குவோம். அடுத் தவங்க கருத்துக்கு மதிப்புக் கொடுக்கணுங்கறது எங்க பாலிசி. அதனால அந்த 'முறைப்பு' விஷயம் கூட்டணி முறியற அளவுக்கு வந்ததில்லை.

வெங்கட், அனந்து, கோட்டவரம் சீனு, ரவிசங்கர், சிவா *(ரயில் ப்ரியா)* : தென்னக ரெயில்வேயில 1993ம் வருஷம் 'சித்பவனா தினம்'னு கொண்டாடினாங்க. தேசிய ஒருமைப்பாடு, தீவிர வாத எதிர்ப்பு போன்ற கருத்தைச் சொல்ற விதமாய் ஒரு நாடகம் போடலாம்னு நிர்வாகத்தினர் சொன்னப்போ 'சிந்தனை செய் மனமே'ன்னு நான் (வெங்கட்) ஒரு நாடகம் போட்டேன். எனக்கு ஏக பாராட்டு. என்னோட இணைந்து கூட்டணி போட்டவங்களுக்குச் செமப் பாராட்டு. அப்பதான் ரயில் ப்ரியா பிறந்தது. மும்பை, டெல்லி உட்பட பல மாநகரங்களில் ஐந்நூறு தடவைக்கு மேல் நாடகம் போட்டிருக் கிறோம். சில நேரங்கள்ல கூட்டணியில டென்ஷன் வரும். பேச்சுவார்த்தை நடக்கும். ஒவ்வொரு கட்சியும் இழுத்துக்கிற மாதிரி ஒவ்வொருத்தரும் இழுத்துப்பாங்க. இருந்தாலும் எங்க கூட்டணி உடையவில்லை; உடையாது!



• வந்தனா - வைஷ்ணவி



• லதா - அனு

அப்பு - மௌலி

படம் : ஜரிஸ்

ஜான்பாண்டியன், நிறுவனர்—தலைவர்: தமிழக முன்னேற்றக் கழகம்

“தமிழகம் முழுவதும் அதிருப்தி அலை!”

பிரசார மேடை

அ.தி.மு.க.வுடன் நாங்கள் கூட்டு சேர்ந்ததற்குப் பல காரணங்கள் உண்டு. முதல் காரணம், எங்கள் சமூகத்தைக் கிருஷ்ணசாமியைக் கொண்டு பிரித்தவர் கலைஞர். அடுத்து பா.ஜ.கவை கலைஞர் அரவணைத்துக் கொண்டிருக்கிறார். மூன்றாவதாக கலைஞர் ஆட்சியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நடந்த கொடுமைகளை மறந்துவிடவில்லை. கடந்த ஐந்து வருட காலத்தில் சிமெண்ட் சாலைகள் உட்பட பல வளர்ச்சிப் பணிகள் தாழ்த்தப்பட்டோர் வாழும் பகுதிகளில் செய்யப்படவே இல்லை.

தென் மாவட்டங்களில் நாங்களும் முக்குலத்தோரும் நல்லிணக்கத்துடன் வாழ்கிறோம். ஆனால் கிருஷ்ணசாமி மூலம் இரு சமூகத்துக்கும் இடையே துவேஷத்தை உருவாக்கப் பார்க்கிறார் கலைஞர்.

சிறிதுகாலம் முன்பு வரை அ.தி.மு.க. கூட்டணிக்காக முயன்று கொண்டிருந்தவர்தான் கிருஷ்ணசாமி. புதிய தமிழகம் கட்சியை வன்முறை அமைப்பு என்று கூறி கூட்டணிக்கு மறுத்துவிட்டார் ஜெயலலிதா.

தி.மு.க. ஆட்சி தொடர வேண்டுமா? அல்லது மீண்டும் ஊழல் ஆட்சி வேண்டுமா? என்ற கோஷத்தைக் கலைஞர் எடுத்து வைத்திருக்கிறார். ஜெயலலிதாவை ஊழல் என்று சொல்லும் தார்மீக உரிமையைக் கலைஞர் இழந்து விட்டார் என்றே நாங்கள் கருதுகிறோம். கடந்த ஐந்தாண்டு காலத்தில் அமைச்சர்கள் அடித்த கொள்ளைகளுக்கு அளவே இல்லை.

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு அமைச்சர் முறைகேடாக மணல்குவாரி மற்றும் கிரானைட் குவாரி மூலம் கோடி கணக்கில் கொள்ளையடித்திருக்கிறார். கொப்பரைத் தேங்காயில் ஒரு டன்னுக்கு ஏழாயிரம் ரூபாயை முழுங்கியிருக்கிறார் அந்த அமைச்சர். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் போல அமைச்சர்கள் அடித்த கொள்ளைகளுக்கு இது ஒன்றே போதும்.



மத்திய மாநில அரசுகளின் தவறான பொருளாதாரக் கொள்கைகளினால் அனைத்துத் தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக உரம், மண்ணெண்ணெய் விலை உயர்வு, கரும்புக்குச் சரியான விலை உயர்வின்மை, இதனால் விவசாயிகளிலிருந்து பொது மக்கள் வரை பாதிப்படைந்துள்ளனர்.

சென்னையைச் சுற்றி இரண்டு கார் தொழிற்சாலைகளை நிறுவிவிட்டு தொழில் வளர்ச்சிப் பற்றி பேசுகிறது தி.மு.க. ஆனால் தமிழகமெங்கும் ஆயிரக்கணக்கான சிறு தொழில்கள் மூடப்பட்டிருக்கின்றன. சென்னையைப் பொறுத்தமட்டில் பாலங்கள் கட்டியதில் நடந்த ஊழல், குப்பை அள்ளுவதைத் தனியாருக்கு விட்டதில் ஊழல் என்று நிறைய கதை இருக்கிறது. இதெல்லாம் விரைவில் வெளிவரும்.

தமிழகம் முழுவதும் தி.மு.க. அரசின் மீது அதிருப்தி அலை வீசுகிறது. கலைஞர் அரசு அந்த அலையின் வேகத்தில் அடித்துச் செல்லப்படுவது உறுதி.

படம்: ராஜன்

"உன் அப்பா ஒரு முழக் கயித்துல தொங்கறதைப் பார்க்கணும்னா – நீ உன் இஷ்டம் போல செய்."

கேசவ் உண்மையிலேயே கையில் ஒரு முழமே உள்ள கயிறை வைத்துக்கொண்டு குதித்தார். கண்டிப்பாய் அந்தக் கயிறு அவரது வெண்கலப் பானை கழுத்துக்கு ஒரு சுற்றுக்குக் கூட வராது என்றாலும், எப்போதுமே அவர் இப்படித்தான்; பெண்டாட்டியையும், பெண்ணையும் பயமுறுத்துவதற்காக ஒரு மணிக்கயிறை நிரந்தரமாக ஸ்டாக் வைத்திருப்பார்.

சுஜா எதற்குப் பயப்படாவிட்டாலும், இது ஒன்றுக்குத்தான் பயப்படுவாள். இது கேசவ்வுக்கும் தெரியும். ஆரம்ப காலத்தில் எல்லாம் கல்பகம், கணவனின் இந்த மிரட்டலுக்குப் பயந்தே அவர் செய்யும் ஒவ்வொரு அநியாயத்துக்கும் ஒத்துப் போய்க் கொண்டிருந்தாள். வாசல் பக்கம் பணம் கொடுத்தவன் வந்து நிற்கிறான். பணத்தைக் கொடுக்காவிட்டால் சத்தம் போட்டு ஊரைக் கூட்டி, மானத்தை வாங்கிவிடுவான். அந்த அவமானத்தைவிட ஒரு முழக் கயிற்றில் தொங்குவதே உத்தமம் என்பார். உடனே இவள் – கழுத்தில், காதில் கிடப்பதை எல்லாம் கழற்றித் தருவாள்.

யாருக்கோ ஜாமீன் கையெழுத்துப் போட்டு விட்டேன். அவன் இப்போ ஊரை விட்டே ஓடிவிட்டான். கோர்ட், கேஸ், அமீனா, ஜப்தி என்பார். அதைவிடவும் காதும் காதும் வைத்தாற்போல, உத்தரத்தில் தொங்கி விடுகிறேன். உன்னை இப்படி நிர்க்கதியாக விட்டு விட்டுப் போவதற்கு மன்னித்துக்கொள் என்று இவள் கையைப் பிடித்துக்கொண்டு 'ஓ'வென அழுவார். உடனே அவள் பிறந்த வீட்டிற்குத் தந்தி அடித்து அண்ணன் தம்பியின் காலைப் பிடித்து ஆயிரக்கணக்கில் பணம் வாங்கி இவர் கையில் கொண்டு வந்து தருவாள்.

கல்பகத்திற்கு இப்போது நினைத்தாலும் எரிச்சல் மண்டுகிறது. சென்னையில் ஈசுவரன் அமைத்துக் கொடுத்த வாழ்க்கையில் எத்தனையோ கௌரவமாய் இருந்திருக்கலாம்... ஆனால் அங்கேயும் ஏதேதோ தகிடுதத்தம் பண்ணிவிட்டு, 'இந்த க்ஷணம் இங்கே இருந்து கிளம்பாவிட்டால் என் கழுத்தில் ஒரு முழக் கயிறு ஏறும். உன் கழுத்தில் இருக்கும் ஒரு முழக் கயிறு இறங்கும்' என்று வசனம் பேசியவர் தான் இவர்.

அப்போதே இவர் எங்கே செத்து கித்து வைப்பாரோ என்கிற பயமெல்லாம் கல்பகத்துக்குப் போய் விட்டது. மனிதர் அத்தனை சுலபத்தில் பிராணனை விட மாட்டார். அப்படியே சுருக்குப் போட்டுக் கொண்



22 இனிமே ஆரம்ப

டாலும் உயிர் போகும்படியாகச் சுருக்கிட்டுக் கொள்ள மாட்டார். அரையும் குறையுமாக எதையாவது செய்து தொலைத்து ஆஸ்பத்திரியில் மூக்கிலும், இன்ன பிற இடங்களிலும் ரப்பர் குழாயைச் செருகிக் கொண்டு படுத்துக் கிடந்தால் அதற்கு வேறு யார் அவதிப்படுவது?

நிஜம்தான். கல்பகத்துக்குத் தற்சமயம் கணவனின் உயிரை விடவும், மகளின் எதிர்காலமே பெரிதாகத் தோன்றுகிறது. அவள்தான் உட்கார்ந்த இடத்தில் இருந்தே கத்தினாள்...

"இதுமாதிரி நான் கல்யாணம் பண்ணிண்ட வருஷத்தில் இருந்து மாசத்துல

அனுராதா ரமணன்



நாலு நாள் சொல்லிவிட்டுத்தான் இருக்கார். அந்தக் கயிறுகூட இருபத்தி மூணு வருஷத்துக்கு முன்னாடி சாந்தி கல்யாண ரூம்லே மெத்தையைச் சுருட்டிக் கட்டின கயிறு தான். மெத்தை எல்லாம் பழசாப் போயி தூக்கிப் போட்டாச்சு. உங்க அப்பா கயிறை இன்னமும் விடலே. இப்ப அவர் இருக்கிற கனத்துக்கு இந்த நைந்து போன கயிறு தாங்குமா? என்பதுகூட சந்தேகம்தான். நானே இதுக்காக கவலைப்படாதப்போ, நீ எதுக்காக பயப்படறே?"

"உன் கழுத்துல அந்த அவிநாசியோட பையன் மூணு முடிச்சுப் போடறதும், இவர் தூக்குப் போட்டுக்கறதும் – இரண்டும் ஒண்ணுதான். புத்திசாலித்தனமா யோசிச்சுப் பார்த்தா முன்னதைவிட பின்னதே பரவாயில்லேன்னு தோணுது."

அவன் இப்படிச் சொல்ல, கேசவ் முகம் சிவக்க, நாக்குழற, உடல் பதற... 'நீயெல்லாம் ஒரு பத்தினியாடி' என்று சாமியாடினார். சுஜா காது களைப் பொத்திக் கொண்டாள். மனசுக்குள் மறுபடியும் மறுபடியும் அஜய் வந்து நின்றான்.

ஐந்து வருடங்களுக்குப் பிறகு அவனைப் பார்க்கிற வாய்ப்பு கிடைத்தும், முழுமையாக அந்தச் சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொள்ள முடியவில்லையே என்கிற தாபம் கழுத்து வரைக்கும் இருந்தது.

முன்பு கல்லூரி மாணவனாக இருந்தபோது 'வெடவெட'வென ஒல்லியாய், உயரமாய் இருந்தான். அப்போதைய இளைஞர்களின் நாகரிகத்திற்கேற்ப கிராப்பைக் கழுத்து வரை படற விட்டிருந்தான். கண்களில் அப்போதே கண்ணாடிதான் என்றாலும், தடித்த அகலமான ஃப்ரேம். அதனூடே மலங்க மலங்க விழிக்கும் கண்கள். கன்னத்தில், மூக்கு நுனியில், அப்போதுதான் அரும்பியிருக்கும் சின்ன சின்னப் பருக்கள்... அவளைப் பார்க்கும்போதெல்லாம் தொண்டையில் கண்டக்காய் ஏறி இறங்கும். சிரிப்பதா? வேண்டாமா? என்கிற தயக்கமும், யாராவது பார்த்து விடப் போகிறார்களே என்கிற அச்சமும் கலந்து, சிறு பிள்ளைத்தனம் மாறாத தோற்றம்.

வயதில் சிறியவனாக இருந்தாலும், சுஜா

ஐந்து வருடத்துக்கு முன்பே சமர்த்தும், சாமர்த்தியமுமாக இருந்ததால், கிண்டலும், கேலியுமாக வளைய வந்தான். ஈசுவரன் தம்பதியர் இருக்கும்போதே பக்கத்திலேயே அஜய்யின் தங்கை அர்ச்சனா கழுகுப் பார்வை பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவள் அவனது பிடறியில் விரலால் 1-4-3 என்று கிறுக்குவான். பிறகு தனிமை கிடைக்கும்போது 1-4-3க்கு என்ன அர்த்தம் என்று குறும்புடன் சொல்லுவான்.

"தெரியுமா தெரியாதா...?"

"இது மாதிரியான வில்லங்கமான சமாச்சாரங்கள் எல்லாம் எனக்குத் தெரியாதுப்பா. நான் ரொம்பவே சமர்த்துப் பையன்."

"ஐயோ பாவம்... வாயில் விரல் வைத்தால்கூட கடிக்கத் தெரியாது. 1-4-3 என்றால் என்ன அர்த்தம்னு சத்தியமா உனக்குத் தெரியாது?"

"தெரியாது... தெரியாது."

"மக்கு... நான் சொல்றேன் கேட்டுக்கோ. 1 for I, 4 for love, 3 for you!"

தான் இப்படிச் சொன்னதும் அவன்- 'I hate you"க்குக் கூட இதே 143தான்' என்று பதிலடி கொடுத்ததும் அன்று முழுக்க அவள் முகம் சிவக்க அழுததும், அவன் அவளைச் சமாதானப்படுத்துவதற்காக கேரம்போர்டில் வேண்டுமென்றே அவளிடம் தோற்றதும், லென்டிங் லைப்ரரியில் இருந்து ஆர்ச்சி புக்ஸ் வாங்கி வந்து, அவள் கண்ணில் படும்படியாக வைத்ததும், அவளது சுருதிப் பெட்டியை ரிப்பேர் செய்வதற்காக எடுத்துக்கொண்டு கச்சேரி ரோடிற்கு ஓடியதும், அடிநாவில் ஒட்டிய மிட்டாய்த் தித்திப்பாய் - இன்னமும் அவளுள்...

நேற்று வந்து போன அஜய் கம்பீரமாய் இருந்தான். மார்பு அகன்று, கன்னத்தில் செழுமையாய்ச் சதை வைத்து, ரீம்லெஸ் மூக்குக் கண்ணாடியின் வழியே ஒளிர்ந்த விழிகளில் காதல் மினுக்க நின்றிருந்த தோற்றம்.

முழுசாய் மனசுக்குள் பதியாமல்... இல்லை, இல்லை... பதிய விடாமல் அவினாசியும், அவரது தறுதலைப் பிள்ளையும் வந்து உட்கார்ந்திருந்தது தாங்க முடியாத எரிச்சலாய்..

அவர்கள் போகும் வரையில் காத்திருந்த சுஜா, அப்பாவிடம் அழுத்தம் திருத்தமாய்ச் சொன்னாள்...

"அப்பா அஜய்யைக் கல்யாணம் செஞ்சுக்கறது உங்களுக்குப் பிடிக்கலேன்னா - விடுங்க... நான் செஞ்சுக்கலே. ஆனா அதுக்காக இந்தக் குடிகாரனை எல்லாம் நான் புருஷனா ஏத்துக்க முடியாது. பணத்துக்காக என் வாழ்க்கையை அடமானம் வைக்க நான் தயாரா இல்லை. வேணுமானால் ஃபாரினுக்குப் போய்ச் சம்பாதித்து உங்க கடனை அடைக்கிறேன். அவ்வளவுதான் என்னால சொல்ல முடியும். அநாவசியமா நீங்களும் டென்ஷனாகி, என்னையும் சித்திரவதை பண்ணாதீங்க."

சுஜாவின் பதில் கேசவ்வின் மீது அக்னி திராவகத்தை வீசியதைப் போல இருந்தாலும், கல்பகத்துக்குத் திருப்தியாக இருந்தது.

'பரவாயில்லை... மகள் பிழைத்துக் கொள்வாள்.'

அழுதுகொண்டே அலுவலகத்துக்கு வந்த சுஜாவுக்கு உள்ளூர கொஞ்ச ஏக்கம்.

'இத்தனைக்குப் பிறகும், ஊருக்குப் போன அஜய் தன்னைத் தொலைபேசியிலோ, வழக்கமான ஈமெயிலிலோ தொடர்பு கொள்வானோ' என்பதுதான் அது...

அவள் தனது மெயில் பாக்ஸைத் திறக்க- அதில் அவளுக்காக ஒரு செய்தி காத்திருக்கிறது.

ஆனால் அதைக் கொடுத்தது அஜய் அல்ல.

- தொடரும்



"முனுசாமியைப் பிரசார பீரங்கின்னு அழைக்காதீங்க!"

"ஏன்?"

"பீரங்கிக்கு ஸ்பேர்பார்ட்ஸ் மாத்தணும்.. சர்விஸுக்கு விடணும்னு சொல்லி பத்தாயிரம் கறந்துட்டுப் போயிட்டார்!"

— அம்பை தேவா

அழைக்கிறது அமெரிக்கா!

கல்கி - டயானா வொர்ல்ட் டிராவல் இணைந்து வழங்கும்

குவிஸ் போட்டி—20

இந்த வார பதில்கள் அறிவியல் சம்பந்தப்பட்டவை. சிந்தித்து கூப்பனில் பூர்த்தி செய்து முந்தைய வாரங்களில் செய்ததைப் போலவே மற்ற கூப்பன்களோடு பூட்டி வையுங்கள். இருபத்தி ஆறு வார இறுதியில் எல்லா கூப்பன்களையும் எங்களுக்கு அனுப்புங்கள். இதில் மிக அதிகமான கேள்விகளுக்குச் சரியான பதில் எழுதும் ஒரு நபருக்கு

அமெரிக்கப் பயணம் பரிசு!

ஐரோப்பா பயணம் இரண்டாவது பரிசு!

மலேஷியா—சிங்கப்பூர் பயணம் மூன்றாவது பரிசு!

இந்த மூன்று நிலைகளிலும் ஒருவருக்கு மேல் சரியான பதிலை எழுதியிருந்தால் இருக்கவே இருக்கிறது குலுக்கல் முறை! பயணப் பரிசு பெறாதவர்களுக்கு அமரர் கல்கியின் நூல்கள் உண்டு.

ஆசிரியர் தீர்ப்புதான் இறுதி!

குவிஸ் கூப்பன்—20

1) ரத்தத்தில் மிக அதிகம் உள்ளது சிவப்பு அணுக்களா அல்லது வெள்ளை அணுக்களா?

2) 'போபால் விஷவாயு' என்பது எது– மீதையல் ஐஸோசயனேட்டா அல்லது பொட்டாஷியம் ஐஸோசையனைடா?

3) எவர்சில்வரில் உள்ள ஒரு உலோகம் குரோமியமா அல்லது நிக்கலா?

4) காற்றில் அதிகம் கலந்திருப்பது ஆக்ஸிஜனா அல்லது நைட்ரஜனா?

5) எது கலக்கப்பட்ட உப்பு பரிந்துரைக்கப்படுகிறது—அயோடினா அல்லது புளூரைடா?

6) ஓசோன் என்பது அடிப்படையில் என்ன ஆக்ஸிஜனா அல்லது ஹைட்ரஜனா?

விடைகள்:

1)..

2)..

3)..

4)..

5)..

6)..



I CHOOSE A CAREER? CAREER CHOOSES ME? ✓The right answer!

Cover Feature

THE SPIRIT OF FRIENDSHIP

True Story

WHY DOES HAIR TURN GREY?

Hello Doctor



A MONK WHO INSPIRED THE WORLD

Personality

+

ALL REGULAR FEATURES

Poster : Steve Waugh



GOKULAM

The monthly magazine for children

APRIL 2001

Rs.6/-

47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai-600 097

"கலைஞர் என்கிற ரிங் மாஸ்டர்!"

"தேசிய ஜனநாயக முன்னணியில் இணைந்துவிட்ட 'தமிழர் பூமி' கட்சித் தலைவரான கு.ப. கிருஷ்ணன் மீதுள்ள சொத்துச் சேர்ப்பு வழக்கு விசாரிக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டு இருக்கிறது. ஆனால் என் மீதுள்ள வழக்கு விசாரணை மட்டும் வேகமாக நடக்கிறது..." என்று சமீபத்தில் அறிக்கை விட்டிருந்தார் ஜெயலலிதா. கு.ப. கிருஷ்ணன் என்ன சொல்கிறார்?

தேசிய ஜனநாயக கூட்டணியில் எங்களுடைய 'தமிழர் பூமி'யும் இருப்பதால் அவருக்கு ஆத்திரம் கண்ணை மறைக்கிறது. சேற்றை வாரி வீசுகிறார். ஆனால் உண்மை நிலையை நான் சொல்கிறேன். ஜெயலலிதாவின் அமைச்சரவையில் ஐந்தாண்டு காலம் அமைச்சராக இருந்தவன் நான். என் துறையைப் பற்றிய எந்த வழக்கும் இல்லை. வருமானத்துக்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்ததாக என் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இன்னமும் புலன்விசாரணை முடியாத நிலையில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவில்லை.



அது சரி... என் மீது மட்டும்தான் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லையா? முந்நாள் அமைச்சர்கள் முத்துசாமி, செங்கோட்டையன், வாரன்ஸ், சின்னசாமி, செல்வகணபதி மற்றும் அ.தி.மு.க முந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஏழு பேர் மீதும் வழக்குதான் பதிவு செய்யப்பட்டிருக்கிறதே தவிர குற்றப்பத்திரிகைத் தாக்கல் செய்யப்படவில்லை. அதற்கெல்லாம் என்ன சொல்கிறார் ஜெயலலிதா? இவர் மீதே இன்னமும் மூன்று வழக்குகளில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லையே. அதை விரைவு படுத்தச் சொல்வாரா?

ஐந்து வருட காலம் ஜெயலலிதாவுடன் இருந்த நீங்கள் அவரைப் பற்றி ஊழல் புகார்கள் சொன்னால் எடுபடுமா?

"கூடவே இருந்து நான் பார்த்ததைச் சொன்னால் நம்பித்தான் ஆகணும். தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேச மாட்டேன். ஆனால் அரசு இயந்திரத்தையே சுற்ற விடாமல் இருந்த முட்டுக் கட்டைகளைப் பற்றி எடுத்துச் சொல்வேன். ஒரு சின்ன உதாரணம். சமீபத்தில் சென்னையில் பத்து பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. மதிப்பீடு தொகை தொண்ணூறு கோடி ரூபாய் என்றால் உண்மையான செலவு அறுபத்து ஆறு கோடிதான். எனவே சேமிப்பு முப்பது கோடி. ஆனால் ஜெயலலிதா ஆண்ட ஐந்தாண்டு காலத்தில் திட்டச் செலவுகளையும், உண்மையான செலவுகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் என்ன நடந்தது என்று பளிச்சென்று தெரியும்.

'கலைஞரை எம்.ஜி.ஆரின் எந்த உண்மையான தொண்டனும் ஏற்றுக் கொள்ள மாட்டான் என்று அ.இ.அ.தி.மு.க.வில் பொதுவாகச் சொல்வார்கள்...''


"எவரால் இந்த மக்களுக்கும் நாட்டுக்கும் சுபிட்சம் ஏற்பட்டிருக்கிறதோ அவரோடு இருப்பதில் தவறில்லை. எம்.ஜி.ஆர். இருந்த வரையில் அவர் வைத்த தேர்தல் கூட்டணி நாட்டு நன்மையை அடிப்படையாகக் கொண்டது. அந்த அடிப்படையில்தான் நல்லது செய்யும் கலைஞர் என்கிற ரிங் மாஸ்டரின் தலைமையிலான கூட்டணியில் இணைந்துள்ளோம்.

— ப்ரியன்

படம்: ராஜன்

நடக்குமென்பார் நடக்கும்!

மேஷம் :



தொகுதிப் பங்கீட்டில் திடீர் ஏற்றம் கிடைத்த கட்சி போல, இந்த வாரம் முழுக்க உங்களுக்குத் திடீர் அதிர்ஷ்டங்கள் நிறையவே நடக்கப் போகுது. அரசு விவகாரங்களில் அளவோடு அனுகூலம் ஏற்படும். தெய்வீகப் பணிகளில் ஈடுபாடு அதிகமாகி, ஞானப் பழமாகி விடுவீர்கள். பணவரவு, பொருள் வரவு, இப்படி எல்லாமே அட்ரா சக்கைதான்.

ரிஷபம் :



'இளைஞர்களுக்குத்தான் வாய்ப்பு' என்று கலைஞர் போல வெளிப்படையாகச் சொல்லி விடலாம். ரிஷப ராசிக்கார இளைஞர்களுக்கு நல்லதொரு முன்னேற்றம் 'பளிச்'னு தெரியுதுங்க. படிப்பு, வியாபாரம், எல்லாத்திலும் 'கிடுகிடு' வளர்ச்சி நிச்சயம். பெரியவங்க ஆலோசனைப்படி பொறுமையா நடந்துக்கிட்டீங்கன்னா, 'அண்ணன் இங்குதான்'னு வலம் வரலாம்.

மிதுனம் :



எல்லாக் கட்சிகளுமே பலவீனமாக இருக்கும் புதுவைத் தேர்தல் களம் போல, உங்கள் ராசியிலும் சில கிரகங்கள் மனக் கிலேசத்தை உண்டாக்குது. வீண் அலைச்சல் ஏற்படும். ஆரோக்கியம் அம்பேல் ஆகும். கணவன் - மனைவிக்குள் சிறு சிறு சலசலப்பு இருக்கும். புதிய முயற்சிகள் எதுவும் இப்போதைக்கு வேணாம். தெய்வப் பிரார்த்தனையில் ஈடுபடுங்க. அம்மன் அருள் கிடைக்கும்.

கடகம் :



குழாயைத் திறந்ததும் 'புஸ்'னு காத்து வராம, 'கடகட'ன்னு தண்ணி கொட்டினா, எவ்வளவு சந்தோஷமாயிருக்குமோ அது மாதிரி, இந்த வாரம் முழுக்க மன மகிழ்ச்சி நிலவுதுங்க. பேச்சுல சாமர்த்தியம், உத்தியோகத்துல உயர்வு, மக்களால அனுகூலம்னு ஜமாய்ப்பீங்க. எதிரிகளெல்லாம் ஊழல்ல மாட்டின மந்திரிங்க மாதிரி காணாமப் போயிடுவாங்க. நிறைய தானம் பண்ணுங்க. ஆஞ்சநேயர் துணை நிற்பார்.

சிம்மம் :




இந்த வாரம் உங்களுக்குக் கொஞ்சம் கூடுதல் டென்ஷன்தான்னு, கிரக சஞ்சாரம் சொல்லுது. பகீரதப் பிரயத்தனம் செய்து 47 சீட்டு வாங்கிவிட்ட மூப்பனார் பட்ட டென்ஷனைவிட மோசமானது இல்லைதான். அதனால கவலைப்பட வேண்டாம். மனை, வீடு, நிலம், வாகனம் நல்ல ராசி கொண்டு வரும். உழைப்புக்கும், திறமைக்கும் பிரமாதமான பலன் கிடைக்கும். உடல் நலத்துலயும் கொஞ்சம் கவனம் வைச்சா காரியம் ஜெயிக்கும்.

கன்னி :



எதிரெதிர் துருவங்களாக இருந்த காங்கிரஸையும், பா.ம.க.வையும் ஒரே கூட்டணியில் இணைத்த மேடத்தின் சாமர்த்தியம் போலவே, உங்களுக்கும் சாமர்த்தியம் ஏற்படும். திறமை, அறிவாற்றல், புத்திசாலித்தனம் வெளிப்படும். கோர்ட்டு, கேஸ்களில் வெற்றி நிச்சயம். சிலருக்குத் திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் தாமாக வந்து ஆஜராகும். ரியல் எஸ்டேட் ஆதாயம் கிடைக்கும். ஆனா கூட்டுத் தொழில் செய்யாதீங்க. அது உதவாது.

துலாம் :



அடையாள அட்டையை வாங்கி விட்ட வாக்காளர் போல, தாவி தாவிக் குதிப்பீங்க. போட்ட திட்டமெல்லாம் சக்சஸ் ஆகும். நினைச்சதெல்லாம் லட்டாட்டம் நிறை

வேறும். விஞ்ஞானம், வியாபாரம், எழுத்து துறையில இருக்கறவங்களுக்கு உயர்வு கிடைக்கப் போகுது. ஆனா பொருளாதாரம் கொஞ்சம் படுத்தும். விரலுக்கேத்த வீக்கத்தோட இருந்திங்கன்னா, பணத் தட்டுப்பாடு வராது. கிரக வழிபாடு நலம் தரும்.

விருச்சிகம் :



இது நாள் வரைக்கும் 'காஸ்ட் அவே' கதாநாயகன் போல கவலைத் தீவுல தனியா மாட்டிக் கிட்டிருந்தீங்க. இனிமே உங்களுக்கு நிரந்தரமான விடுதலைதான். உடம்பு ஆரோக்கியம் வலுப்படும். அந்தஸ்து, கௌரவம் 'கிடுகிடு'னு உயரும். இருக்கப்பட்டவங்க தேடி வந்து உதவுவாங்க. பதவி உயர்வு கிடைக்கும். கணவன்-மனைவி உறவு திருப்தியா இருக்கும். சுபகாரியம்கூட நடக்கப் போகுதே. அப்புறம் என்ன? மஜாதான்.




தனுசு ராசிக்காரரான நடிகை கோவை சரளாவுக்கு வெளி நாட்டில் இருந்து நல்ல செய்தி வரப் போகுதாம்!

அக்னிசர்மா பக்கம்

மார்ச் 21 முதல் 27 வரை

தனுசு :



ஃபாரின் டீ.வி. சானல்களுக்கு எல்லாம் இந்தியாவில் தடை வரப் போகுதோ இல்லியோ, உங்களுடைய முன்னேற்றத்துக்கு எந்தத் தடையும் வரப் போறதில்ல. வெளிநாட்டுல இருந்து நல்ல செய்தி வரப் போகுது. அரசுப் பணியாளர்களின் கெட் அப்பே மாறிப் போகும். கறுப்பு நிறம் ராசியானது. மறக்காம பயன்படுத்துங்க. பயணத்துல கொஞ்சம் உஷாரா இருக்கறது நல்லது. நிதானமா வண்டி ஓட்டினா, பிரச்னை வராதே.

மகரம் :




சத்துணவுத் திட்டத்துல இனி பாலும் தரப்படும்னு சொல்லிக் கிறாங்களே, அதுமாதிரி உங்க வயிற்றிலும் பால் வார்க்கிற செய்தி விரைவில் வரப் போகுது. திருமணம், மகப்பேறு, உயர் படிப்புனு சுபிட்சமா இருக்கப் போகுது எதிர்காலம். தொழில்ல அனுகூலம். அதனால கை நிறைய கரன்ஸி புரளும். செயல் வேகம் உண்டாகும். எண்ணங்கள் எல்லாமே நிறைவேறும். ஜாலிதான் ஜமாயுங்க.

கும்பம் :



'எப்படா நல்ல காலம் வரும்'னு காத்திருந்தீங்க. இப்ப உங்க ஜாதகத்துல செவ்வாய், கேது கிரகங்களின் சஞ்சாரம் ரொம்ப டாப்பா இருக்கு. அதையே கோடீஸ்வரன் முத்திரையா பயன்படுத்தி, தவறான விஷயங்களை நீக்கிவிட்டு, நல்ல பலனா ஏற்படுத்திக்குங்க. ஆல் தி பெஸ்ட்! விளையாட்டு, போட்டி, ரேஸ், லாட்டரி, விஷயங்களில் திடீர் அதிர்ஷ்டம் வரும். மக்கள் நலனில் கவனமா இருங்க. பிரச்னை வரும். கோயில், குளம்னு பக்தியா இருந்துட்டா சமாளிச்சிடலாம்.

மீனம் :



குபேரச்சையாய் நின்றுவிட்டு, டெபாஸிட் தேறுமா என்று கையைப் பிசையும் வேட்பாளர் போல, உங்கள் மனத்திலும் சஞ்சலமும், குழப்பமும் பாடாய்ப்படுத்தும். அமைதி குறையும். தேக ஆரோக்கியம் 'பெப்பே' காட்டும். ஆனால் திருவாளர் சனி பகவான் உங்களுடன் நல்ல விதமாகக் கை குலுக்குவதால், உழைப்புத் திறமை வீண் போகாது. பிரச்னைகளைச் சமாளிக்கும் ஆற்றல் கொடுத்துக் காப்பாற்றுவார். தெய்வ தரிசனம் நன்மை தரும்.



என் புருஷன் குழந்தை மாதிரி

மாமன் மகளையே நினைத்து, கிராமத்தில் கனவு கண்டு கொண்டிருக்கும் லிவிங்ஸ்டனை, பட்டணத்தில் படித்துவிட்டு ஊர்திரும்பும், லட்சத்துப் பத்தாவது தமிழ் ஹீரோயின், தேவயானி கல்யாணம் செய்து கொள்கிறாள்.

கரகாட்டம் ஆட வரும் விந்தியாவுடன், குடிபோதையில் குடித்தனம் நடத்திவிடும் லிவிங்ஸ்டன், இந்த ரகசியத்தை முதலிரவன்று, பெருந்தன்மையோடு மனைவியிடம் சொல்ல, உடன் 'டூ'விட்டு விடுகிறார் தேவயானி. பிறகு போனால் போகிறது என்று லிவிங்ஸ்டனுக்கு மறுவாழ்வு தர, லிவிங்ஸ்டன் அவர் பங்கிற்கு விந்தியாவிற்கு மறுவாழ்வு தருகிறார். இது தேவயானிக்குத் தெரியவருகிறபோது, மத்தளத்திற்கு இருபக்கமும் இடி என்கிற மாதிரி ஆகிப் போகிறது லிவிங்ஸ்டனின் வாழ்க்கை.

அப்புறமென்ன. கடைசியில் விந்தியா உயிர்த்தியாகம் செய்து, தம்பதியின் ரூட்டை க்ளியர் செய்து விடுகிறார்.

படிக்காத கிராமத்து மனிதராக வரும் லிவிங்ஸ்டன், தேவயானியின் காதலுக்காக ஏங்கி, விந்தியாவை விட முடியாமல் தவித்து, கனகச்சிதமாகப் பொருந்தியிருக்கிறார்.

வழக்கம்போல முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு நடிக்கும் கடுகடு கதாபாத்திரத்தில் ஸ்டீரியோ தேவயானி.

படத்தின் டைடில் தாய்க்குலத்துக்காகவே வைக்கப்பட்ட கண்ணீர்த் திலகம்! தாய்க்குலம் முந்தானை முழுவதையும் கண்ணீரால் நனைத்து எடுத்துப் போகும் அளவுக்கு 'அய்யோ பாவம்' என்று எல்லோரது பரிதாபத்தையும் அள்ளிக் கொள்கிறா விந்தியா.

போதாதென்று, பாகப் பிரிவினை தகராறி பூட்டிக்கிடக்கும் பங்களா, தகப்பனார் உடலுக்குக் கொள்ளி வைப்பதில் நடக்கும் பங்காளிச் சண்டை, மலையுச்சியில் தொங்கிய படி உயிருக்குப் போராடும் வில்லனைக் காப் பாற்றும் ஹீரோ... அத்தனை அதிரண அயிட் டங்களும் படத்தில் உண்டு!

இதையெல்லாம் தாண்டி, வணக்கம் போடு றெவரை நீங்கள் இருந்து படத்தைப் பார்த்து விட்டுத்தான் போகவேண்டும் என நம்மை உட்காரவைத்து விடுவது வடிவேலுவின் வி மில்லாத நகைச்சுவை மட்டுமே.

— விஷுவல்தாச

● ஜஸ்ட் பாஸ்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623;
Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)



ஸ்ரீ பங்காரு காமாக்ஷி அம்மன்

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2000 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 57 * Registered as a Newspaper in Srilanka

